கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



"சன் டீ.வி. தேவையில்லை!"

KALKI • 21.12.2008 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



சீஸன் ஸ்பெஷல்


DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL
Dr. T.G. Govindarajan
President -Founder -
Medical Director
தமிழகத்தில் இதுவே முதல் முறை
டாக்டர் காமாட்சி நினைவு மருத்துவமனை
கேன்சர் இன்ஸ்டிடியூட் (WIA) - உடன்
இணைந்து பெருமையுடன் அறிமுகம் செய்துள்ளது
தமிழ்நாட்டின் முதல் PET-CT
Discovery VCT64 SLICE PET-CT SCAN
Installed at CANCER INSTITUTE (WIA)
- Canal Bank Road Gandhi Nagar, Adyar
Chennai - 20
Cell : 93814 36899
93814 36896
10% Special Discount On Sunday for Master & Executive Health Check-up
தமிழ் நாட்டில் முதல் PET CT Scan
இந்தியாவில் 4, 5 இடங்களில் மட்டுமே உள்ள இந்த ஸ்கேனிங் கருவியின் சிறப்பம்சங்கள்:
• கேன்சரை அறிகிறது. • கேன்சர் பரவியுள்ள மற்றும் முற்றியுள்ள நிலவரத்தை அறிகிறது. • கேன்சர் சிகிச்சைகான மருத்துவ திட்டமிடலுக்கு உதவுகிறது. • சிகிச்சைக்குபின் கேன்சர் மீண்டும் தோன்றுவதை அறிகிறது. • இதய தசைகளுக்கான இரத்த ஓட்டத்தை அறிகிறது. • மாரடைப்பு இதயத் தசைகளின் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் விளைவுகளை அறிகிறது. • ஆஞ்சியோபிளாஸ்டி மற்றும் கரோனரி ஆர்டெரி பைபாஸ் சர்ஜரிகளின் மூலம் குணப்படுத்த இயலும் இதயத்தின் தசைப்பகுதிகளை அறிகிறது. (மையோ கார்டியல் பெரிஃபியூசன் ஸ்கேன் உதவியுடன்). • மனக்குழப்பம், நினைவிழத்தல், டியூமர் முதலான மூளையின் சீரற்ற தன்மையைக் கணிப்பதுடன் மத்திய நரம்புத் தொகுப்பில் உள்ள பாதிப்புகளையும் அறிகிறது. • நோயாளியின் மூளை மற்றும் இதயத்தின் செயல்பாடுகளை இயல்பான மனிதனோடு ஒப்பிட்டு பார்க்க உதவுகிறது.
DR. KAMAKSHI MEMORIAL HOSPITAL - SPECIALITIES AT A GLANCE
• Intensive Care Unit Cardiology & Cardio Thoracic Surgery • Neurology & Neuro Surgery • Trauma Care & Orthopaedics • Obstetrics & Gynaecology • ENT Surgery • Dermato Cosmetology • Pulmonology • Dentistry and Oral & Maxillofacial Surgery • Paediatrics • Gastroenterology • Transplant Surgery • Oncology • Transfusion Medicine • Nephrology • Urology • Vascular Surgery
இலவச ஆலோசனைக்கு: எஸ்.சுபாஷிணி - 93451 20265, 93810 30712
#1, Radial Road, Pallikaranai, Chennai - 600 100.
Tel : +91-44-22469200 (30 Lines), 66300300 (30 Lines), Fax : 22463282
E-mail : info@drkamakshimemorialhospital.org
Website : www.drkamakshimemorialhospital.org

தேர்தல் காலண்டர் 2009 கார்ட்டூன் விவரம் உள்ளதாகவும், அருமையாகவும் இருந்தது. - **வி.ஜி. சத்திய நாராயணன், சென்னை-61.**

'எல்லாம் அவன் செயல்' - விமரிசனம் கன கச்சிதம்! - **எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.**

ஃபாஷன் ஜோசியம் கலக்கல். நட்சத்திரங்களுக்கு உரிய கலர்களையும் கூறியிருந்தால் மேலும் கலர்ஃபுல்லாக இருந்திருக்கும்.

- என். சித்தாலட்சுமி, சென்னை-40.

கல்கியின் 'ஹாஸ்ய விபத்து' படித்தலில் புன்னகை பெருநகையாகி, ஹாஸ்ய நடனமே ஆடிவிட்டேன்.

- எஸ்.வெங்கடரமணன், சென்னை

மும்பை தீவிரவாத தாக்குதல்களில், மீடியாவின் சுயநலப் போக்கான பங்கினை தலையங்கத்தில் சாடியவிதம் பாராட்டத்தக்கது.

- த. சத்தியநாராயணன், அயன்புரம்.

பயத்தம் மாவைப் பூசிக் குளிக்கும் பண்டைய மரபைத் துறந்த பாவத்தின் சம்பளமோ, பவுடரின் அபாயம்!

- அ.யாழினி பர்வதம், சென்னை - 78.

மழைச் சனியன்

'காபி நாராயணி' ஸ்கிட் படித்து டிசம்பர் சீஸனில் செம்மங்குடி மற்றும் மதுரை மணி கச்சேரியைக் கேட்டது போல மகிழ்ந்தேன்.

- பி.ஆர். நாகராஜன், பொள்ளாச்சி.

தமிழச்சி தங்கபாண்டியனின் மழைச் சனியன், என் உள்ளத்தை நனைத்து உவகை வெள்ளத்தில் ஆழ்த்தியது.

- பி.என்.ரமாதேவி, சென்னை-83.

வட்ட மேஜை

இளைஞர் கடமையினை இதமாக இனிப்பு மருந்து தடவி அளித்தது சுவாமிகளின் அருள்வாக்கு.

- வி.ஆனந்தி கிருஷ்ணன், சென்னை -101.

மங்கலப் பொருளாக தாலிக் கயிறைத் தயாரிப்பதற்கு என்றே ஒரு கிராமமா?! ஆச்சரியம், ஆனால், மகிழ்ச்சி.

- ஆர். பிருந்தா இரமணி, மதுரை.

இசை விமர்சனம்

சுருதி சாகரின் சுநாதம்!

இன்றைய விதிப்படி மேடையில் 'சிறுசு'களும், அரங்கத்தில் 'பெரிசு'களும் தான் இருந்தன.

இருந்தாலும், சுருதி சாகர் வழங்கிய சங்கீதம் தரம் வாய்ந்ததாக இருந்தது. இத்தனைக்கும் சாகரிடம் பல குழல் வித்வான்களிடம் இருப்பது போல் வெவ்வேறு நீளங்களில் குழல்கள் இல்லை. ஒன்றே ஒன்றுதான்; அதிலிருந்து அவர் மிக உயர்வான சங்கீதத்தைப் பெருகவிட்டது நம்பிக்கையுடன் மகிழ்ச்சியும் அளித்தது. பொதுவாக, புல்லாங்குழல் கச்சேரிகளில், குறிப்பாக ராக ஆலாபனைகளிலும் ஸ்வரங்களிலும் உருட்டல், புரட்டல் ஆக்கிரமிக்கும். ஆனால், அந்த வித்தையை சாகர் மிகக் குறைவாகவே உபயோகித்தார். கேதார ராக ஆலாபனையும், அதைத் தொடர்ந்து வந்த தியாகராஜரின் 'ராமா நீபை தனகு'வும், 'தியாகராஜ¬னிஹ்ருதய' என்ற வரியில் உறவாடிய ஸ்வரப்ரஸ்தாரங்களும் அளவோடும், அழகோடும் மிளிர்ந்தன.

சாகர் பின்னால் விரிவாகக் கையாண்ட சாவேரியில் ஆழமான கார்வைகளும், அழுத்தமான அகாரங்களும், ராகத்தின் சிறப்பை மெருகேற்றிக் காட்டின. அந்த ஆலாபனைக்கு மகுடம் வைத்தது போல் சியாமாசாஸ்திரியின் 'துருஸ¬க க்ருபஜ¬சி'யை, சாகர் தேர்வு செய்தது இன்னும் ஒரு சிறப்பு. எல்லாப் பாடகர்களையும் போல் 'பரம பாவனிக்ரு பாவனி' என்ற இடத்தில் நிரவல், ஸ்வரங்களை வாசிப்பதற்குப் பதிலாக 'நாராயணி ச்யாமக்ருஷ்ண நுதன' என்ற சரணத்தில் நிரவல்- ஸ்வரங்கள் சேர்த்தார் சாகர்.

வாத்திய இசைக் கலைஞர்கள் சில பல வித்தைகள் செய்துகாட்டாவிடில் ரசிகர்கள் அவ்வளவாகச் சிலாகிக்க மாட்டார்கள். எனவே, ஸ்வரங்களின் நடைகளை வித்யாசப்படுத்தி வயலின் வாசித்த ராகுலுடனும், மிருதங்கம் ஸ்ரீவத்ஸனுடனும் சேர்ந்து சில விந்தைகள் - வித்தைகள் செய்து கைத்தட்டல் வாங்கினார் சுருதி சாகர்! கீர்த்தனையின் இரைஞ்சுதல் பாவத்துடன் இந்தத் 'தாண்டிக் குதி' ஆட்டம் ஒட்டுகிறதா? சுருதிசாகர் யோசிக்கட்டும்.

எம்.சந்திரசேகரின் மாணவரான ராகுலின் வயலின் வாசிப்பில் அழுத்தமும்,



தெளிவும் இருந்தன. சுருதி சாகரின் கற்பனைக்கு ஏற்ற, பொறுப்பான பதில்கள் ராகுலிடமிருந்து வந்தன. ஸ்ரீவத்ஸனின் ம்ருதங்க வாசிப்பு அமரிக்கையாகவும், அனுசரணையாகவும் அமைந்திருந்தது குறிப்பிடப்பட வேண்டிய அம்சம்.

எல்லாம் சரிதான்; வாய்ப்பாட்டுக்கும்,



வாத்திய இசைக்கும் ஒரு முக்கியமான மிகப் பெரிய வேற்றுமை இருக்கிறது; வார்த்தைகள், அதாவது சாஹித்யம். பிரபலமான கிருதிகளை வாத்திய இசையில் அடையாளம் கண்டுகொள்வதில் பிரச்னையில்லை. அபூர்வமாக கச்சேரிகளில் தலை காட்டும் பாடல்களைக் கண்டுகொள்வது எப்படி? ஆரம்பித்த மோகன வர்ணத்தையும், கடைசியில் வந்த 'கருணைத் தெய்வமே கற்பகமே'வையும் தவிர இடைச்செருகல்களாக வந்த கிருதிகள் சராசரி ரசிகனுக்குப் பரிச்சயமில்லாதவை.

ஸ்ரீராகத்தைக் கோடி காட்டிவிட்டு கருதி சாகர் எடுத்த பாட்டைக் கேட்டதும், எனக்கு அருகில் இருந்த சற்று விஷயம் தெரிந்தவர் போலிருந்த ஒருவரிடம் 'என்ன கிருதி?' என்றேன். அவரும் சற்று நேரம் யோசித்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார். அடுத்து சாவகாசமாக வந்த தேவகாந்தாரி ராகப் பாடலுக்கும் அவர் பதில் அதே! அப்புறம் விசாரித்ததில் ஸ்ரீராகப் பாடல் சியாமாசாஸ்திரியின் 'கருணஜூடெ நின்னு'வும், தேவகாந்தாரி க்ருதி தீட்சிதரின் 'க்ஷிதிஜாரமணம்' என்றும் தெரிந்துகொண்டோம். வாத்திய கலைஞர்கள், ரசிகர்களுக்கு குவிஸ் வைக்காமல் முன்னதாகவே அறிவித்துவிட்டு வாசித்தால் என்ன?

இன்னொரு முக்கியமான சமாச்சாரம். எல்லா இசைக் கருவிகளுக்கும் ஒலிப்பெருக்கி அமைப்பது ஒரே மாதிரியான வேலையில்லை. குழல் இசைக்குக் கூர்மை அதிகம். மிகையான ஒலியேற்றம் பகையாகிப் போகும்; மேல்ஸ்தாயி சஞ்சாரங்கள் காதுகளுக்கு இதமாக இல்லாமல், பதம்பார்க்கும் அபாயம் நிகழும்; நிகழ்ந்தது. ஓசைகளையே இசையாக்கத் தெரிந்த நாம், இசையை வெறும் ஓசையாக்கும் தவறை ஏன் செய்கிறோம்? கலைஞர்களுடன் அமைப்பாளர்களும் (இந்தக் கச்சேரியில் பாரதக் கலாச்சார்) சேர்ந்து மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தம் இது!

- தேவவிரதன்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர் : **கதிர்பாரதி**

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன், பா.கோபால்

தொலைபேசி :
044 - 4343 8888 (30 lines)

தொலைநகல் : **044 - 4343 8899**

மின்னஞ்சல் - ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com

பிற தகவல்கள் :
info@kalkiweekly.com

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் - உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 500/-
ஆறு மாதம் : ரூ. 270/-

வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 3,800/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

'கலகல' காங்கிரஸ்...

✱ தமிழருவி மணியன்



ஐந்து மாநிலங்களுள் மூன்றில் காங்கிரஸ் வெற்றிபெற்றிருப்பது, ஆட்சியின் செயல்பாடுகளைப் பார்த்து மக்கள் வாக்களிக்கிறார்கள் என்பதைப் பளிச்செனக் காட்டுகிறது. அந்த அடிப்படையில், ''வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொண்டு வரும் தி.மு.க. அரசின் சாதனைகளை அங்கீகரிக்கும் விதத்தில் வரும் பாராளுமன்றத் தேர்தலில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணிக்கே மக்கள் வாக்களிப்பார்கள்'' என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் முதல்வர் கருணாநிதி. இந்த மாநிலத் தேர்தல்களின் முடிவு, எப்படிப்பட்ட தாக்கத்தை பாராளுமன்றத் தேர்தலில் ஏற்படுத்தும் என்பது விவாதத்துக்குரிய ஒரு விஷயமாக மாறிவிட்டது. இது, பாராளுமன்றத் தேர்தல் முடிவு தெரியும்வரை ஓயாது என்பது மட்டும் நிச்சயம். 2004 பாராளுமன்றத் தேர்தலுக்கு, சில மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற இந்த மாநிலத் தேர்தல்களில் பெரும்பான்மையான மாநிலங்களில், பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. உற்சாகத்தின் எல்லைக்குப் போன பா.ஜ.க. 'மத்தியில் அடுத்தும் எங்கள் ஆட்சிதான் தொடரும்' என்று கனவில் மிதந்தது. ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் கவிழ்ந்துபோனார்கள். இப்போது காங்கிரஸ் அதே நம்பிக்கையோடும் உற்சாகத்தோடும் தேர்தலை எதிர்நோக்கி நிற்கிறது.

''கடலில் மூழ்கிக்கொண்டிருப்பவனுக்கு ஒரு கட்டை கிடைத்தால்கூட 'உயிர் பிழைத்தோமே' என்று அகமகிழ்வான். அந்த மனநிலையில்தான் காங்கிரஸாரும் இருக்கிறார்கள் என்று சொல்லலாம். வடகிழக்கு மாநிலமான மிசோராமை விட்டுவிட்டுப் பார்த்தால் இரண்டு விஷயங்கள் பளிச்செனத் தெரிகின்றன.

1. பயங்கரவாதப் பிரச்னையை மக்கள், கட்சி அரசியலாகப் பார்க்காமல் தேசியப் பிரச்னையாகப் பார்க்கிறார்கள்.

2. காங்கிரஸோ, பா.ஜ.க.வோ வலுவான மாநிலக் கட்சிகளோடு கூட்டணி அமைத்தால் மட்டுமே மத்தியில் ஆட்சி அமைக்கமுடியும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி வெற்றிக் கனியைப் பெறுவதற்கு, மிக கடுமையாகப் போராட வேண்டியிருக்கும். மாநிலத்தின் பல பகுதியில் இருக்கும் மக்களின் நாடித் துடிப்பை அறிந்தேதான் இதைச் சொல்கிறேன்'' என்கிறார் தமிழருவி மணியன்.

''தி.மு.க. கூட்டணியில் மீண்டும் இணைவதற்குத் தயக்கம் காட்டிவந்த பா.ம.க., காங்கிரஸின் இந்த வெற்றிக்குப் பிறகு தைரியமாக அதில் இணைந்துவிடும். இந்தவகையில் தி.மு.க. அணி ஒரு பலம் மிக்க அணியாக மாறி, வெற்றிக் கனியைப் பறிக்கும். மின்வெட்டும்,

கலக்கத்தில் பா.ஜ.க.!

விலைவாசி உயர்வும், தேர்தல் நடந்த மாநிலங்களிலும் இருந்த பிரச்னைதானே. அதையும் மீறித்தானே மூன்று மாநிலங்களில் காங்கிரஸ் வென்றிருக்கிறது. குறிப்பாக தில்லியில் ஆறு மணி நேரம் மின்வெட்டு இருந்திருக்கிறது. எனவே, வாக்காளர்கள் குறுகிய காலப் பிரச்னைகளைக் கணக்கிலெடுத்துப் பார்க்காமல், அரசின் செயல்பாடுகளைக் கணித்து வாக்குப் போட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் தி.மு.க. - காங்கிரஸ் வெற்றி பெறும்'' என்கிறார் அரசியல் விமர்சகர் சோலை.

''முழுக்க முழுக்க உள்ளூர் பிரச்னைகள், ஆட்சியின் செயல்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மக்கள் வோட்டுப் போட்டிருக்கிறார்கள். தில்லியில் மட்டும்தான் காங்கிரஸ் வெற்றி. ராஜஸ்தானில், குஜ்ஜார், விவசாயிகள் பிரச்னையால் பா.ஜ.க.வுக்குக் கெட்ட பெயர். மேலும் இரண்டு கட்சிகளிலும் உட்கட்சிப் பூசல், போட்டி வேட்பாளர்கள். பகுஜன் சமாஜ் தமது வாக்கு வங்கியை அட்டகாசமாக விஸ்தரித்திருக்கிறது. மக்களுக்கு மூன்றாவதாக தேசிய அளவில் ஒரு மாற்று இல்லை என்பதும் தெரிகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பாராளுமன்றத் தேர்தலில் தேசியப் பிரச்னைகள் தவிர



✱ டி.கே. ரங்கராஜன்



✱ சோலை

கருணாநிதியின் தவறுகளையும் பட்டியலிடுவோம். தி.மு.க. - காங்கிரஸ் அணியைத் தோற்கடிப்போம்'' என்கிறார் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ராஜ்ய சபா உறுப்பினரான டி.கே. ரங்கராஜன்.

''தில்லியில் வராதது ஏமாற்றம்தான். மற்றபடி எங்கள் வாக்கு சதவிகிதம் அதிகமாகி இருக்கிறது. பணவீக்கம், விலைவாசி தவிர, பயங்கரவாதம் முக்கியமான தேசியப் பிரச்னை. பாராளுமன்றத் தேர்தலில் பயங்கரவாத பிரச்னை கண்டிப்பாகப் பேசப்படும். 'பசியில்லாத பாரதம்; பாதுகாப்பான பாரதம்' என்பதே எங்கள் கோஷமாக இருக்கும்'' என்கிறார் தமிழக பா.ஜ.க. பொதுச் செயலாளரான தமிழிசை சௌந்தர்ராஜன். எது எப்படியோ இந்தத் தேர்தல்களின் முடிவு காங்கிரஸுக்கு 'பூஸ்ட்' கொடுத்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.



✱ தமிழிசை சௌந்தர்ராஜன்

- ஸ்ரீநி



அப்துல் கலாமுடன்...

நேருஜி தொட்டுப் பார்த்த

சென்னை தமிழிசைச் சங்கம், இந்த ஆண்டுக்கான இசைப் பேரறிஞர் விருதினை நாதஸ்வர வித்வான் செம்பொன்னார் கோயில் வைத்தியநாதனுக்கு வழங்கிச் சிறப்பித்திருக்கிறது. எண்பது வயதைத் தொடும் அந்த இசை மேதை, தம் இசையுலக அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்...

“**ப**த்து வயதில் நாதஸ்வரம் ஆரம்பித்தேன். அறுபத்தைந்து ஆண்டுகளாக எத்தனை கச்சேரி என்று கணக்கு வைத்துக் கொள்ளவில்லை. நாலாயிரம் இருக்கலாம். ஒவ்வொரு கச்சேரியுமே ஓர் அனுபவம்தான். டெல்லியில் 'சங்கர்ஸ் வீக்லி' பத்திரிகையின் அதிபர் இல்லத் திருமண விழாவில் வாசித்தேன். அரங்கில் ஜவஹர்லால் நேரு அமர்ந்திருந்தார். கச்சேரி முடிந்தவுடன் என் நாதஸ்வரத்தை ஆர்வத்துடன் கேட்டு வாங்கித் தடவிப் பார்த்தார்.

சீவாளியைத் தொட்டுக்காட்டி இது என்ன, எப்படிச் செய்கிறார்கள் என்றெல்லாம் கேட்டார். இது 'கொளுக்காத் தட்டை'யில் செய்வது என்று விளக்கினேன். நாதஸ்வரத்தில் ஒவ்வொரு துளை பற்றியும் கேட்டார்.

அதே போல் டெல்லியில் ஆடியோ தேசிய நிகழ்ச்சியில் என் தந்தை செம்பொன்னார் கோயில் தட்சிணாமூர்த்தியுடன் நானும் வாசித்தேன். அங்கே ஒருவர் வந்தார். 'தாங்கள் நாளை காலை ஐயாவின் வீட்டுக்கு வந்து வாசித்துவிட்டுப் போக முடியுமா? தங்கள் சௌகரியம் எப்படி என்று ஐயா கேட்டுவிட்டு வரச்சொன்னார்' என்றார். அந்த ஐயா சர்வபள்ளி எஸ். ராதாகிருஷ்ணன். இந்தியக் குடியரசின் அன்றைய தலைவர். வீடு என்பது ராஷ்டிரபதி பவன். மறுக்க முடியுமா?

மறுநாள் குடியரசுத் தலைவர் மாளிகைக்குச் சென்று வாசித்தோம். அந்த நிகழ்ச்சிக்கு இந்திரா காந்தியும், மரகதம் சந்திரசேகரும் வந்திருந்தார்கள். மேடையை விட்டு ஜனாதிபதி இறங்கியதும் நான் திருப்புகழ் வாசித்து கச்சேரியை முடித்தேன். உடனே ராதாகிருஷ்ணன், 'ஏன் மங்களம் வாசிக்கலையா?' என்றார்.

'மங்களம் வாசிப்பதும் ஒரு முறை. திருப்புகழும் வாசிக்கலாம். அதுவும் ஒருமுறை' என்று சொன்னதை, 'அட, அப்படியா?' என்று கேட்டுக்கொண்டார்''



நாதஸ்வரம்!

வைத்தியநாதன் வாய்ப்பாட்டிலும் வல்லவர். ஏராளமான கச்சேரிகள் செய்திருக்கிறார். திருவெழுந்தூர் கணேச பிள்ளைதான் இவருடைய வாய்ப்பாட்டு குரு.

''அவர் தன்னுடைய கடைசிக் காலத்தில் ஒருநாள் என்னை அழைத்தார்.

'உட்கார். நான் தாளம் போடுகிறேன். கவனித்து என்ன தாளம் என்று சொல்' என்றார்.

வியந்து போனேன். ஏனென்றால் குரு வலது கையில் ஒரு தாளத்தையும், இடது கையில் இன்னொரு தாளத்தையும் ஒரே சமயத்தில் போட்டார். 'ஐயா, நீங்க ஒரு கையில் போட்டது கண்ட ஜாதி அட தாளம், இன்னொரு கையில் போட்டது ஆதி தாளம்' என்றேன்.

மகிழ்ந்து போனார் குரு.

'வைத்தியநாதா, நீயும் இதுபோல் செய்யணும்' என்றார். வீட்டுக்கு வந்து குரு சொன்னது போல தொடர்ந்து பழக்கப்படுத்தினேன். ஆனால் அம்மா அனுமதிக்கவில்லை.

ஒருமுறை சென்னை தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியில் வலதுகையால் சதுஸ்ரஜாதி திருபுடையும், இடதுகையால் கண்டஜாதி அடதாளத்தையும் போட்டுக்கொண்டே, டி.ருக்மணி வயலின், நல்லகுமார் முகர்சிங் இவர்களோடு பல்லவி பாடி, அதிலேயே திஸ்ரம் பண்ணி, மூன்று காலம் பாடி, ராகமாலிகையும், ஸ்வரம் குறைப்பும் பாடிக் காட்டியது சாதனையாக அமைந்தது'' என்கிறார்.

வைத்தியநாதன் கடந்த ஆறு ஆண்டுகளாக நாதஸ்வரம் வாசிப்பதில்லை.

ஹார்ட் பிராப்ளத்தால் இரண்டு வால்வு மாற்றியிருக்கிறார்கள்.

'''இசைப் பேரறிஞர்' விருது உங்களுக்குத் தாமதமாகத் தரப்பட்ட மாதிரி தெரியவில்லையா?'' என்று கேட்ட போது,

''அது மாதிரியான நினைப்பே ஒரு கலைஞனுக்கு வரக்கூடாது. அங்கீகாரம் எப்போது கிடைத்தாலும் அங்கீகாரம்தான்'' என்கிறார்.

– ராணிமைந்தன்

* வைத்தியநாதன்



கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு!

''ஏதோ ஒரு குறிப்பிட்ட நோய்க்குச் சிகிச்சை எடுத்துக்கொள்ள ஒரு மருத்துவரிடம் செல்கிறோம். அவர் உடனே ஒரு மருந்து எழுதிக் கொடுக்கிறார். அந்த மருந்தில் என்னென்ன components இருக்கின்றன என்றா ஆராய்கிறோம்? இல்லையே! ஏதோ ஒரு நம்பிக்கையில்தானே மருந்து சாப்பிடுகிறோம். இசை மருத்துவம் என்பதும் அப்படித்தான். இசையின் மீது நம்பிக்கை வைத்து, அந்த இசையுடன் முழு மனத்தோடு இணையும்போது, பல வியக்கத்தக்க நல்ல மாற்றங்கள் ஏற்படும்'' என்கிறார் டாக்டர் மைதிலி திருமலாச்சாரி. சென்னை அப்போலோ மருத்துவமனையின் மியூஸிக் தெரபி நிபுணர்.

இசை ஒரு பொழுதுபோக்கு அம்சம் மட்டுமே இல்லை. அதற்குப் பல பரிமாணங்கள் உண்டு. அவற்றுள் ஒன்றுதான் இசை மருத்துவம். இந்த இசை சிகிச்சையை எடுத்துக்கொள்பவர், சங்கீதம் தெரிந்தவராக இருக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. அதைப் போலவே மற்ற அலோபதி மருந்துகள், விளைவிக்கக்கூடிய பக்க விளைவுகள் (side effects) என்பது இதில் கிடையாது. Positive side effect இதில் நிரம்ப இருக்கும். நம் பாரம்பரிய சங்கீதத்தின் தனிப்பெரும் பெருமையே இதுதான்.

இசை ஒரு நோய் நிவாரணி. ஒருவரது ஞாபக சக்தியை அதிகப்படுத்த, மன உளைச்சலிலிருந்து மீண்டு வர, சர்க்கரை நோயைக் குணமாக்க எனத் தொடங்கி, இதய நோயைக் குணப்படுத்த படபடப்பைக் குறைக்க, ஒற்றைத் தலைவலியை ஒழிக்க... எனப் பலவிதங்களில் இசை சிகிச்சை பலன் தருகிறது'' என்று ஆச்சர்யப்படுத்துகிறார்.

''ஒரு தாய் கருவுற்றிருக்கும்போது, 22, 23 வாரங்களில், அவளது வயிற்றுக்குள் இருக்கும் கருவானது, சுற்றி உள்ள ஒலிகளைக் கேட்கும் என்று உலகம் முழுதும் உள்ள விஞ்ஞானிகள், நிரூபித்துள்ளார்கள். தனிப்பட்ட முறையில் நான் மேற்கொண்ட ஆராய்ச்சிகளில், ஒரு



டாக்டர் மைதிலி



குழந்தை, 19 வார கருவாக, வயிற்றுக்குள் இருக்கும்போதிலிருந்தே இசையைக் கேட்க ஆரம்பித்துவிடுகிறது என்று அறிந்தேன். அப்படி நல்ல பாரம்பரிய சங்கீதத்தைக் கேட்டு வளரும் குழந்தையின் வலப்புற மூளையானது, ரொம்ப அதிஅற்புதமாக வேலை செய்யக் கூடிய திறனைப் பெற் றிருக்கும். அந்தக் குழந்தை இரண்டு வயதை எட்டும்போது, சராசரி குழந்தைகள் ஆயிரம் வார்த்தைகள் பேசினால், இது ஏழாயிரம் வார்த்தைகள் பேசும்; எதையும் சட்டென கிரகித்துக்கொள்ளும்; பிற்காலத் தில் சிறந்த அறிவாளியாகத் தனிப்பெரும் ஆற்றலுடன் திகழும். இதுவரை சென்னை யில், எனது மேற்பார்வையில் உலகத்தின் பல மூலைகளிலிருந்தும் 'இசை சிகிச்சை' பெற்ற அறுநூறுக்கும் மேற்பட்ட தாய்மார் களின் குழந்தைகள், இன்று அதிபுத்திசாலி களாக வலம்வந்து கொண்டிருக்கிறார்கள்'' என்கிறார் டாக்டர் மைதிலி.

''Autism போன்ற மூளைக் குறை பாடுள்ள குழந்தைகளுக்கு, குட்டிக்குட்டிப் பாடல்கள் சொல்லித் தருவதன் மூலமாக, அவர்களது பேச்சுத் திறனைக் கட்டாயமாக, பன்மடங்கு உயர்த்திட முடியும் என்பதும் பல ஆராய்ச்சிகளின் வழி கண்டறியப் பட்டுள்ளது. வரும் தலைமுறைக் குழந் தைகள் அனைவருமே அதிபுத்திசாலிகளா கப் பிறக்கவேண்டும். அதற்காக, கருவுற்ற தாய்மார்கள் அனைவருமே நல்ல இசையைக் கேட்டுணர்ந்து நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிட வேண்டும்'' என்கிறார்.

– சம்பத்குமார்

ஆட்சி மாறினால் பயங்கரவாதம் ஒழியுமா?

● எம். சம்பத், வேலாயுதம்பாளையம்

? ''இந்தியா கோரிய இருபது தீவிரவாதிகளை ஒப்படைக்கமாட்டோம். அவர்களுக்கு எதிரான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்பட்டால், பாகிஸ்தான் நீதிமன்றங்களிலேயே விசாரித்துத் தீர்ப்பு வழங்குவோம்,'' என்று பாகிஸ்தான் அதிபர் ஸர்தாரி கூறிவிட்டாரே?

! இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டாலும்தான் என்ன? உடனே விசாரணை நடந்து, தண்டனை நிறைவேற்றப்படப் போகிறதா? வழக்கு, தீர்ப்பு, மேல் முறையீடு, உச்சநீதிமன்றம், ஜனாதிபதியிடம் கருணை மனு என்று இழுத்தடித்துக்கொண்டேதான் இருக்கும். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்.



● அபத்த அனுமானம்!



● ஜிஎம். எதிர்ப்பு

● எம். சிவசண்முகம், திருப்பூர்

? ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் பயங்கரவாதம் ஒழியுமா?

! பயங்கரவாதத்தைப் பொருத்த மட்டில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்பதெல்லாம் இல்லை. தேசம் ஒன்றுபட்டிருக்கிறது என்பதை உணர்த்துவதுதான் பயங்கரவாதத்தை அச்சுறுத்தி, ஒழிக்கும். இந்த அடிப்படையைக்கூட நம் தலைவர்கள் புரிந்துகொள்ளாதது நாட்டின் துரதிர்ஷ்டம்.



● நியாயமான ஆதங்கம்

● ஆர்.ஜெஸிந்த், ஆவணத்தங்கோட்டை

? பாகிஸ்தான் மீது போர் தொடுத்தால், அங்கு பயிற்சி பெறும் தீவிரவாதிகளை ஒழித்துக் கட்டிவிடலாம் அல்லவா?

! தீவிரவாதிகளுடன் நில்லாது, ஒரு பாவமும் அறியாத நன்மக்களையும் ஏராள ராணுவ வீரர்களையும் ஒழித்துக் கட்டியதாக ஆகிவிடுமே! அதனால்தான் யோசிக்க வேண்டியிருக்கிறது.

● கல்யாணி பாலு, புதுக்கோட்டை

? ''சென்னையில் வருடா வருடம் பெரும் வெள்ளம் ஏற்படும் நிலையில், வடிகால் வசதி குறித்து, கடந்த கால அனுபவங்களிலிருந்து அரசும் அதிகாரிகளும் பாடம் கற்கவில்லையே!'' என்று ராமதாஸ் ஆதங்கப்படுவது நியாயம்தானே?

! ராமதாஸ் என்ன, கருணாநிதியே அதிகாரிகளை இதற்காகக் கடிந்துகொண்டிருக்கிறார்! உள்ளாட்சித் துறை அமைச்சரும் பொதுப்பணித் துறை அமைச்சரும் இனிமேலாவது

லஞ்ச - ஊழல் வெள்ளத்துக்குத் தடை போட்டு, வடிகால் அமைப்பு; பராமரிப்பைக் கவனிப்பார்களா?!

● **ஜெ. செல்வராணி, மதுரை - 4**

? ''அரசியல் கூட்டணி என்பது அந்தந்தக் காலத்தின் தேவைக்கேற்ப உருவாக்கப்படுகிறது. அதில் தவறேதுமில்லை. பா.ஜ.க.வையும் காங்கிரஸையும் முறியடிக்க வேண்டும் என்பதே எங்கள் இலக்கு. இந்த முயற்சியின் முதல்படிதான் அ.தி.மு.க.வுடனான சந்திப்பு'' என்கிறாரே தா. பாண்டியன்?

! அவர்களுடைய இலக்கு அவர்களுடைய நோக்கில் சரியானதாக இருக்கலாம். ஆனால், அதை அடைவதற்கான முதற்படியே சறுக்கிவிட்டு விடக் கூடாதே என்பதுதான் அவர்களுக்காக நாம் படும் கவலை!



• ஓஹோபாமா!

● **எஸ். வேங்கடரமணன், சென்னை - 33**

? சுகாதாரத் துறை அமைச்சர் அன்புமணி சிகரெட்டுக்குத் தடை விதித்ததுபோல் பிட்ஸா, ஸாண்ட்விச், குளிர்பானங்களுக்கும் தடை கொண்டு வரப் போகிறாராமே?

! அது சாத்தியமில்லை. சிகரெட்டால், புகைப்பவர்கள் மட்டுமின்றி அருகிலிருப்போரும் உடல் நலம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது தடைக்கு மிகச் சாதகமான விஷயம். பிட்ஸா, ஸாண்ட்விச், குளிர்பானம் அப்படி இல்லையே! லேட்டஸ்டாக அவர், 'ஜி.எம்' உணவுக்கு எதிராகப் போராடுவார் என்பது மிகமிக நல்ல, வரவேற்கத்தக்க செய்தி.

● **மல்லிகை மன்னன், மதுரை - 17**

? ஒருவேளை, தற்போது நடக்கும் உச்சக்கட்டப் போரில் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டால், கருணாநிதி இரங்கற்பா எழுதுவாரா (தமிழ்ச் செல்வனுக்கு எழுதியது போல)?

! பகைவன்கூட திருந்துவதற்கான இறுதி எல்லையைப் பற்றித்தான் பேச வேண்டுமே அல்லாது, இறுதி யாத்திரையைப் பேசுதல் மானுடமாகாது.

● **தோ முருகானந்தம், திருவைகாவூர்**

? ''தீவிரவாத செயல்களால் இந்திய ஜனநாயகத்தை வீழ்த்த முடியாது'' என்று ஒபாமா கூறியுள்ளதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! வீழ்த்த முடியாது என்பதோடு இந்திய ஜனநாயகம் மேலும் உரமேற்றப்படுகிறது. நாத்துல ஒரு வார்த்தை சொன்ன ஒபாமாவுக்கு ஒரு 'ஓ' போடு!

● **இரா. கல்யாணசுந்தரம், மதுரை** ★

? சன் டீ.வியை விஜயகாந்த் ஆதரவிலிருந்து மீட்டெடுத்த ராஜதந்திரம் யாருடையது?

! இதில் ராஜதந்திரம் எதும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. முன்பு தேங்காய் உடைப்பது

தராசு

போல் உறவை முறித்ததும் தன்னலம்; இப்போது ஃபெவிகால் போட்டு ஒட்டியிருப்பதும் தன்னலமே. 'உடைத்த தேங்காயை ஒட்ட வைக்க முடியாது' என்ற மூதுரை பொய்யாகுமா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

● **கிரிஜா ஸ்ரீராம், சென்னை - 17**

? 'தீவிரவாதத்தை முழுமையாகத் தடுக்க வேண்டும்' என்று ஒவ்வோர் அரசியல்வாதியும் முழு முனைப்புடன் செயல்படுவதை விட்டுவிட்டு, பதவி விலகுதல் என்ன பரிகாரம்?

! அப்படித் தடுக்கும் முயற்சிகூட காட்டாமல் குறட்டை விட்டுக் கொண்டிருந்ததால், தேசம் கொடுத்த விலை மிக அதிகம். அதற்காகத்தான் ராஜினாமா. பரிகாரம்: குறட்டைவிடாமல் எப்போதும் விழிப்புடன் இருப்பதுதான்.



★ விடுதலை வாக்கியம்

● **ஆர். ராஜதுரை, சீர்காழி**

? ''நிதித்துறையைக் காப்பாற்ற முடியாத ப.சிதம்பரத்திடம் உள்துறை தரப்பட்டிருக்கிறது. பள்ளிகளில் அறிவியல் ஆசிரியர் லீவு போட்டால் பூகோள ஆசிரியரைப் பாடம் நடத்துமாறு கூறுவதுபோல் இது இருக்கிறது'' என இல.கணேசன் விமர்சித்துள்ளாரே?

! கணேசனின் நையாண்டியில் நயம் இருக்கிற அளவுக்கு உண்மை இல்லை என்று நிரூபிக்கும் பொறுப்பு ப.சி.யுடையது! "A person with an open mind may prove to be a better choice" என்ற கருத்துக்குச் சிதம்பரம் வலிமை சேர்க்கட்டும். வாழ்த்துவோம்!



★ வழுக்கும் படி!

● **கே.கணேசன், மறைமலைநகர்**

? 'மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்த பிராமணர்கள் பூணூல் அணியக்கூடாது, நெற்றியில் பொட்டு வைக்கக் கூடாது' என கருணாநிதி கூறியிருப்பது?

! நமது அரசியல் சாசனத்தை மதிப்பவராகில் அவ்வாறு கூறும் உரிமையே அவருக்குக் கிடையாது! இது ஒருபுறம் இருக்க, புறச் சின்னங்கள், அடையாளங்கள் எல்லா ஜாதியினருக்கும் உண்டு. பிராமணர்களை மட்டும் குறி வைப்பது கருணாநிதி போன்றோரின் பொழுதுபோக்கு; அரசியல் ஆயுதம்! புறச் சின்னங்கள் களையப்படுவதால், சமத்துவ உணர்வு ஏற்படும் என்கிற அனுமானமும் அபத்தமானது!

● **என். சண்முகம், திருவண்ணாமலை**

? ''தி.மு.க. - பா.ம.க உறவு என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்கிறாரே விடுதலையான காடுவெட்டி குரு?

! ஏன் பேச மாட்டார்? தி.மு.க. தன் மானத்தை அடகு வைத்தல்லவா அவரை விடுவித்துள்ளது!

● **ரா.பிரசன்னா, மதுரை**

? கேரள முதல்வர் மன்னிப்பு கேட்டுள்ளாரே?


! 'முடிந்து போன கதை' என்று பாதிக்கப்பட்ட குடும்பத்ினரே சொன்ன பிறகு நாம் கிளறுவானேன்? மன்னிப்போம்; மறப்போம். ⊙

❒ ரூ 100/- பரிசு பெறுபவர்: **எம். சிவ சண்முகம்,** திருப்பூர்

★ ரூ.50/- பரிசு பெறுபவர்: **இரா. கல்யாணசுந்தரம்,** மதுரை



கல்கி



2008 டிசம்பர் 21
ஸர்வதாரி மார்கழி 6
மலர் : 67
இதழ் : 21

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

வடமாநிலத் தேர்தல்கள் - வக்கணையான பாடம்!

"அத்வானி மட்டும் மன்மோகன் சிங், சோனியாவுடன் சேர்ந்து மும்பை சென்று, 26.11. குண்டுவெடிப்பில் பாதிக்கப் பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியிருப்பாரேயானால், டெல்லி தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக அமைந்திருக்கக்கூடும்.

டெல்லியில் காங்கிரஸ் பெற்ற அமோக வெற்றியை, அக்கட்சியேகூட எதிர்பார்க்கவில்லை! மும்பையில் 26.11. அன்று நிகழ்ந்த கொடுந்தாக்குதலைத் தொடர்ந்து, உடனேயே தேர்தல்கள் நடந்ததால், காங்கிரஸ் தோற்கும் என்றே பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மும்பை சம்பவத்தை ஓர் அன்னியத் தாக்குதலாகவே கண்ட வாக்காளர்கள், ஆளுங்கட்சிக்குத் தங்கள் பக்கபலத்தைத் தெரிவிக்கும் விதமாக வாக்களித்திருக்கிறார்கள். ஆளுங்கட்சியை அந்தச் சந்தர்ப்பத்தில் குறைகூறி அரசியல் ஆதாயம் பெற முயன்ற பா.ஜ.க.வை வக்கணையாகத் தோற்கடித்துள்ளார்கள்!

ராஜஸ்தானிலோ உட்கட்சிப் பூசல்களும் போட்டி வேட்பாளர்களுமாகச் சேர்ந்து, பா.ஜ.க.வை வீழ்த்திவிட்டன. அக்கட்சியின் கோட்டையாகக் கருதப்பட்ட ராஜஸ்தான் கைநழுவிப் போய்விட்டது!

பஞ்சாப், குஜராத், ஹிமாசலபிரதேசம், உத்தராகாண்ட், கர்நாடகம்





என்று கணிசமான மாநிலங்களில் வெற்றி பெற்று, ஆட்சியும் அமைத்த பா.ஜ.க., நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்புகள் இப்போது மீண்டும் கேள்விக்குறியாகியிருக்கின்றன. பா.ஜ.க. இந்த அனுபவத்திலிருந்து கற்கக்கூடிய முக்கியப் பாடங்கள் இரண்டு: 1. உட்கட்சி ஜனநாயகத்தைப் பலப்படுத்த வேண்டும். 2. பயங்கரவாத எதிர்ப்பைக் கட்சி அரசியலுக்குப் பயன்படுத்தலாகாது.

சட்டிஸ்கர், மத்திய பிரதேச மாநிலங்களில் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளதே; அங்கு எதிர்ப் புணர்வு இல்லையா? என்ற கேள்வி எழும். ம.பி.யில் கடந்த (2003) தேர்தலைக் காட்டிலும் 31 இடங்கள் குறைவாகப் பெற்றிருக்கிறது - இது தோல்வியிலும் ஒரு வெற்றி.

மிஸோராம் தேசிய முன்னணியின் ஆட்சியில், ஊழல் உச்சக்கட்டத்தை அடைந்ததால் அக்கட்சி நிராகரிக்கப்பட்டு, காங்கிரஸ் அம்மாநிலத்திலும் வெற்றி பெற்றுள்ளது.

மாயாவதி தலைமையிலான பஹுஜன் ஸமாஜ் கட்சி, பல்வேறு மாநிலங்களிலும் மெல்ல தடம்பதிக்கும் அளவுக்கு வெற்றிகள் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் இம்மாநிலத் தேர்தல் முடிவுகள் வாக்காளர்களின் ஆக்கபூர்வமான மனோ நிலையைப் பிரதிபலிக்கின்றன. அரசியல்வாதிகளின் நெகடிவ் பிரசாரமும் அணுகுமுறையும் ஊழலும் என்றுமே தோல்வியுறும் என்பதை உணர்த்துகின்றன.

பா.ஜ.க., தனது அரசியல் அணுகுமுறையையும் தேசிய நோக்கையும் சீர்செய்துகொள்வது அவசியமாகிறது. அதேநேரத்தில், பா.ஜ.க.வுடைய தோல்வியின் காரணங்கள், மற்ற கட்சிகளுக்கும்கூட நல்லதொரு பாடம்! ○



காவிரியின் கணது!

* 'தம்பியுடையான்' படத்தில்...

''சோறுடைத்த சோழ வளநாடு/ சோத்துக்கில்லாமல் /பக்கத்தூர் பவியன் கம்பெனிகளில்.../ என்பார் கவிஞர் யுக பாரதி. இந்தியாவுக்கே படியளந்த சோழ பூமி தஞ்சை. இன்று அதன் விவசாயிகள் எலிக் கறிக்கும், அடுத்தவேளை உணவுக்கும் அல்லாட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்...'' என்கிறார் 'தம்பியுடையான்' படத்தின் இயக்குநர் ராஜா ரமேஷ்.

''நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் தஞ்சைதான். எனக்கு விவரம் தெரிந்து எங்களூர் முப்போக விளைச்சலில் முங்கித் திளைத்ததுண்டு. தஞ்சாவூர்க்காரனுக்குக் கவலை என்பதே கிடையாது. வாயில்லா பிள்ளையும் இந்த ஊரில் பிழைத்துக்கொள்ளும் என்றெல்லாம் பேசக் கேட்டிருக்கிறேன். என்றைக்கு காவிரித் தண்ணீரில் அரசியல் கலந்ததோ அன்றைக்கே தஞ்சையின் வாழ்வும் காவிரியின் வாழ்வும் நாசமாயிற்று. அரசியல்வாதிகளின் சுயலாபம், இந்தியா என்கிற ஒருமைப்பாட்டுக்கே வேட்டு வைக்கும் நிலைக்கு இன்றைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கிறது'' என்று கொதித்தவரிடம் என்ன தீர்வு என்று கேட்டால், ''மக்கள் மத்தியில் விழிப்புணர்வு வர வேண்டும்'' என்கிறார்.

''தஞ்சை மண்ணைப் பொறுத்தவரை நிலங்களெல்லாம் நிலச்சுவான்தாரர்கள் கையில் இருக்கிறது. நிலச்சுவான்தாரர்கள் அரசியல்வாதிகளின் கைப்பாவையாக இருக்கின்றனர். விவசாயத்துக்குத் தண்ணீர் வராவிட்டாலும் பரவாயில்லை. அரசியல்வாதிகளின் அனுசரணை கிடைத்தால் போதும் என்ற நிலை அவர்களுக்கு. பாதிக்கப்படுவதெல்லாம் அன்றாடம் கூலி வேலை செய்யும் தொழிலாளர்கள். ஆனால், போராட்ட மனநிலை தொழிலாளர்களுக்கு ஏற்படாமல் பார்த்துக்கொள்வதே நிலச்சுவான்தாரர்கள்தான்! என்று காவிரி பிரச்னையின் வேறொரு பின்புலத்தைக் கூறினார். இதனால் உங்களுக்குப் பிரச்னை வராதா? என்றால், ''எந்தப் பிரச்னை வந்தாலும் அதை எதிர்கொள்ளத் தயார்'' என்கிறார் ராஜா ரமேஷ். – **கண்மணி**

'சித்தியை இந்தியில் எடுக்கலாம். நீங்களே நடியுங்கள்' என்று இந்தி நடிகர் ஜீதேந்திரா கூடச் சொன்னார். நான் மறுத்து விட்டேன். காரணம், அந்தச் சமயத்தில் 'வீட்டை விட்டு வெகுதூரத்தில் போய் உட்கார வேண்டுமே' என்கிற எண்ணம்தான்.

அதற்குப் பிறகு, யு.டி.வி.யில் கூட்டுச் சேர்ந்து 'சித்தி'யை ஹிந்தியில் எடுத்தார்கள். வேறுவேறு நடிகர்கள் நடித்தார்கள். நான் ராடன் சார்பாக தயாரிப்பை மட்டும் பார்த்துக்கொண்டேன்.



8 ராதிகா

எம்.ஜி.ஆர் கொடுத்த முத்தம்!

சினிமாவாகட்டும், தொலைக் காட்சித் தொடராகட்டும். தோல்வி என்று வந்தால், தயாரிப்பாளர் மட்டும்தான் பாதிக்கப்படுவார். வெற்றி வந்தால் 'என்னால்தான் வெற்றி கிடைத்தது' என்று அதில் பங்கெடுத்த ஒவ்வொருவரும் கொண்டாடுவார்கள். சித்தி மிகப் பெரிய வெற்றித் தொடர், 'சித்தி' தொடரை முடிக்கவேண்டாமென்று சன் டீ.வி. தொடங்கி நிறைய பேர் சொல்லிப் பார்த்தார்கள். ஆனால், முடித்துவிட்டேன்.

அதற்குப் பிறகு நிறைய பிரச்னைகள் வந்தன. பிரதானமாக ஈகோ பிரச்னை. எனக்கும் டைரக்டருக்கும் இடையில் சின்ன பிரேக் வேண்டும் என்பதற்காக, ராடன் தயாரிப்பில், 'காவேரி' தொடரை ஆரம்பித்தேன். இயக்குநர் திருமுருகன்தான் அதை இயக்கினார். மதுபாலாவை



✱ 'சித்தி' தொடரில் சிவக்குமார், ராதிகா, சி.ஜே.பாஸ்கர்

வைத்து மிகப் பிரமாதமாக எடுத்தோம். என்னவோ தெரியவில்லை. அதற்கு ஓர் அடையாளம்கூட கிடைக்கவில்லை.

'காவேரி' ஒரு பக்கம் ஓடிக்கொண்டிருக்க, இன்னொரு பக்கம் 'அண்ணாமலை' தொடருக்கான ஸ்கிரிப்டைத் தயாரிக்கும் வேலை நடந்துகொண்டிருந்தது. இயக்குநர் சி.ஜே. பாஸ்கர்தான் 'அண்ணாமலை' தொடர் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னவர். 'சித்தி' வெற்றிக்குப் பிறகு அவரிடம் கொஞ்சம் மாற்றம் வந்திருந்தது.

ஒருநாள், 'நீங்க இல்லாமலேயே அண்ணாமலை சீரியல் ஐம்பது எபிசோட் எடுக்கப் போறோம். நீங்க இல்லாம இது பெருசா நிக்கணும்' என்று சொன்னார். அதாவது நான் சின்ன வயதிலிருந்து வளர்வது போலக் கதை போகும். நான் 'சரி' என்றேன். பிறகு, சன் டீ.வியில் போய் பேசினேன். சேனலில், 'நீங்க சீரியல்ல வந்தே ஆக வேண்டும்' என்று சொல்லிவிட்டார்கள்.

'அந்த நடிகரிடம் பேச வேண்டும். இந்த நடிகையிடம் பேச வேண்டும்' என்று சொன்னால் அப்பாவுக்குக் கோபம் வந்துவிடும்.

அதற்குப் பிறகு சி.ஜே. பாஸ்கரும் கதையைக் கொஞ்சம் மாற்றி, நான் காட்சியில் வருவது போல எடுத்தார்.

என் தந்தை எம்.ஆர். ராதாதான் எனக்கு ஒரு வகையில் ஆதர்ஸம். சின்ன வயதிலிருந்தே அவரை நான் ஸ்ட்ராங்கான கேரக்டராகத்தான் பார்த்திருக்கிறேன். அவருக்கு வீட்டில் இருக்கும் பெண் பிள்ளைகளை மிகவும் பிடிக்கும். அவர்கள் என்ன கேட்டாலும் வாங்கித் தருவார். ஆண் பிள்ளைகளை மட்டும் பிடிக்காது. என்ன காரணம்? யாருக்கும் தெரியாது. 'அவர் அப்படித்தான்' என்று இருக்கவே இருக்கிறது ஓர் எளிதான பதில்.

என் அண்ணன் தம்பிகள் யாருக்காவது ஏதாவது வேண்டும் என்றால்கூட எங்களைத்தான் ஏவுவார்கள். ''என் அப்பா கிட்ட 'இது' வேணும்னு கேளு. நீ கேட்டா குடுப்பாரு'' என்பார்கள்.

எம்.ஆர்.ஆர். வாசுதான் முதல் வாரிசு. அவர் கொஞ்சம் பிடிவாதக்காரர். அதுதான் என் தந்தைக்கு ஆண் பிள்ளைகளைப் பிடிக்காமல் போனதற்கும் கண்டிப்பாக வளர்க்கவேண்டும் என்று தோன்றியதற்கும் காரணமோ என்று இப்போது தோன்றுகிறது.

என் தந்தைக்கு எழுத, படிக்கத் தெரியாது. அவருக்கு ஓர் உதவியாளர் இருந்தார். பெயர் அழகிரி. அதிகாலையில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து

கொண்டு, அழகிரியை அன்றைக்கு வந்த நாளிதழில் இருக்கும் விஷயங்களைப் படிக்கச் சொல்லிக் கேட்பார். அன்று மாலை நடக்கும் நாடகத்தில் ஏதாவது ஓர் இடத்தில், அன்றைக்குப் படித்த செய்திகளில் முக்கியமான விஷயத்தை, கொண்டு வந்து விடுவார். அதில், எள்ளல், விமர்சனம் எல்லாம் கலந்து கிடக்கும். ரசிகர்கள் குதூகலத்தில் குதிப்பார்கள்.

என் தந்தை திரைத்துறையில் இருந்தாரே தவிர, வீட்டில் யாராவது சினிமாவுக்குப் போனால்கூட அவருக்குப் பிடிக்காது. என் அம்மா, சித்தி எல்லோருக்கும் சினிமா ரொம்பப் பிடிக்கும்.

அவர் எப்போது ஊருக்குப் போவார் என்று எல்லோரும் காத்திருப்போம். அவர் இந்தப் பக்கம் போனவுடனேயே வண்டியை எடுத்துக்கொண்டு எல்லோரும் கிளம்பிவிடுவோம்.

ஒருநாள் என் தந்தை வெளியூர் புறப்பட்டார். நாங்கள் வழக்கம்போல் சினிமாவுக்குப் போனோம். சிவாஜி சார் நடித்த ஒரு படம். ரொம்ப அழுகையாக இருந்தது. அழுகைக்காட்சி வந்தபோது, நான் தியேட்டரைவிட்டு வெளியே வந்து பாப்கார்ன் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன்.

படம் முடிந்து வீட்டுக்கு வந்தோம். எங்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. என் தந்தை வீட்டில் இருந்தார். ஏதோ ஒரு காரணத்தால், அவருடைய வெளியூர் பயணம் ரத்தாகியிருந்தது. அன்றைக்கு எல்லாருக்கும் திட்டு விழுந்தது.

அது என்னவோ தெரியவில்லை. அவருக்கு சினிமா சம்பந்தப்பட்டவர்களைப் பிடிக்கவில்லை. திரைத்துறையில் இருந்த சில பேர் மேல்தான் அவர் மரியாதை வைத்திருந்தார். 'தமிழ்நாட்டு மக்களுக்கு வேற வேலை இல்லை. இல்லேன்னா, எதுக்கு சினிமாக்காரன் பின்னாடி ஓடணும்?' என்பார்.

அவர் நடிக்கும் பட ஷூட்டிங்குக்கு நாங்கள் போனால், எல்லோரிடமும் எங்களைப் பெருமையாக அறிமுகப்படுத்துவார். அதேசமயம், 'அந்த நடிகரிடம் பேச வேண்டும். இந்த நடிகையிடம் பேச வேண்டும்' என்று சொன்னால் அவ்வளவுதான். அவருக்குக் கோபம் வந்துவிடும்.

எனக்கு, சின்ன வயதில் இருந்தே எம்.ஜி.ஆரை ரொம்பப் பிடிக்கும். அவரைப் பார்க்க வேண்டும் என்று திரும்பத் திரும்பக் கேட்டபிறகு, ஒரு நாள் என்னை எம்.ஜி.ஆரிடம் அழைத்துப் போனார். நான் அப்போது சிறு பெண். அவர் என்னைப் பார்த்ததும் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தார். நான் பயத்தோடு திரும்பி என் தந்தையைப் பார்த்தேன்.

(ரயில் வரும்)

எழுத்தாக்கம்: பாலு சத்யா

■ எம்.ஆர்.ராதா



கிரிக்கெட் என்பது இன்னொரு வகை இலக்கியம் என்றால், அதில் காதல் இலக்கியங்களும் இடம்பெறவே செய்கின்றன. இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் பாலிவுட் நடிகைகள் மீது மையல் கொள்வது இயல்பான ஒரு காரியமாகி விட்டது. ஆனால் இதைத் தொடங்கிவைத்தது முகமது சபாடினையையும், தான் காதலித்ததாகப் பின்னர் ஒப்புக்கொண்டார் ரவி சாஸ்திரி.

1980ம் ஆண்டின் மிஸ் இந்தியாவாகப் பட்டம் சூட்டப்பட்டவர் சங்கீதா பிஜ்லானி. ஏற்கெனவே திருமணமான அஸாருதீனுடன், அவர் கொண்ட காதல் திருமணம் வரைக்கும் சென்றது. அஸாரின்

ச.ந.கண்ணன்



* கங்குலி... * நக்மா...

அசாருதினோ கங்குலியோ கிடையாது. இன்றைய யுவ்ராஜ் சிங், தோனி காதல்களுக்கு எல்லாம் முன்னோடிகள் உண்டு.

இருபத்தியொரு வயதில் இந்தியக் கிரிக்கெட் அணியின் கேப்டனாகி சாதனை செய்த மன்சூர் அலிகான் பட்டோடி, பாலிவுட்டின் புகழ்பெற்ற நடிகையான ஷர்மிளா தாகூரை மணந்து கொண்டார். இன்றுவரை அவர்கள் ஆதர்ச தம்பதியாக உள்ளனர். மேற்கு இந்தியத் தீவு வீரர் விவியன் ரிச்சர்ட்ஸ், இந்தியாவுக்கு அடிக்கடி விஜயம் செய்தபோது எல்லோருக்கும் சந்தேகம் ஏற்பட்டது. பின்னர் தான் இளம்நடிகையான நீனா குப்தாவை அவர் காதலித்தது தெரியவந்தது. ஒரு காலத்தில் இந்தியக் கிரிக்கெட்டின் அர்விந்த் சாமியாக இருந்தவர் ரவி சாஸ்திரி. ஆதிக்கம் செலுத்தும் உடல்மொழியும் கூர்மையான கண்களும், ரசிகைகளை அவர்மீது பித்துப் பிடித்து அலையும்படி செய்தன. 1980களில் பாலிவுட்டின் முன்னணி நடிகையாக இருந்த அம்ரிதாசிங்குடனான ரவி சாஸ்திரியின் முதல் காதல், நிச்சயதார்த்தம் வரைக்கும் சென்று முறிந்து போனது. அம்ரிதா சிங்கை மட்டுமல்ல; டென்னிஸ் வீராங்கனை கேப்ரிலா

நெருக்கடியான சூதாட்ட விவகாரங்களின் போதும் சங்கீதா பிஜ்லானி உடன் இருந்தது அவர்கள் காதலை அழுத்தமாகச் சொல்லியது. இந்தியக் கிரிக்கெட் - பாலிவுட் நவீன காதல் கதையை ஆரம்பித்துவைத்த பெருமை கங்குலிக்கு உண்டு. தம் பால்யத் தோழியான டோனாவைத் திருமணம் செய்துகொண்ட கங்குலி, கேப்டனான பிறகு நக்மா வசம் வீழ்ந்தார். கங்குலி அவருடன் காளஹஸ்தி கோயிலுக்குச் சென்றதும், ஒருமுறை சென்னையில் நடந்த படப்பிடிப்புக்கு நக்மாவுடன் ரகசியமாக வருகை தந்ததும் பத்திரிகைகளில் பரபரப்பாக விவாதிக்கப்பட்டவை. இன்றுவரை நக்மாவுடனான உறவு பற்றி அமைதி காத்துவருகிறார் கங்குலி.

முதலில் ஹிந்தி நடிகை கிம் சர்மாவைக் காதலித்த யுவ்ராஜ் சிங், பிறகு தீபிகா படுகோனைக் காதலித்தார். இரண்டும் தோல்வியில் முடிந்தன. இதுபோன்ற

நடத்தையால் அசிரத்தையாக இருந்து, தமக்காகக் காத்துக்கிடந்த தலைமைப் பதவியை, தோனிக்குத் தாரை வார்த்து விட்டார் யுவ்ராஜ் சிங். இங்கிலாந்துடனான இந்தியக் கிரிக்கெட் அணியைத் தேர்வு செய்ய சென்ற வாரம் சென்னை வந்திருந் தார் தோனி. ஹோட்டலில் அவரை,

நடிகைகளை கேர்ள் ஃப்ரெண்டுகளாக வைத்துக்கொள்வது ஃபேஷனாகி விட் டது. இருபது வயதில், வேண்டிய பண மும் புகழும் கௌரவமும் கிடைத்த பிறகு, அனிச்சையாக மனம் நடிகைகளை நாடத் தொடங்கிவிடுகிறது. நடிகைகளின் சிநேகி தம் கிரிக்கெட் வீரர்களுக்கு இன்பக் கிளுகிளுப்பு ஊட்டுகிறது என்றால், கிரிக்கெட் வீரர்களை வளைத்துப் போடுவது, நடிகைகளின் சாதனை யாகப் பார்க்கப்படுகிறது. தொன்னைக்கு நெய்யும் நெய்க்கு தொன்னையும் ஆதாரம். ●

✱ தோனி...



✱ லட்சுமிராய்...



காதல் கிரிக்கெட்!

நடிகை லக்ஷ்மிராய் சந்தித்தது இப்போது பரபரப்பாகியுள்ளது. 'காவலர்களிடம் தோனி என்னை 'வருங்கால மனைவி' என்று குறிப்பிட்டதாகக் கூறுகிறார்கள். அதுபற்றி எனக்குத் தெரியாது. இருவரும் இதுவரை நல்ல நண்பர்கள். இப் போதைக்கு அவ்வளவுதான் சொல்ல முடியும்' என்று பேட்டியளித்திருக்கிறார் லட்சுமிராய்.

சச்சின், திராவிட், லக்ஷ்மண், ஷேவாக் ஆகிய வீரர்கள் ஒருபோதும் இதுபோன்ற காதல் சர்ச்சைகளில் சிக்கிக் கொண்டது கிடையாது. அதுவும் சச்சி னின் குணத்தின் மீது இதுவரை நகக் கீறல்கூட படவில்லை. ஆனால், இன் றைய இளம் கிரிக்கெட் வீரர்களுக்கு





6
புதிய வானம்

தனசேகரோடு கூடவே மாதவனும் விஸ்வநாதனும் நுழைந்தனர். அவர்களிடம் சில தாள்களில் கையொப்பம் வாங்கிக் கொண்டார் இன்ஸ்பெக்டர். ராஜுவும் கீதாவும் அழைக்கப்பட்டனர்.

''அவங்கள இப்போ கூட்டிட்டுப் போக லாம் மிஸ்டர் மாதவன். கோர்ட்ல வழக்கு வர்றப்போ அப்பியர் ஆக வேண்டியிருக் கும் - அந்தத் தம்பியும் அவரோட கர்ல் ஃப்ரெண்டும் - இரண்டு பேரும்தான்.''

''ஸார்! வாட்ச் யுவர் வர்ட்ஸ்'' என்றாள் கீதா. விஸ்வநாதனின் முகத்தில் கவலையு டன் சங்கடமும் சேர்ந்துகொண்டது. ராஜு தலையைக் குனிந்துகொண்டான்.

''நான் பார்த்துப் பேசறது இருக்கட் டும்மா. நீங்க இரண்டு பேரும் பார்த்துக் கவனமா நடந்துக்கங்க. ஓர் அதிமுக்கிய மான சர்வதேச ஸ்மக்லிங் ராக்கெட்டை உடைச்சு உள்ளே நுழைஞ்சிருக் கோம் - அதுல நீங்க முக்கிய சாட்சிகள். சில குற்றவாளிகள் பிடிபடற வரைக்கும், நீங்க பாதுகாப்பா இருக்கணுமேன்னுதான் ஸ்டேஷன்லயே உங்களை நிறுத்தி வைச்சேன்!''

''நார்காடிக்ஸ் ஸார்...?'' கீதா பளிச்சென்று கேட்டதும் தனசேகர் முகத்தில் புன்னகை விரிந்தது.

''இருக்கலாம்; இருக்கக் கூடும். இப்போதைக்கு, சந்தனக் கடத்தலுக்கு மட்டும்தான் எவிடன்ஸ் கிடைச்சுருக்கு. மினரல் ஓர் நிரப்பின கன்டெய்னருங்க கப்பல்ல ஏற்ற துக்குள்ள சரக்கை மாத்தி, எடைக்கு எடை சந்தனக் கட்டை ஏத்தி அனுப்பிக்கிட்டிருக் காங்க...'' என்றவர் ராஜுவைப் பார்த்துச் சொன்னார்:

''உங்க ஃப்ரெண்ட் இருக்காரே - மரணத்திலிருந்து மீண்டெழுந்த மீசைக் காரர்! அவர் அந்த செயின்ல ஒரு முக்கியப் பகுதி. அவரைப் பிடிச்சுட்டோம். வாழ்க உங்க பறவைகள் பைத்தியம்!''

உட்கார்ந்த நிலையிலேயே ராஜுவுக்குத் தலையைச் சுற்றியது. கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. நாரைக் கூட்டங்கள் அடர்ந்த புதர்களும் அவற்றினிடையே அந்த மீசைக்காரனின் முகமும் அவன் குத்தப்பட்டு மல்லாக்க விழுந்த காட்சியு

சீதா ரவி

மாக மனத்திரையிலே சுழன்றோடி மறைந்தன.

''ராஜு''? ஆர் யூ ஆல் ரைட்?'' இதாதான் அவனுடைய அசௌகரியத்தைக் கவனித்து, தன் கைப்பையிலிருந்து மீண்டும் தண்ணீர் எடுத்துத் தந்தாள். கர்ச்சீஃபை நனைத்து, அவன் முகம் துடைத்துக் கொள்ள நீட்டினாள்.

''சீக்கிரமா ஸாரை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போங்க. ரெஸ்ட் எடுக்கட்டும். ஆடிப் போயிட்டாரு பாவம்'' என்றார் தனசேகர்.

அவருடன் கைகுலுக்கிய மாதவனிடம், ''செக்யூரிட்டி பத்தி ரொம்ப கவலைப்படாதீங்க. டிபார்ட்மெண்ட்ல சொல்லி அரேஞ்மெண்ட்ஸ் பண்ணியிருக்கேன். கொஞ்சம் நாளைக்கு காலேஜ் மட்டும் போய் வரச் சொல்லுங்க. பைனாகுலர்ஸை வாங்கிப் பூட்டி வைங்க!'' என்றார்.



சீதாவை ஹாஸ்டலில் கொண்டு விடுகையில் அவள் பெற்றோர் செல் ஃபோனில் அழைத்துப் பேசினர்.

''எல்லாம் சரியாயிருக்கு. ஒண்ணும் பிரச்னையில்லை. ஹாஸ்டலுக்குத்தான் போய்க்கிட்டிருக்கோம்...''

அவள் பேசுவதைக் கொண்டு, ராஜு அவர்களுக்குத் தகவல் எட்டியிருந்ததைப் புரிந்துகொண்டான்.

''என்னால நீயும் அனாவசியமா பிரச்னையில மாட்டிக்கிட்டே'' என்றான், அவள் ஃபோன் தொடர்பைத் துண்டித்ததும்.

''முட்டாள்தனமா பேசாதே!'' என்ற அவளது பதில், விஸ்வநாதனுக்குக் கொஞ்சம் அதிர்ச்சி அளித்தது. காரை ஓட்டி வந்த மாதவன் தனக்குள் சிரித்துக்கொண்டார்.

வீடு திரும்பியபோது ருக்மிணி கேட் அருகே கவலையுடன் நின்றுகொண்டிருந்தாள். இருண்ட வானத்தில் நட்சத்திரங்கள் சிமிட்டிக் கொண்டிருந்தன.

''பனியில ஏன் நிக்கறே...? உள்ளே போ'' என்று விஸ்வநாதன் அதட்டிவிட்டுப் பின்தொடர்ந்தார்.

''காப்பி தரட்டுமா?''

''ம் கொடு... எல்லாருக்கும்.''

''குளிக்கணும் முதல்ல'' என்று எழுந்த ராஜுவைப் பிடித்து அமர்த்தினாள் ருக்மிணி. ''இரு இரு... சூடா ஒரு வாய் குடிச்சுட்டு அப்புறம் போ...'' என்றவள் நேரே பூஜை பிறையருகே போய் நின்று கண்களைத் துடைத்துக்கொண்டு வணங்கி நின்றாள்.

ஐந்து நிமிடங்களில் ஆறுதலான சுவையில், இதமான சூட்டில் காப்பி எடுத்து வந்தாள்.

''என்ன ஆச்சு...? இப்பவாவது சொல்லுங்க'' என்றாள்.

விஸ்வநாதனின் முகம் சலிப்புற்றிருப்பதைப் பார்த்துவிட்டு மாதவன், ''சொல்றேன், உட்காருங்க'' என்றார்.

மைசூர், கூர்க் காடுகளிலிருந்து சந்தனக் கட்டைகளை வெட்டி, கடத்தி வந்து அயல் நாடுகளுக்குத் திருட்டுத்தனமாக அனுப்பி வரும் கும்பல்; சந்தேகம் தவிர்ப்பதற்காக, சென்னை துறைமுகத்தை அது தேர்ந்

''உன்னிடமுள்ள நூறு ரூபாயில் எனக்கு ஐம்பதைக் கொடுத்துவிட்டால் மீதி எவ்வளவு இருக்கும்?'' ''ஐம்பத்தைந்து சார்...'' ''அதெப்படி..?'' ''நான் வட்டியைப் பிடிச்சுட்டுத்தானே தருவேன்...'' - ஜே. தனலட்சுமி



தெடுத்த திட்டமிடல், என்று மாதவன் விவரித்துக்கொண்டே வருகையில் ருக்மிணி இடைமறித்தாள்.

''ராஜு பார்த்த மீசைக்காரருக்கும் இந்தக் கடத்தலுக்கும் என்ன சம்பந்தம்?''

''ஏற்றுமதியாகற எல்லா கன்டெய்னர்களையும் கஸ்டம்ஸ்ல பரிசோதனை பண்ணி ஸீல் வைப்பாங்க. இந்தக் கும்பல் கிரானைட் பாறைகளை இன்ஸ்பெக்ஷன் போது வைச்சுட்டு, அப்புறமா ஸீலை உடைச்சு சந்தனக் கட்டைகளை



''அந்தப் போலீஸ் ஸ்டேஷன்லதான் என் மாமா இருக்கறார்...''
''ட்யூட்டிலயா, கஸ்டடிலயா?''
- வெ. சீதாராமன்

இடம் மாத்தி, திரும்பவும் போலி ஸீல் வைச்சுக்கிட்டிருந்தாங்க... எடைக்கு எடை சந்தனக்கட்டை கரெக்டா வைக்கமுடியாது இல்லையா. குறையக் கூடிய எடைக்கு, கட்டைங்களை இங்கே லோகல்ல சப்ளை பண்ணி ஈடு செய்யற ஆள்தான் நம்ம ராஜு பார்த்த மீசை வைச்ச பறவை!'' என்று சிரித்தார்.

''இங்க ஏது சந்தனக் கட்டை?'' அவர் சிரிப்பது பிடிக்காமல் கேட்டான் ராஜு.

''நீங்க தியாஸாஃபிகல் சொஸைடில பறவைங்களைப் பார்க்கற மயக்கத்துல மரங்களைப் பார்க்கமாட்டீங்க போலிருக்கு. அங்கேருந்து சந்தன மரங்களை வெட்டி, ராத்திரியோட ராத்திரியா ஆத்தங்கரை ஓரமா எடுத்துக்கிட்டுப் போய் எதிர்க்கரையில புதர்களுக்குள்ளே மறைச்சு வைச்சுக்கறது. தேவையானப்போ சப்ளை செஞ்சு காசு பார்க்க வேண்டியது.''

''சரி, அந்த மீசைக்காரன்தான் செத்துப் போய்ட்டான்னு சொன்னியே ராஜு, அப்புறம் அவனைத் திரும்பவும் பார்த்ததை நீ சொல்லலியே?'' ருக்மிணி கலவரப்பட்டாள்.

''நானே ரொம்பப் பயந்திருந்தேன். சொல்லியிருந்தா நீங்க மிரண்டு போய் 'ஊரை விட்டே போயிடலாம்'னு ஆரம்பிச்சிருப்பீங்க.''

''இப்பவும் நான் அதைத்தான் சொல்றேன். பேசாம இந்த ஊரை விட்டே போயிடலாம்,'' என்றாள் ருக்மிணி, அழுத்தமாக.

ராஜுவின் நெஞ்சுக்குள் கீதா எட்டிப் பார்த்து தலையில் குட்டினாள்.

''பயப்படாதீங்க!'' என்றான் பொதுவாக அனைவரையும் பார்த்து. ''இந்த வழக்குல இப்போ நானும் கீதாவும் முக்கிய சாட்சியா ஆயிட்டோம். அது முடியறவரைக்கும் ஒத்துழைக்க விரும்பறோம்.''

''நாங்க பயப்படறது கிடக்கட்டும். நீதான் மிரண்டு போயிருக்கே. ஸ்டேஷன்லயே உனக்கு மயக்கம் வந்தது. இன்னும் கோர்ட், கேஸெல்லாம் நமக்கு ஒத்து வராது...'' என்று ஆரம்பித்தார் விஸ்வநாதன்.

'இல்லைப்பா... இதுல எனக்குப் பொறுப்பு இருக்கு. கத்தியால ஒருத்தன் குத்தப்பட்டதைப் பார்த்து அவன் செத்துட்டான்னு முடிவு பண்ணினது என்னோட

பயத்தால நேர்ந்த தப்பு. அதுக்கே டி.ஐ.ஜி. தனசேகர் கோபிச்சுக்கிட்டார். கம்ப்ளெயின்ட் துல்லியமா இல்லைன்னா, போலீஸால ஒரு கேஸை எப்படி டிராக் டவுன் பண்ண முடியும்? அவங்க பாடியைத் தேடியிருக்காங்க...''

''தனசேகர்கிட்டே விஷயத்தைக் கொண்டு போனதுதான் நீங்க செஞ்சதுலயே உருப்படியான காரியம். ரொம்பப் பொறுப்பான, சாமர்த்தியமான அதிகாரி. அவர் சொல்லியிருக்காட்டி, உங்களை ஸ்டேஷன்ல விட்டுட்டு வர நான் சம்மதிச்சிருக்க மாட்டேன்'' என்றார் மாதவன்.

''அந்த கிரெடிட் ஜோவுக்குத்தான்.''

''ஷ்யூர். ஆனா, நம்ம சின்ன வீரப்பனோட நெஞ்சுரம் யாருக்கு வரும்?'' என்று மாதவன் கேட்க, ராஜுவுக்குச் சிரிப்பு வந்தது.

''யார் அது, சின்ன வீரப்பன்?'' ருக்மிணி பயம் அகலாமல் கேட்டாள்.

''அந்த மீசைக்காரனுக்கு டிபார்ட்மென்ட் வைச்சுருக்கற செல்லப் பெயர். அவன் நாலு சந்தன மரத்துக்கு நடுவுல ஒரு சாதா மரத்தைச் செருகினதாலே பங்காளிங்களுக்குள்ளே சண்டை! அவனைப் போட்டுத் தாக்கிட்டாங்க. ஆஸ்பத்திரியிலேருந்து ராத்திரியோட ராத்திரியா தப்பிச்சு வந்து, சொஸைட்டிக்குள்ளே வெட்டி வைச்சுருந்த கட்டைங்களை நகர்த்த முயற்சி பண்ணியிருக்கான். அப்போதான் நம்ம ஜோடிப் பறவைங்க அவனைப் பார்த்திருக்கு!'' என்றபடி ராஜுவின் தோளில் ஓங்கி ஒரு தட்டு தட்டினார் மாதவன்.

''நான் குளிக்கப் போறேன்'' என்று எழுந்துகொண்டான் ராஜு.

''சும்மா 'ஜோடி ஜோடி'ன்னு நீங்களே கோத்து விடாதீங்க'' - அம்மா அவன் காதில் விழட்டும் என்றே சொல்வதாகத் தோன்றிற்று அவனுக்கு.

ஒரு காக்கை மணப்பெண்ணைப் போல் அலகைத் தாழ்த்தி தலை குனிந்துகொண்டிருக்க, அதன் அருகில் இன்னொன்று அமர்ந்து, தன் அலகால் அருகிருந்த காகத்தின் கழுத்தை மெல்ல கொத்திக் கோதியது.



''ஜோடிப் பறவைங்களா?'' கல்லூரித் தோழர்களின் கேள்வி மழையிலிருந்து விடுபட்டு ஒதுங்கி, மரத்தடியில் நின்ற ஒரு கணத்தில் ஜோ கேட்டாள்.

''ம்... அப்படித்தான் சொன்னார் மாதவன்'' என்றான் ராஜு, சிரித்தபடி. ''அம்மா உடனே கோபப்பட்டாங்க'' என்றான்.

''அங்க பாரு...'' - அவன் சுட்டிக்காட்டிய மரக்கிளையில், ஒரு காக்கை மணப்பெண்ணைப் போல் அலகைத் தாழ்த்தி தலைகுனிந்து கொண்டிருக்க, அதன் அருகில் இன்னொன்று அமர்ந்து, தன் அலகால் அருகிருந்த காகத்தின் கழுத்தை மெல்ல கொத்திக் கோதியது.

அண்ணாந்து பார்த்த ஜோவின் கண்கள் சிரித்தன. ''இதுல தலையைக் குனிஞ்சுக்கிட்டிருக்கறதுதான் பெண் பறவைன்னு, உடனே சொல்வீங்களே...?'' ஏளனம் தாண்டவமிட்டது அவள் குரலில்.

''எப்படி வேணா இருக்கலாம்... அது அவ்வளவு முக்கியமா...?'' என்றான்.

''இல்லை'' என்றான் அவன் அமைதியாக.

(முற்றும்)

இசைக் கடலைக் கடந்தவர்!

"அன்புள்ள நண்பருக்கு,

அன்னமாச்சார்யா பாடல்கள் அடங்கிய எம்.எஸ். அவர்களின் இசைநாடாவைக் கேட்டு ரசித்தேன். குறிப்பாக 'செஞ்சுருட்டி'யில் அமைந்துள்ள 'ரா,ரா,சின்னன்னா' பாடல் என்னை மெய்சிலிர்க்க வைத்தது. இத்தனை அழகாக மெட்டமைத்த உங்களுக்கு என்னுடைய அன்புப் பரிசாக ரூ. 500 காசோலை அனுப்புகிறேன். எனக்கு வசதியிருந்தால், மேலும் ரெண்டு மூன்று பூஜ்யங்கள் சேர்த்து 'செக்' எழுதுவேன். உங்கள் இசை அமைப்பின் மதிப்பை எவ்வாறு நிர்ணயிக்க முடியும்!"

கடிதம் எழுதியவர், கர்நாடக இசை உலகின் பிரபல வித்வான் நேதுநூரி கிருஷ்ணமூர்த்தி. கடிதத்தைப் பெற்றவர் கடையநல்லூர் வேங்கடராமன். வார்த்தைக்கு வார்த்தை கடிதம் மேற்கண்டவாறு அமைந்திருக்கவில்லைதான். ஆனால், கடிதத்தின் சாராம்சத்தில் மாற்றமில்லை.

இன்னொருவராக இருந்தால், வித்வானின் கடிதத்துடன் சேர்த்து காசோலையையும் வைத்து, 'ஃபிரேம்' போட்டு அனைவரும் காண வீட்டில் மாட்டி வைப்பார். ஆனால் கடையநல்லூர் வேங்கடராமனுக்கு எப்போதும் பணமுடை இருந்து வந்ததால் ஓலை காசாகிவிட்டது! அவருடைய தன்னடக்கம் காரணமாகக் கடிதம் மேஜை இழுப்பறையில் பதுங்கிவிட்டது.

சினிமா பார்க்கும் எல்லோருக்குமே, மெட்டுக்குப் பாட்டு எழுதுவது என்பதும், பாட்டுக்கு மெட்டு அமைப்பது என்பதும் என்ன என்பது நன்றாகத் தெரியும். முன்னதை விடவும் பின்னது ரொம்பக் கஷ்டம். ஒரு டியூன் செவிக்கு இனிமை



யாக அமைந்துவிட்டால் அதற்கேற்பவும் திரைக்கதையையொட்டியும் வார்த்தைகளைத் தேடிப் போட்டுப் பாட்டு எழுதிவிடலாம். பாட்டு சுமாராக இருந்தால்கூட டியூன் காரணமாக 'சக்ஸஸ்' ஆகிவிடும். (கண்ணதாசன் போன்ற சில அபூர்வப் பிறவிகள் விதிவிலக்கு.) ஆனால், ஏற்கெனவே எழுதப்பட்ட ஒரு கவிதைக்கு மெட்டு அமைத்துப் பிரபலமடையச் செய்வது என்பது ரொம்பச் சிரமம். அதுவும்


❖ கல்கி ராஜேந்திரன் ❖



❋ மேடைக் கலைஞராக கடையநல்லூர்

கர்நாடக சங்கீதத்தில் பாடலின் உணர்ச்சிக்கு ஏற்பவும், வார்த்தைகளின் அமைப்புக்கு ஏற்பவும் சரியான ராகதாளங்களைத் தேர்ந்தெடுத்து இசை அமைப்பது கஷ்டமான காரியம். இதில் அபார வெற்றி பெற்றுள்ள சிலரில் கடையநல்லூர் வேங்கடராமன் குறிப்பிடத்தக்க ஒருவர்.

அன்னமாச்சாரி கீர்த்தனைகள் என்று சொல்கிறோமே தவிர, அவரது பல பாடல்களுக்கு ராக-தாள குறிப்புகள் ஏதும் அவர் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. கொடுத்திருந்தால் அவை நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. அவரது பாடல்களைப் பிரபலப்படுத்த வேண்டும் என்று, திருப்பதி தேவஸ்தான நிர்வாகிகள் விரும்பி, சதாசிவம் - எம்.எஸ். தம்பதியை அணுகிய போது, கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சதாசிவம், இசை அமைக்கும் பொறுப்புக்கு கடையநல்லூர் வேங்கடராமனைத்தான் தேர்ந்தெடுத்தார். வேங்கடராமன் என்ற பெயர் பொருத்தத்துக்காக மட்டும் அல்ல; பொறுப்பை நன்கு நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையும் சதாசிவத்துக்கு இருந்தது. அந்த நம்பிக்கை வீண்போகவில்லை என்பதற்கு நேதுநூரி அவர்களின் பாராட்டும், அன்னமாச்சாரி பாடல்களை எம்.எஸ். பாடக் கேட்டு ரசிகர்கள் அடைந்த பரவசமும் சான்று.



ஒருநாள், அன்னமாச்சாரியாரின் 'பாவயாமி கோபால பாலம்' எனத் தொடங்கும் பாட்டுக்கு இசை அமைக்க வேங்கடராமன் முயன்றுகொண்டிருந்தார். பல ராகங்களில் பலவாறு பாடிப் பார்த்தும் திருப்திகரமாக இல்லை. ராகம், தாளம் மட்டுமின்றி, பாடலின் கருத்துக்கு ஏற்ப பாவபூர்வமாகவும் மெட்டு அமைய வேண்டுமல்லவா? ஒன்று இருந்தால், ஒன்று இடித்தது. கடையநல்லூர் சோர்ந்து போய்விட்டார். ''நான் போயிட்டு நாளைக்கு வருகிறேன்'' என்று கூறிவிட்டு

எம்.எஸ்.ஸின் பதிலுக்குக்கூடக் காத்திராமல் விடுவிடுவென்று மாடிப்படிகளில் இறங்கிவிட்டார்.

அன்றைய கல்கி காரியாலய தோட்டம் விஸ்தாரமானது. கட்டட வாசலிலிருந்து வெளி 'கேட்' வரை ஏராளமான மலர்ச் செடிகள் பூத்துக்குலுங்கும். பசுமையான புல்வெளி கண்களைக் குளிர்விக்கும். இவற்றைப் பார்த்துக்கொண்டே நடந்தவருக்கு மனம் இலேசாகி 'பளிச்'சென்று அங்கே ஓர் இசை வடிவம் உதித்தது. கேட்டைத் தாண்டியவர், ராணுவ வீரன் போல 'அபௌட் டர்ன்' அடித்து, திரும்பி வந்து மாடிப்படி ஏறி, எம்.எஸ்.அவர்களின் இல்லத்தை அடைந்தார். ''இது நன்னா இருக்கா பாருங்கோ'' என்று சொல்லிவிட்டு, யமன் கல்யாணியில் பாடிக் காண்பித்தார்.

கேட்கும்போதே எம்.எஸ். அவர்களுக்குக் கண்கள் பனித்துவிட்டன. 'இந்தப் பாடல் பெருவெற்றி அடையப் போகிறது' என்று அந்தக்கணமே அவருக்குத் தோன்றிவிட்டது. அதற்கேற்பத்தான் ரசிகர்களும் எம்.எஸ்.ஸின் கச்சேரி கேட்க வரும்போதே, ''இன்னிக்கு எம்.எஸ். அம்மா 'பாவயாமி' பாடணுமே, நமக்குக் கேட்கக் கொடுத்து வைச்சிருக்கணுமே'' என்று எதிர்பார்ப்புடன் வருவார்கள்.

இசை அமைத்துக் கொடுத்ததுடன், தம் கடமை முடிந்துவிட்டதாக கடையநல்லூரர் கருதியதில்லை. நகாசு வேலை செய்து மெருகு ஏற்றிக்கொண்டேயிருப்பார். ரேவதி ராகத்தில் 'நா நாட்டி பதுகு நாடகமு' என்று தொடங்கும் பாடல் எம்.எஸ். ரசிகர்களுக்கு நன்கு நினைவிருக்கும். அது ரிகார்டிங் ஆகிக் கொண்டிருக்கும்போது, ஒரு 'டேக்' முடிந்ததும் கடையநல்லூரர், எம்.எஸ். அருகே வந்து, ''முதல் அடி முடிந்து மறுபடி 'நா நாட்டி' என்று ஆரம்பிக்கும் இடத்தில் இப்படி மேலே போய்ப் பாருங்களேன்'' என்று கூறி பாடிக் காண்பித்தார். எம்.எஸ்.ஸுக்குக் கோடி காட்டினால் போதாதா? அந்தக்கணமே மேல்ஸ்தாயிக்குப் போய், மின்னலாக சங்கதி உதிர்த்து, மறுபடி கீழிறங்கி வந்து பாடலைத் தொடர, அந்த இடம் தங்க ஆபரணத்தில் பதிக்கப்பெற்ற வைரமாக ஜொலித்தது. பாட்டு, இரண்டாவது 'டேக்'கில் 'ஓ.கே.' ஆயிற்று. கச்சேரிகளிலோ ரசிகர்களின் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாத 'ஆஹா'காரம் அந்த இடத்தில் நிச்சயம் ஒலிக்கும்.

"எப்போதும் எம்.எஸ். அம்மாவுக்கு சேவை செய்!"



'அன்னமாச்சாரி பாடல்களுக்கு இசை அமைத்தவர் இவர்தான்' என்று புட்டபர்த்திக்குப் போனபோது சதாசிவம், கடையநல்லூரை பாபாவுக்கு அறிமுகம் செய்துவைத்தார். பகவான், கடையநல்லூரின் தொண்டையைத் தடவி, ''எப்போதும் எம்.எஸ். அம்மாவுக்குச் சேவை செய்துகொண்டிரு'' என்றார். அந்தக் கட்டளையை, கடைய

துக்கடா... பக்கோடா!

இசை விழாக் காலங்களில் பத்திரிகை யாளர்கள் வருடா வருடம் கேட்கும் கேள்வி களாக சஞ்சய் சுப்பிரமணியம் குறிப்பிடுவன:

1. இந்த இசை விழாவில் என்ன ஸ்பெஷல்?
2. நீங்கள் கொடுக்கப்போகும் ஹைலைட்ஸ்?
3. உங்களுக்குப் பிடித்த சபா?
4. இசை விழாக் கச்சேரி-மற்ற கச்சேரி என்ன வித்தியாசம்?
5. இளம்தலைமுறையினர் கச்சேரி கேட்கிறார்களா?
6. சென்னையில் அதிகளவில் கச்சேரி நடக்கிறதா?
7. குரலை எப்படிப் பாதுகாக்கிறீர்கள்?

- குமார்



நல்லூர் தமது இறுதி மூச்சு வரை நிறை வேற்றி வந்தார்.

கடையநல்லூர் வேங்கடராமனுக்கு இத்தனை இசையாற்றல் எங்கிருந்து வந்தது என்று யாரும் யோசிக்க அவசிய மில்லை. 'செம்மங்குடியின் சீடர்' என்று சொன்னால் போதாதோ! குருவுடன் மேடையில் அமர்ந்து நிறைய கச்சேரிகளில் பின்பாட்டு பாடியிருக்கிறார், கடைய நல்லூர். தனிக் கச்சேரிகளும் செய்திருக் கிறார்.

ஒரு சந்தர்ப்பத்தில் செம்மங்குடியும் எம்.எஸ்.ஸும் சேர்ந்து பாடியிருந்த பல பாடல்களை கேஸட்டுகளில் பதிவுசெய்து விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டது. 'எஸ்ஃபீல்டு' சுந்தரமய்யர் வீட்டில் நண்பர் களின் வற்புறுத்தலுக்கு இணங்கி, இரு வரும் சேர்ந்து பாடிய கீர்த்தனைகள். சுருதிப் பெட்டி தவிர வேறு பக்கவாத்தி யங்கள் கிடையாது. ஸ்பூல் டேப்பில் பதி வாகியிருந்த இந்தப் பொக்கிஷத்தை கேஸட்டாகவும் குறுந்தட்டாகவும் வெளி யிடும்போது, பக்கவாத்தியங்களும் ஒலித் தால் எவ்வளவோ நன்றாயிருக்குமே என்ற கருத்து பேசப்பட்டது. வயலின் ஸ்ரீராம் குமாரும் மிருதங்கம் கே.வி. பிரசாத்தும் முன்வந்து, காதிலே 'ஹெட்ஃபோன்' மாட்டிக்கொண்டு பாடல்களைக் கேட்ட படியே வாசித்தார்கள். அவர்கள் வாசிப்பு 'ஸவுண்ட் டிராக்'கில் சேர கச்சேரிக் களை வந்துவிட்டது. இந்த 'மாஸ்டர் டேப்'பைப் போட்டுக் கேட்ட கடையநல்லூர், ''அம்மாவும் சரி, செம்மங்குடியும் சரி, தம்பூரா இல்லாமல் மேடைகளில் பாடி யதே கிடையாதே'' என்றார். அப்போது தான் எல்லோரும் விழித்துக்கொண்டார் கள். ''நான் போடுகிறேன் தம்புரா'' என்று கடையநல்லூர் முன்வந்தார். இரண்டு மணி நேரம், 'டபுள் கேஸட்' ஓடி முடியும் வரை தம்புரா சுருதி போட்டு, ஸவுண்ட் டிராக்கில் இணைத்து, ஒலிநாடாவை முழுமை பெறச் செய்தார். இதை, ஏதோ சாதாரண விஷயமாக எண்ணாமல் சிரத்தை யுடன் செயல்பட்டு, செம்மங்குடிக்கும் எம்.எஸ்.ஸுக்கும் தமது காணிக்கையாகக் கருதிச் செய்தார்.

இவ்வளவு இசை ஆற்றலையும் நல்ல இதயத்தையும் கடையநல்லூருக்கு அளித்த இறைவன், அவருக்குச் சில குறைகளையும் உருவாக்கிவிட்டான். அகில இந்திய ரேடியோவில் அவருக்கு ஒரு சராசரி உத் யோகம்தான் கிடைத்தது. ஆனால் அவர் செய்த காரியங்களோ பலதரப்பட்டவை. இசை அமைப்பாளர், 'ஸவுண்ட் ரிகார் டிஸ்ட்' என்பன தவிர, 'எடிட்டிங்'கிலும் கைதேர்ந்தவராக விளங்கினார். ரிகார்டிங் குக்காக வானொலி நிலையத்துக்கு வரும்

துக்கடா... பக்கோடா!

உமையாள்புரம் கே. சிவராமனின் BLOGல்...

மிருதங்கம் வாசிப்பதின் நெளிவு சுளிவுகளை, இளையதலைமுறையினருக்குப் பயன்படும்விதம் ஒரு டி.வி.டி.யை கொண்டுவர வேண்டும் என எண்ணியிருந்தேன். அந்த எண்ணம் சமீபத்தில்தான் நிறைவேறியது. நூற்றியிருபது மணி நேரங்கள் இரவு பகல் பாராமல் கொண்டு வந்திருக்கும், 'மிருதங்க சிந்தா மணி' இருபத்திரண்டு மணி நேரங்கள் ஓடக் கூடியது. ஏழு டி.வி.டி.கள் அடங்கிய இந்த சிந்தாமணியில் நான் அறுபது ஆண்டு காலம் மிருதங்கத்தில் கற்றுக்கொண்ட, விஷயங்களைச் சேர்த்திருக்கிறோம். இந்த டி.வி.டி. கர்நாடக இசை உலகுக்கு சிறிய காணிக்கை.

- குமார்



வித்வான்களுக்கு கடையநல்லூர் பக்கத்திலிருந்தாலே ஒரு தனி பலம், வந்துவிடும். ஆனால், அவருக்குக் கிடைத்த பதவியோ 'தம்பூரா ஆர்ட்டிஸ்ட்' என்பதுதான்!

இசை ஞானத்தை அள்ளித் தந்த கடவுள், அவருக்குக் குரல்வளத்தைக் கொடுக்கவில்லை. அதனால் அதிகமான கச்சேரி வாய்ப்புகள் கிடைக்கவில்லை. ஒரு மகன், இளம்பிள்ளைவாதத்தால் தாக்கப்பட்டு உடல் ஊனத்துடன் இருந்தான். மூன்று பெண்களுக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டியிருந்தது. ஆனால், இதையெல்லாம் அவரை ரொம்ப நெருக்கமாக அறிந்தவர்கள்தான் உணர்ந்தார்கள். வெளிப் பார்வைக்குக் குறை ஏதும் இல்லாதவர் போல்தான் எல்லோரிடமும் பழகி வந்தார்.

இதனால்தானோ என்னவோ, ராஜாஜியின் 'குறையொன்றுமில்லை' பாடலுக்கு இசை அமைக்கும் பெரும் பொறுப்பும் அவருக்கே வந்து சேர்ந்தது!

இந்தப் பாடல் முதன்முதலில் கல்கியில் பிரசுரமானபோது ராஜாஜி - மீ.ப. சோமு என்ற இரட்டைப் பெயர்களையும் தாங்கிதான் வெளிவந்தது. இருவரும் சேர்ந்து பல நாட்கள் கலந்தாலோசித்துத்தான், அந்தப் பாடலை உருவாக்கினார்கள். அதற்கு மெட்டமைக்கப்படும் என்றோ, எம்.எஸ். அவர்கள் அதைப் பாட, உலகளாவிய புகழ்பெறும் என்றோ இருவரும் எண்ணிப் பார்த்ததேயில்லை. சதாசிவம் கூட கடையநல்லூரரை அழைத்து பாடலைக் கொடுத்தபோது, அது இந்த அளவுக்கு வெற்றி பெறும் என்று நிச்சயம் எதிர்பார்த்திருக்க மாட்டார். ஆனால், ஏழுமலையான் சித்தம் வேறாக இருந்தது!

மிக அரிய தத்துவங்களை மிக எளிய சொற்களில் வடித்த அந்தப் பாடலுக்கு, கடையநல்லூர் வேங்கடராமன் ராகமாலிகையில் இசை அமைத்தார். எம்.எஸ். அந்த இசையை உள்வாங்கி, பக்தியில் தோய்ந்த இதயகீதமாக வெளிப்படுத்தியபோது, உலகெங்கும் தமிழர் கேட்டுச் சிலிர்த்தனர்; இன்றும் ரசித்துச் சிலிர்க்கின்றனர்.

குழந்தைகள் முதல் பெரிய வித்வான்கள் வரை பலரும் அப்பாடலைப் பாடுகிறார்கள். குழலிசைக் கலைஞர்கள், நாதசுவரக் கலைஞர்கள் ஏன், ஸாக்ஸஃபோன் கலைஞர்கள்கூட வாசித்து மகிழ்விக்கிறார்கள். கல்யாணமா, திருவிழாவா, பள்ளிக்கூட ஆண்டு விழாவா எங்கு போனாலும் 'குறையொன்றுமில்லை'தான்!

தொடர்ந்து ஒலிக்கும். எம்.எஸ். அவர்களையும் ராஜாஜி அவர்களையும் அவர்களுடன் சேர்த்து கடையநல்லூர் வேங்கடராமனையும் நினைவுபடுத்திக்கொண்டே இருக்கும்! குறையொன்றுமில்லை. ●

சிறுகதை



திரை உயரே சென்றதும் எழுந்த பலத்த கரகோஷத்தையும், நிரம்பி வழிந்த அரங்கத்தையும் பார்த்தபோது நிரஞ்ஜனிக்கு மகிழ்ச்சி ஏற்பட்ட அளவு பயமும் தோன்றியது.

இன்னும் இரண்டு அல்லது இரண்டரை மணிநேரத்துக்கு இந்த ரசிகர்களின் கவனத்தை அவள் தன் குரலால் வசப்படுத்த வேண்டும்.

நிரஞ்ஜனி பிரபலமானது கடந்த இரண்டு ஆண்டுகளில்தான். அவள் இசை உலகப் பிரவேசமே தாமதமாகத்தான் நிகழ்ந்தது.

இன்றைய சங்கீதச் சூழலில் முப்பத்தி இரண்டு வயதான நிரஞ்ஜனி தனது முப்பது வயதில், சென்னையில் சங்கப் பலகை என்று கருதப்படும் மைலாப்பூர் சாஸ்திரி ஹாலில் செய்த ஒரு கச்சேரியின் மூலம்தான் பிரபலமானாள். அதுவரை தஞ்சையில் உள்ள கருத்தட்டாங்குடிதான் அவளின் இசைக் கருவறை.



திருவையாறு தியாகராஜ உற்சவத்தில் அவள் வருஷாவருஷம் போய் தவறாமல் பாடி அஞ்சலி செலுத்துவாள். அந்த ஆண்டும் அப்படிப் பாடிவிட்டு வந்தபோது, சென்னையிலிருந்து வந்திருந்த பிரபல வித்துவான் பஞ்சநத ஐயர் அவளை அழைத்துப் பேசினார். 'இத்தனை நல்ல குரல் வளமும், ஞானமும் உள்ள உன்னை கர்நாடக சங்கீத உலகம் அறிந்து அங்கீகரிக்க வேண்டும்... நீ சென்னை வந்து என்னிடம் கொஞ்ச நாள் பயிற்சி எடுத்துக் கொள்...' என்று அன்புக் கட்டளையிட்டார்.

நிரஞ்ஜனிக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை; கணவன் கண்ணன் முகத்தைப் பார்த்தாள். கண்ணனுக்கு சங்கீத ஞானம் என்று பிரமாதமாகச் சொல்ல முடியாவிட்டாலும், மனைவி நன்



தேவவிரதன்

ரசிகன்

றாகப் பாடுகிறாள், அதை ஆதரிக்க வேண்டுமென்று தெரிந்தவன். மாமனார் - மாமியாரும் சங்கீதச் சுவை உணர்ந்தவர்கள்.

நிரஞ்ஜனி சென்னைவாசியானாள். பஞ்சநத ஐயரின் பாடங்கள் அவளுக்கு மிகப் பெரிய பலமாக அமைந்தன.

சாஸ்திரி ஹால் கச்சேரியின் சிறப்பு பலர் வாயிலாகப் பரவி, கொஞ்சம் கொஞ்சமாக வாய்ப்புகள் வரத் தொடங்கின.

நிரஞ்ஜனிக்கு சற்று வித்தியாசமான குரல். கணீரென்று வெண்கலமணி போல் அல்லாமல், சற்று ரகசியமாகப் பேசுவது போன்ற மென்மையான குரல். இந்தக் குரல் மேல் ஸ்தாயியில் சஞ்சரிக்கும் போது இனிமை தானாகவே வந்து சேர்ந்துகொள்ளும்.

அதனால்தானோ என்னவோ அவள் கச்சேரி செய்யத் தொடங்கிய ஓர் ஆண்டுக்குள், சென்னையில் உள்ள ஒரு பிரபல திரைப்பட இசையமைப்பாளர் அவளைத் தொடர்பு கொண்டு ஒரு புதிய படத்துக்கான பாடலைப் பாட அவளை அழைத்தார்.

'கனவோ கற்பனையோ' என்று ஆரம்பித்த அந்தப் பாடல் நிரஞ்ஜனி எதிர்பார்க்காமலே மிகப் பிரபலமானது. ஆனால், அதற்குப் பின் அவளுக்குத் திரைப்படப் பாடல்களின் வாய்ப்புகள் அப்படியொன்றும் வந்து குவியவில்லை. அவள் பெயரை கர்நாடக சங்கீதம் என்ற சூழலைத் தாண்டி அறிமுகப்படுத்தியது என்று சொல்லலாம்.

ஆனால், அவளுடைய திரைப்பாடல் பிரவேசம் சநாதனமான கர்நாடக சங்கீத ர்சிகர்கள் மற்றும் விமர்சகர்கள் மத்தியில் புருவங்களை உயர்த்த வைத்தன. ஓரிருவர் நேரடியாகவே

BLOG ஸ்பாட்

சுதா ரகுநாதனின்
'பட்டும் பாட்டும்'



கர்நாடக இசை வாய்ப் பாட்டுக் கலைஞர் சுதா ரகுநாதன் 'போத்தீஸ்'ஸின் ஒரு விளம்பரப் படத்துக்காக காடு, மலை, மேடு எல்லாம் ஏறி சுற்றி வந்திருக்கிறார். "ஓர் இசைக் கலைஞருக்கு மாடலிங்கெல்லாம் தேவையா?" என முணு முணுத்தவர்களைக் கூட 'அட விளம்பரப் படம் சூப்பரா வந்திருக்கே' எனப் பாராட்டியிருக்கிறார்கள். கொச்சியை அடுத்த அதிர பள்ளியில் ஒரு பாறையின் நுனியில் தம்பூராவோடு உட்கார்ந்துகொண்டு, அடர்ந்த காட்டில் இடைவிடாத தண்ணீர் சாரலை முகத்தில் வாங்கிக்கொண்டு, சில்லென்ற சுத்தமான சுதந்திர காற்றையும் சேர்த்துக் கொண்டு, பட்டுக்கான விளம்பரப் படத்தில் நடித்ததைச் சிலிர்ப்போடு பதிவு செய்திருக்கிறார்.

- குமார்

விமர்சித்தனர்; சிலர் மறைமுகமாக எச்சரித்தனர். ஆனால், 'கனவோ கற்பனையோ'வையும், அதைப் பாடிய நிரஞ்ஜனியையும் பலர் பத்திரிகை வாயிலாகவும், தொலைக்காட்சி மூலமாகவும் அறிந்துகொண்டனர்.

குறிப்பாக, பீஷ்மன் என்ற பெயரில் சங்கீத விமர்சனம் எழுதும் ஒரு ஜாம்பவான், நிரஞ்ஜனியின் இந்தப் புகழை அறவே வெறுத்தார். அவரது பேனா முனை ஊசி முனை போன்றது; மிகச் சாதுர்யமாகக் குத்துவார். 'கனவோ' அவரது விமர்சனங்களில் பாடலுக்குப் பின் கடுமை தொனிக்க ஆரம்பித்துவிட்டது.

அரங்கத்தில் கூட்டத்தில் பார்வையைச் சுழலவிட்ட நிரஞ்ஜனியின் கண்கள், இரண்டாவது வரிசையில் நடுவில் அமர்ந்திருந்த பீஷ்மனைக் கண்டதும் அதிர்ந்தன.

கண்களை மூடிக்கொண்டு தன் குருவை நினைத்துக்கொண்டாள். 'உன்னிடம் உள்ள இசை மற்றவர் மனத்தைச் சுகப்படுத்தும் ஓர் அற்புதமான கருவி... அதை உணர்ந்து செயல்படு... அது போதும்...' என்று அடிக்கடி அவர் கூறும் வார்த்தைகளை நினைத்து தியானம் செய்துகொண்டு, நாட்டை ராகத்தைச் சன்னமாக இழுத்துவிட்டு தியாகராஜரின் பஞ்சரத்னங்களுள் ஒன்றான 'ஜகதா நந்தகா'வுடன் கச்சேரியைத் தொடங்கினாள்.

ஸ்வரமும், சாகித்யமுமாக கிட்டத்தட்ட பத்து நிமிஷங்கள், ராமனின் எண்ணற்ற பெயர்கள் சங்கீதச் சரமாகக் கோக்கப்பட்டிருந்த அந்த அற்புதப் பாடலைப் பாடி முடித்ததும் அரங்கம் மீண்டும் ஒரு முறை கைத்தட்டலால் அதிர்ந்தது. அன்று நிரஞ்ஜனி பிரதானமாக எடுத்துக்கொண்ட ராகங்கள் பேகடவும், சாருகேசியும்.

பேகட ராக ஆலாபனை முடித்து, சுப்பராய சாஸ்திரியின் 'சங்கரி நீவே'யைப் பாடியபோது, நிரஞ்சனி தன் முன்னே அந்தக் காமாட்சியே பிரத்யட்சமானது போல் உணர்ந்தாள்.

சாருகேசி, நிரஞ்ஜனிக்கு மிகவும் மனத்தோடு இணைந்த ராகம். மேலோட்டமாகக் கண்டால் சிருங்காரம் ததும்புவது போல் தோன்றினாலும், அடிநாதமாக சாருகேசியை ஆழ்ந்து கேட்டால் ஒரு சோகம் இழையோடுவது தெரியும். அந்த சோகத்திலும் ஒரு சுகம் இருப்பதை நிரஞ்ஜனி பலமுறை உணர்ந்திருக்கிறாள்.

இன்று அவள் சாருகேசியை ஆரம்பித்த போது, அவளும் அறியாமல் அவளையும் மீறி ஊற்று கிளம்பியது. அது கொஞ்சம் கொஞ்சமாகப் பறந்து விரிந்து பிரவாகமாகியபோது நிரஞ்ஜனியின் சன்னமான

குரல் ராகத்தின் அழகுடனும், சோகத்துடனும் இழைந்து அவளது கண்களிலேயே நீரை வரவழைத்தது.

அதற்கு ஏற்றாற்போல், 'ஆடமோடி கலத' என்ற தியாகராஜரின் கீர்த்தனையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டாள். 'துணையும் நிழலும் நீயென்று வந்த என்னுடன் ஏன் பேசமாட்டேன் என்கிறாய்? உன்னுடைய பரமபக்தனான அனுமனிடமே நீ உன் தம்பி லட்சுமணனைத்தானே பேசச் சொன்னாய்... அப்படியிருக்கையில் நான் எம்மாத்திரம்' என்று தியாகராஜர் உருகிப் பாடிய அந்தப் பாடலின் பொருள் அந்த ராகத்தின் உயிருடன் இணைந்திருந்த சோகத்தில் ஜ்வலித்தது.

வழக்கம்போல் கச்சேரி நிறைவு பெற்றதும் உபசாரமாகத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எனப் பலரும் வந்து புன்னகையுடன் வாழ்த்து தெரிவித்துவிட்டுச் சென்றனர்.

இருந்தாலும், அன்றென்னவோ கச்சேரி முடிந்த பின்னரும் சாருகேசியின் சோகம் மனத்தில் பாரமாக உட்கார்ந்திருந்ததுபோல் இருந்தது. தனது உடமைகளைச் சேகரித்துக்கொண்டு நிரஞ்ஜனி கிளம்பினாள்.

மேடைக்குக் கீழே அவள் கணவன் கண்ணன் அவளுக்காகக் காத்துக்கொண்டிருந்தான். கூட்டம் வெகுவாகக் கலைந்துவிட்டிருந்தது. நிரஞ்ஜனி கண்ணனுடன் சேர்ந்து அவர்களுடைய கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கி நடக்கையில், திடீரென்று தயங்கியவாறே, பதினைந்து வயது இருக்கும் ஒரு பையன் வந்து நின்றான். நிரஞ்ஜனி ஒரு நிமிஷம் என்னவென்று புரியாதவளாய், நின்றாள்.

''மேடம்.. நீங்கதான் அந்தக் கனவோ கற்பனையோ பாட்டைப் பாடினவங்களா?'' என்று கேட்டான்.

அந்தச் சிறுவனைப் பார்த்தால் கட்டாயம் கர்நாடக சங்கீதம் கேட்கும் ஜாதியில்லை என்று சொல்லிவிடலாம். ஆனால் இந்தச் சபையில், இந்தக் கச்சேரிக்குப் பின்னர் இப்படி ஒருவன் வந்து நேரில் கேட்டது நிரஞ்ஜனிக்குப் புது அனுபவம்.

கொஞ்சம் திகைப்புடன், ''ஆமாம்... ஏன்?'' என்றாள்.

''எனக்குத் தெரியாது... நான் இந்த சபாவில் அதோ அங்கே டீக்கடையில் காபி போட்டுக் கொடுக்கற வேலை செய்யறவன்... யாரோ காபி குடிக்க வந்த ஒருவர்தான் எங்கிட்ட இப்பப் பாடறாங்களே இவங்க யார் தெரியுமான்னு கேட்டாங்க... நான் தெரியாதுன்



BLOG ஸ்பாட்

இசைக்கலைஞரின் புதிய பரிமாணம் – அருணா சாய்ராம்

அரங்குகளில் பாடி இருந்தாலும், 'Theatre de la Ville Paris'ஸில் நடந்த கச்சேரியைக் கேட்டுவிட்டு ஒரு ரசிகர் சொன்னதை நினைவு கூர்ந்துள்ளார் கர்நாடக இசைக் கலைஞர் அருணா சாய்ராம். ரசிகர் கூறியது இதுதான். "நீங்கள் பாடும்போது, இசைக் கலைஞராக எப்படி நீங்கள் ஓர் புதிய பரிமாணத்தை எடுத்துள்ளீர்கள் என்பதை உணர்கிறேன். உங்களின் மூலம் உங்களுக்கு சங்கீதம் சொல்லிக்கொடுத்த குருக்களைக் கேட்கிறேன். உங்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களைக் கேட்கிறேன். உங்களுக்குள் சங்கீதம் என்னும் உணர்வைப் புகட்டிய உங்கள் மூதாதையர்களைக் கேட்கிறேன். அதனால் பாடிக்கொண்டே இருங்கள். உங்களுக்குள் உங்களுடன் இவர்கள் அனைவருமே ஒலித்துக்கொண்டே இருக்கிறார்கள்."

– குமார்



நிரஞ்சனி ,'' நான் பாடின பாட்டுக்கான விமர்சனம், நேற்றே எனக்குக் கிடைத்துவிட்டது'' என்று, அந்த மக்கடைச் சிறுவனை நினைத்துக்கொண்டாள்!

னேன்.''

நிரஞ்சனி வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தாள்.

''அவர்தான் சொன்னார்... நீங்கதான் அந்த சினிமாப் பாட்டைப் பாடினவங் கன்னு... அந்தப் பாட்டு எனக்கு ரொம்பப் பிடிக் கும்... ஆனா இங்க நீங்க பாடினது ரொம்ப வேற மாதிரியா இருந்திச்சு... இன் னைக்கு ரொம்ப நேரம் ஒரு மாதிரியாப் பாடிட்டிருந்தீங்களே... அது... அது... என்ன சொல்றது... எப்படிச் சொல்றதுன்னு எனக்குத் தெரியலீங்க...'' என்ற போது அந்தச் சிறுவனின் குரல் தழுதழுத்தது.... கண்கள் பளபளத்தன.

நிரஞ்ஜனி திகைப்புடன், ''என்னப்பா... என்ன ஆச்சு...?'' என்றாள்.

''என் மனசை என்னமோ செஞ்சுது மேடம்... சந்தோஷமா இருந்தது... ஆனாகூட அழுகையும் வர மாதிரி ஆயிடுச்சு... அப்படி என்ன பாட்டுங்க அது... புரியலீங்க... ஆனா உங்க குரல், அது... அது... அந்தப் பாட்டு... எனக்கு சொல்லத் தெரி யலீங்க... உங்களைப் பார்த்து சொல்லணும்னு தோணிச்சு...''

அந்தப் பையனின் உதடுகள் நடுங்கின... கோணின... கண்களிலிருந்து இரண்டு சொட்டுக் கண்ணீர் வழிந்து கன்னத்தில் ஓடியது. அவன் தன் இரு கைகளை இணைத்து நிரஞ்ஜனியைக் கும்பிடுவதுபோல் செய்துவிட்டு, சரேலென்று இருளில் சென்று மறைந்தான்.

நிரஞ்ஜனி ஸ்தம்பித்து நின்றாள்.

கண்ணன் காரிலிருந்து 'நிரஞ் ஜனி... வா... நாழியாகிறது...' என்று இரண்டுமுறை குரல் கொடுத்த பிறகுதான் உணர்வு திரும் பியது.

மறுநாள், பத்திரிகையில் பீஷ் மனின் விமர்சனத்தைப் படித்த கண் ணன் நிரஞ்ஜனியிடம் பேப்பரை நீட்டினான்.

'அழகு இருந்த அளவு ஆழமில் லாத சங்கீதம்' என்ற தலைப்பில் அவள் கச்சேரியைப் பற்றி பீஷ்மன் எழுதியிருந்தார்.

அதைப் படித்துவிட்டு புன்னகை செய்தாள் நிரஞ்ஜனி.

''என்ன நிரஞ்ஜனி... பீஷ்மன் இப்படி எழுதி விட்டாரே... உனக்கு வருத்தமாக இல்லையா?'' என்று கேட்டான் கண்ணன்.

''நான் பாடின பாட்டுக்கான விமர்சனம் நேற்றே எனக்கு கிடைத்துவிட்டது...''

''யாரிடமிருந்து...? அங்கு வந் திருந்த கூட்டத்தை வைத்துத்தானே சொல்கிறாய்?'' என்று கேட்டான் கண்ணன்.

''இல்லை... ஒரே ஒரு ரசிகனிட மிருந்து...'' என்றாள் நிரஞ்ஜனி. ○

அருள்வாக்கு



இசைப் புராணம்!

வேத அத்தியயனம், யோகம், தியானம், பூஜை இவற்றைக் கஷ்டப்பட்டு அப்பியசிப்பதால் கிடைக்கிற ஈசுவரானுபவத்தை, தெய்விகமான ஸங்கீதத்தின் மூலம், நல்ல ராக தாள ஞானத்தின் மூலம் சுலபமாகவும் சௌக்கியமாகவும் பெற்றுவிடலாம். இப்படி தர்ம சாஸ்திரம் எனப்படும் ஸ்மிருதியைத் தந்திருக்கும் யாக்ஞவல்கிய மகரிஷியே சொல்லியிருக்கிறார். வீணா கானத்தை அவர் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்.

'அப்ரயத்னேன' - கடுமையான பிரயாசை இல்லாமலே - ஸங்கீதத்தால் மோக்ஷமார்க்கத்தில் போய்விடலாம் என்கிறார். நம் மனசைத் தெய்விகமான ஸங்கீதத்தில் ஊற வைத்து அதிலேயே கரைந்து போகச் செய்தால், கஷ்டமில்லாமல் ஈசுவரனை அனுபவிக்கலாம். நாம் பாடி அனுபவிக்கும்போதே, இந்த ஸங்கீதத்தைக் கேட்கிறவர்களுக்கும் இதே அனுபவத்தைத் தந்து விடலாம். வேறு எந்த சாதனையிலும் பிறத்தியாருக்கும் இப்படி ஸமமான அனுபவ ஆனந்தம் தர முடியாது. சங்கீதம் என்ற மார்க்கத்தின் மூலம் தங்கள் இருதயங்களைப் பரமேசுவரனிடம் சமர்ப்பணம் செய்த தியாகராஜர் போன்ற பக்தர்கள், சங்கீதமே சாக்ஷாத்காரத்தைத் தரும் என்பதற்குச் சாட்சிகளாக இருக்கிறார்கள்.

அம்பாள்தான் பிரம்மத்தின் சக்தி. நாதம் ஈசுவரன் அல்லது பிரம்மம். அம்பாள் சங்கீதத்தில் சொக்கி ஆனந்தமாயிருக்கிறாள் என்றால், பிரம்மமும் சக்தியும் வேறு வேறாக இல்லாமல் ஒன்றிய அத்வைத ஆனந்தத்தையே குறிக்கும். அம்பாள் தன் இயற்கையான கருணையைப் பொழிந்து, ஸங்கீதத்தின் மூலம் அவளை உபாஸிப்பவர்களது ஆத்மா பரமாத்மாவிலேயே கரைந்திருக்குமாறு அருளுகிறாள்.

- ஜகத்குரு காஞ்சிகாமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்



ஜி.எஸ்.எஸ்.

கருணைக் கொலை

சென்னை, அடையாறு ஆந்திர மகிள சபாவில் தங்கியவர் அனுராதா. மஸ்குலர் டிஸ்ட்ரோஃபி (Muscular Dystrophy) எனும் குறைபாடு அவரது வாழ்க்கையையே புரட்டிப்போட்டது.

''எட்டு வருடங்களுக்கு முன்புதான் இதை உணர்ந்துகொண்டேன். நடந்துக்கிட்டே இருக்கும்போது, எந்தக் காரணமும் இல்லாமல் திடீர்னு கீழே விழுவேன். உடனே எழுந்துக்குவேன். அப்புறம் எழுந்துக்க நிறைய சிரமமாக இருந்தது. பின்பு நடக்கமுடியாமல் போச்சு. நாளடைவில் நிற்கவே முடியலே. பிறகு உட்காரவும் மிகவும் கஷ்டமாப் போச்சு. இப்போதைக்குச் சக்கர நாற்காலியிலேதான் என் வாழ்க்கை ஓடுது.

என் கண்களை, நான் நினைத்தபோது மூட முடியாது. இடது மணிக்கட்டு செயலிழந்துவிட்டது. வலது விரல்களால் இயங்கமுடியாத நிலை. நினைச்சால்கூடச் சிரிக்க முடியாது'' என்று சில மாதங்களுக்கு முன்பு சந்தித்தபோது அவர் குறிப்பிட்டார்.

''நடுநடுவிலே ஒரு வலி வரும் பாருங்க, அதை அனுபவித்தால்தான் தெரியும். கொஞ்ச நாட்களுக்கு முன்னாலே தோள் இறங்கிடுச்சு. அப்ப உண்டான வலி இருக்குதே, அம்மம்மா!... என்னைக் கேட்டால், கருணைக்கொலை தப்பு இல்லேன்னுதான் தோணுது. அதை யாரும் தவறாகப் பயன்படுத்தக் கூடாது, அவ்வளவுதான். நாளைக்கே என் கதி என்ன? எனக்கு நிச்சயம் குணமாகாதுன்னு டாக்டருங்க சொல்லிட்டாங்க. அது மட்டுமில்லே. நிலைமை நிச்சயம் இன்னும் மோசமாகுமாம். அது தேவையா? எவ்வளவு செலவாகும்? அதுவும் குணமே ஆகப் போவதில்லை எனும் நிலையில், கருணைக் கொலை என்பது தப்பில்லையே! அரசு இதற்காக ஒரு சட்டம் இயற்றினால் அது என்னைப் போன்றோருக்குப் பயன் உள்ளதாக இருக்கும்!'' என்றார்.

அனுராதா, இயற்கை முறையில் இறந்துவிட்டார்.

கருணைக் கொலையின் மருத்துவப் பெயர் யுதநேஷியா. இதற்குப் பொருள் 'நல்ல சாவு.' அர்த்தம்தான் கொஞ்சம் மாறி விட்டது 'நல்ல கொலை' என்பது போல்.

நெதர்லாந்து, பெல்ஜியம், ஒரேகான் - இந்த மூன்று இடங்களில் கருணைக் கொலை சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டிருந்தாலும், கருணைக் கொலை பற்றிய விவாதம் இன்று நேற்று பிறந்ததல்ல.

கருணைக் கொலை என்பதற்கும் தற்கொலைக்கு உதவுதல் (Assisted Suicide)

என்பதற்கும் சட்டத்தின் கோணத்தில் மெல்லிய வித்தியாசம் உண்டு. நோயாளியின் இறுதிச் செயலைப் பொறுத்து இது வேறுபடும். நோயாளியின் விருப்பப்படி டாக்டர் விஷ ஊசியை ஏற்றினால், அது கருணைக் கொலை. டாக்டர் கொடுக்கும் விஷத்தை நோயாளியே உட்கொண்டால் அப்போது டாக்டர் தற்கொலைக்கு உதவியவராகிறார்!

சட்டம் அனுமதிக்கா விட்டாலும், நீண்டநாள் கோமாவில் கிடப்பவரின் உடலில் செருகப்பட்ட உணவு மற்றும் மூச்சுக் குழாய்களை, டாக்டர் நீக்கிவிடுகிற அளவில் கருணைக் கொலையை பல நாடுகள் கண்டுகொள்வதில்லை. ஆனால், விஷம் கொடுத்தால் கொலைதான் என்று உறுதியாய்ச் சொல்கின்றன.

துவரிடம், 'நான் அமைதியாக இறக்க விரும்புகிறேன். அதற்கு ஒரு மருத்துவராக உதவி செய்யுங்கள்' என்று கெஞ்சினார். ஹில்லியின் மனத்தை மாற்ற பலவிதங்களில் முயற்சி செய்தார் அந்தப் பெண் டாக்டர். பலன் இல்லை. மருந்து எதையும் உட்கொள்ளவும் மறுத்துவிட்டார் ஹில்லி.

தம் சக மருத்துவர்கள் ஏழு பேரிடம் ஆலோசனை கேட்டார் அந்த மனநல மருத்துவர். 'ஹில்லியைக் குணப்படுத்துவது முடியாத காரியம்' என்று ஒரே குரலில் கூறிவிட்டனர்.

கடினமான தீர்மானத்துக்கு வந்த மனநல மருத்துவர், இருபது தூக்க மாத்திரைகளையும் விஷத்தன்மை கொண்ட திரவத்தையும் ஹில்லிக்கு அளித்தார். அமைதியாக உயிர்நீத்தார் ஹில்லி.

மனநல மருத்துவர் மீது வழக்குத்

செய்யலாமா?



நெதர்லாந்தில் மட்டும் இந்த இரண்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன. 2002ல் இது சட்டமானது.

ஹில்லி பாஸ்ஷடர் என்ற பெண்மணி வாழ்க்கையில் நிறைய துன்பங்களை அனுபவித்தவர். குடிகார, கொடுமைக்கார கணவனுடன் பல வருடங்கள் தாக்குப் பிடித்து, பின் ஒருவழியாக விவாகரத்துப் பெற்றார். இருபது வயதான அவரது மூத்தமகன் தற்கொலை செய்துகொண்டான். எஞ்சியிருந்த ஒரே மகன் நுரையீரல் புற்றுநோயால் இறந்தான்.

வாழ்க்கையில் பிடிப்பிழந்த ஹில்லி ஒரு மனநல மருத்



டாக்டர் நோயாளி உடலில் விஷ ஊசி ஏற்றினால், கருணைக் கொலை. விஷத்தை நோயாளிக்கு அருந்தக் கொடுத்தால், தற்கொலைக்கு உதவுகிறார்.

தொடுக்கப்பட்டது. ஆனால் நெதர்லாந்து நீதிமன்றமோ 'டாக்டர் குற்றமற்றவர்' என்று தீர்ப்பளித்தது.

இதைத் தொடர்ந்து உலகெங்கிலும் பரபரப்பான விவாதம் நடைபெற்றது. கருணைக் கொலையை டாக்டர்கள் செய்யலாமா?

மற்றொரு சம்பவமும் அந்த நாட்டில் நடைபெற்றது. படுக்கையில் வீழ்ந்த தம் அம்மாவை, போஸ்ட்மா என்ற டச்சு மருத்துவர் கருணைக் கொலை செய்தார். வழக்கம்போல் இதை அங்கு யாரும் கண்டுகொள்ளாமல் போயிருப்பார்கள். ஆனால், தமது செயலைப் பகிரங்கப்படுத்தினார் அந்த மருத்துவர். இதற்குக் காரணம், கருணைக்கொலை தொடர்பான சட்டம் மாற்றப்பட வேண்டும் என்ற அவரது எண்ணம்தான். அப்போது (1973) கருணைக் கொலைக்கு அதிகபட்சமாக 12 வருட சிறைத்தண்டனை உண்டு என்றாலும், நீதிமன்றம் அவருக்கு ஒரு வார சிறைத்தண்டனை மட்டுமே அளித்தது. கருணைக் கொலை தொடர்பான விவாதங்கள் சூடுபெற்றன. நாளடைவில் சட்டம் மாற்றப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் கருணைக் கொலை சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்டுள்ளதாகச் சிலர் நினைக்கிறார்கள். 1995ல் அந்த நாட்டின் வடக்கு எல்லைப் பகுதியில் இது சட்டமானது என்றாலும், ஆஸ்திரேலிய மருத்துவக் குழுவும் இதை எதிர்த்ததால் அந்தச் சட்டம் வாபஸ் பெறப்பட்டது.

சுவிட்சர்லாந்து சட்டம் 'சுய நலத்துக்காக' கருணைக் கொலை செய்பவர்களுக்கு மட்டும் ஐந்து வருட அதிகபட்சத் தண்டனை அளிக்கிறது. அதாவது, சுயநலமற்ற கருணைக் கொலை சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை என்றாலும், அது தண்டனைக்கு உரியதல்ல!

இந்தியாவில், 'தற்கொலை செய்ய முயற்சித்தால் தண்டனை' என்ற இந்திய பீனல் கோடின் 307-ம் பிரிவை சில வருடங்களுக்கு முன் நீக்கியிருக்கிறார்கள். ஆனால், டாக்டர் கருணைக் கொலை செய்வதை நம் சட்டம் அனுமதிக்கவில்லை.

சட்டம் இருக்கட்டும்; நடைமுறையில் சத்தம்போடாமல் கருணைக் கொலைகள் நம் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றனவா? விசாரித்துத் தகவல்களைத் திரட்டியபோது...

(தொடரும்)

உன்னதம்!

ஜெயபாஸ்கரன்

எனது பயணம் ஒன்றில்
திடீரென தென்பட்ட
மலைத் தொடர்களின்
தோள்களில் தொங்கிய
முகிலினங்களைத் தழுவியபடி
கண்கள்வழி சிலிர்த்தது மனசு.

சாலையின் விளிம்புகளில்
மஞ்சள் காடென கிடந்த
சூரியகாந்தி தோட்டத்தை
எதிர்பாராத வேளையில்
பார்க்க நேர்ந்தபோது
பரவசங்களின் ஆதிக்கம்

தேனி நகருக்கு அருகே
வீரப்ப அய்யனார் கோயில்
காட்டருவியில் குளித்தேன்
ஏகாந்த அனுபவம்.

வாகனங்களில்
வளைந்து வளைந்து
மலையேறியபோது
செங்குத்தாக சிலிர்த்து நின்ற
மரங்களை
சிப்பாய்களெனக் கூறி
சிரித்துக் கொண்டேன்

கரும்புத் தோட்டத்தில்
விவசாயிகள்
வெல்லம் காய்ச்சுகிற
வாசனையைக் கடந்தபோது
நெகிழ்ந்து மகிழ்ந்தது
நுரையீரல்.

அடர்ந்த காடொன்றில்
வேரில் பழம்பறித்து
அதே மரத்தின் கிளையில்
தேனெடுத்துத் தோய்த்து
பலாச்சுளைகளை
உண்ட தருணம்
உலக இன்பங்களின்
உச்சம்...

இவையனைத்தையும்
இடது கையால்
ஒதுக்க வைத்தன
எங்கிருந்தோ மிதந்து வந்த
தவிலும் நாதமும்!




நியூஸ் ஸ்டேஷன்

வெள்ளை மாளிகையில் ஷகீரா!

பாரக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்கும் நாளை எதிர்நோக்கி பாப் ரசிகர்கள் காத்திருக்கிறார்கள். காரணம், அன்றைய தினம் வெள்ளை மாளிகையில் இசை நிகழ்ச்சி நடத்த ஷகிராவை அழைத்திருக்கிறாராம் ஒபாமா.

'தேர்தலின்போது என்னை ஆதரித்த ஷகிராவுக்கு ஒரு சின்ன மரியாதை' என்று தனது அழைப்புக்கு விளக்கம் கொடுத்திருக்கிறார் ஒபாமா.



இசைக்கு மயங் காதவர்களும் உண்டோ?

ஆனால், ஒபாமாவையும் தாண்டி அமெரிக்காவில் இன்னொரு சூறாவளி சுழன்றடித்துக் கொண்டிருக்கிறது. அதன் பெயர் பிரிட்னி ஸ்பியர்ஸ்.

இந்த ஆண்டு இணையத்தில் அதிகமாகத் தேடப்பட்டவர் பிரிட்னிதான். அதற்கு அடுத்த இடம்தானாம் ஒபாமாவுக்கு.

டிசம்பர் இரண்டாம் தேதி தனது இருபத்தியேழாவது வயதில் அடியெடுத்து வைத்திருக்கிறார் பிரிட்னி. 'சர்க்கஸ்' என்ற அவருடைய புதிய ஆல்பத்தின் பாடல்களுக்கு ஏற்ற வீடியோவைத் தயாரித்துத் தயாராக வைத்திருந்தார். வெளியிடுவதற்கு முன்பே விபரீதம் நிகழ்ந்து விட்டது. எப்படியோ இணையத்தில் கசிந்து விட்ட வீடியோ, இரண்டே நாட்களில் எழுபது லட்சம்பேரைச் சென்று சேர்ந்திருக்கிறது.



அந்த வீடியோ ஆல்பத்துக்காக மீண்டும் படப்பிடிப்பு நடத்தப் போகிறாராம் பிரிட்னி. ஒரே பாடலுக்கு இரண்டு ஆட்டம், இசை ரசிகர்களுக்குக்(?) கொண்டாட்டம்.

இணையத்தில் கசிந்த காட்சிகளில் தீ வளையத்துக்குள் பாயும் ரிங் மாஸ்டரைப்போல் ஆடையணிந்திருக்கிறார் பிரிட்னி. மடோனாவின் பாதிப்போ?

அரை நூற்றாண்டை எட்டிவிட்ட பின்னாலும் மடோனாதான் பாப் பாடகர்கள், ஹாலிவுட் நட்சத்திரங்கள் என யாவருக்கும் ரோல்மாடல்.



மைக்கேல் ஜாக்சன் மற்றும் மாறுவதிலிருந்து, ஏஞ்ஜெலினா ஜூலி தத்தெடுப்பதுவரை அனைத்துக்குமே பிள்ளையார் சுழி போட்டது அம்மணிதான்.

(கொசுறு - மைக்கேல் ஜாக்சன் தன்னுடைய சுயசரிதையை

எழுத ஆரம்பித்துவிட்டார், தலைப்பு 'காண்டக்ட் மியூசிக்.')

அதுசரி... மடோனா எப்படி இருக்கிறார்? இன்னும் அவர் பப்பராஸிகளிடம் மாட்டிக்கொண்டுதான் தவிக்கிறார்.

பேஸ்கட் பால் வீரர் அலெக்ஸ் ரோட்ரிக்யூஸ் என்பவரோடு சேர்ந்து தனி வீட்டில் தங்கியிருக்கிறார் என்று பரபரப்புப் பேச்சு. ஆனால், அலெக்ஸோ 'உங்க விளையாட்டுக்கு நான்தான் கிடைச்சேனா? நாங்க ரெண்டு பேரும் நண்பர்கள்... அவ்வளவுதான்' என்று தானே முன்வந்து தன்னிலை விளக்கம் கொடுத்திருக்கிறார்.

பாப் உலகின் அடுத்த ஹாட்டஸ்ட் தகவல், பாரிஸ் ஹில்டனின் அடுத்த ஆல்பம் ரெடி என்பதுதான். இன்னும் பெயர் வைப்பது மட்டுமே பாக்கி. தயாரிப்பது, வெளியிடுவது எல்லாமே ஹில்டனின் சொந்தக் கம்பெனி. பொழைக்கத் தெரிந்த பொண்ணாச்சே?

– ஸாந்த்







வளர்ச்சி

''மானாமதுரை மகாதேவன் இப்போ வெளுத்து வாங்கறான் பார்த்தீரா?''

''நம்ம பையன் ஸார் அவன். எனக்கு பெர்ஸனலா தெரியும். இந்த வருஷம் எல்லா சபாலேயும் பாடறான். பெண்டாட்டி வந்த அதிர்ஷ்டம்னு சொல்றாங்க. நான் ஒத்துக்க மாட்டேன்.''

''பின்னே? வளர்ச்சிக்குக் காரணம் பயிற்சியா?''

''இல்லே குரு பெயர்ச்சி. பழைய குருவை விட்டுட்டு நான் சொன்ன குருவைப் பிடிச்சான். இப்போ எங்கேயோ போயிட்டானே!''

சங்கீதத்தில் பழம் தின்று கொட்டை போட்ட இரண்டு பெரிசுகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஜம்புநாத்

காலச் சக்கரம்

மூன்று நாளாக பத்ரி குழம்பிக் கொண்டிருந்தான்; கல்யாணியா, வசந்தாவா, ரஞ்சனியா என்று. ஜோசியர் மூன்று ஜாதகங்களையும் ஓ.கே. செய்திருந்தார்! ஃபோட்டோக்களில் மூன்று பேரும் ஜோர். நேரில் சந்தித்தபோது அவனுக்கு ஏற்றவர்களாக இருந்தார்கள். யாரைத் தேர்ந்தெடுப்பது?


அகாடமிக்குக் கிளம்பும் முன் அவனுக்கு ஒரு யோசனை. 'இன்னிக்கு சஞ்சய் செய்யப் போற கச்சேரியில் இவர்கள் பெயருடைய ராகத்தில் எதை முதலில் பாடுகிறாரோ அதை சிக்னலாக எடுத்துண்டு, அந்தப் பெண் பிடிச்சிருக்குன்னு அப்பா அம்மாகிட்டே சொல்லலாமே' என்று நினைத்துக்கொண்டான்.

அன்று சஞ்சய் ஆரம்பித்த வர்ணம் கல்யாணியில்.

முடிவுடன் வீட்டுக்கு வந்தவனிடம் அவன் அப்பா சொன்னார்.

''மூணு பேர் வீட்டிலிருந்தும், டூ வீலர் இருக்கிற பையன் வேண்டாம். கார் கட்டாயம் இருக்கணும்னு ஒரே மாதிரியா மெயில் கொடுத்திருக்காங்க. நம்ம வீட்டிலே மருமகளுக்குத்தானே இடம் இருக்கு. காருக்கு இல்லையேடா.''





ஒரு சோறு

பெண் பார்க்கும் படலம். மெது பகோடாவும், காசி அல்வாவும், கடையிலிருந்து வாங்கப்பட்டவை.

பையனின் மாமா, ''பெண்ணை வரச் சொல்லுங்களேன்!'' என்கிறார்.

பாயில் வந்து அமர்ந்த சர்மிளியின் பின்னால் குட்டித் தோழி; தம்புரா போட.

''ஸ்ரீதருக்கு கர்நாடிக் மியூசிக்னா உசிர், நீ ரேடியோலே எல்லாம் பாடறயாமே. கமான் ரெண்டு மூணு பாட்டு பாடு, நிறைய டைம் இருக்கு.''

மோகன வர்ணத்தில் ஆரம்பித்து, சுருக்கமா கரகரப்பிரியாவை ஆலாபனை செய்து பகல நிலபடியை அசத்தலாகப் பாடிக் கொண்டிருக்கிறாள். சுஸ்வரம்.

கண்களை மூடித் தலையை ஆட்டிக் கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீதரின் அப்பா, திடீரென்று ரெக்ஸின் பையைக் கக்கத்தில் அடக்கிண்டு எழுந்து வெளியே போய்விடுகிறார்.

திகைத்த எல்லோரையும் பார்த்து மாமா சொல்கிறார். ''கவலைப்படவேண்டாம். மியூசிக் கிரிட்டிக் இல்லையா. சபாவிலிருந்து இப்படிப் பாதியிலே கிளம்பிப் போய்ப் பழக்கம். நீ பாடும்மா. ஆலாபனை முடிஞ்ச உடனேயே, 'பிரமாதம் எனக்கு ஓ.கே.'ன்னு ரகசியமா சிக்னல் குடுத்துட்டார்.'' ○



தெரியுமா?

கணவன் பக்கம் சாய்ந்து கீதா கேட்கிறாள்.

''சுதா, கட்டிண்டு இருக்கிற புடைவை என்னன்னு தெரியுமா?''

''தெரியாது.''

''பொச்சம்பள்ளி, நெக்லஸ்?''

''தெரியாது.''

''சோக்கர், சூப்பரா ஜொலிக்கிறது இல்லே? காதிலே?''

''சுத்தமா தெரியாது.''

''டைமண்ட், டிபேரா இருக்கணும். ஜொலிக்கிறது பாருங்க. அப்புறம்...''

''அதெல்லாம் விடு கீதா, கச்சேரி கேக்கத்தானே நீட்டி முழக்கிண்டு வந்தே. சுதா பாடற ராகம் என்ன? தாளம் என்ன? யாரோட சாகித்தியம்னு தெரியுமா?''

''ஹூக்கும். தெரிஞ்சு என்ன ஆகப் போறது? சுதா போட்டுண்டு இருக்கிற நெளி மோதிரம் கல் வெச்சதா? இல்லையான்னு பார்த்துச் சொல்லுங்க. மூக்குக் கண்ணாடியை மறந்துட்டேன்.'' ○



தமிழகத்தைவிட்டு ஒரு வழியாக 'டாட்டா, பை பை' சொல்லிவிட்டு மழையும் புயலும் விடை கொடுத்துச் சென்றுவிட்ட அந்த நேரத்தில், இனிய இசை மழையில் நனைய தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரிக்குள் காலடி எடுத்து வைத்தோம்...

''இசையே ஒரு சுவாரஸ்யமான விஷயம்தான். இசை பயில்கிற எங்களுக்குள்ளேயும் சுவாரஸ்யமான விஷயங்கள் எவ்வளவோ நடந்திருக்கு. எதைச் சொல்ல எதை விட....?'' என்ற பலத்த பீடிகையோடு பல்லவி பாட ஆரம்பித்தார் புவனேஸ்வரி, ''அப்ப நான் சங்கீதம் பயிலும் முதலாம் வருஷம். என்னோட தோழி ஒருத்தி மும்பையிலேருந்து இங்க வந்து சேர்ந்தா. அவளுக்குத் தமிழ் சுத்தமா படிக்கத் தெரியாது. அதனால எல்லா பாட்டுக்



ரங்களின் கூட்டணி!

களையும் englishல எழுதி வெச்சுண்டு தான் பாடுவா. ஒருவாட்டி கரஹரப்ரியா ராகத்துல 'மாய வித்தை செய் கிறான்'ங்கற பாட்டு கத்துண்டு இருந் தோம். சரணத்துல, 'உண்டு பண்ண வைக்கிறான்' அப்படீன்னு ஒரு லைன் வரும். இவபாட்டுக்கு 'குண்டு பண்ணி வைக்கிறான், கொண்டு கொண்டு போகிறான்' அப்படின்னு பாட ஒரே சிரிப்புதான். கர்நாடக சங்கீதத்துல லிரிக்ஸ் ரொம்ப முக்கியம் இல் லையா?'' என்ற கேள்வி எழுப்பிய வரை, ''ஆமாமாம், கென்னடி பாட்டுக் குள்ள நுழைஞ்ச கதையும் இப்படி ஒரு லிரிக்ஸ் சம்பந்தப்பட்டதுதான்'' என்று பல்லவியில் மேலும் சில சங்கதிகளைப் போட்டுத் தொடர்ந்தார் மீனா.

'''ராமனுக்கே மன்னன் முடி தரித் தானே' என்ற ஒரு பிரபலமான பாட்டைக் கேட்டிருக்கீங்களா? அதுல 'பாமரமே உனக்கு என்னடி பேச்சு'ன்னு ஒரு வரி வரும். எங்க க்ளாஸ்ல இந்த வரியை



நாங்க எல்லாருமா பாடும் பொழுது, 'பாமரமே உனக்கென்னடி பேச்சு'ன்னு சேர்த்துப் பாடிட்டோம். உடனே எங்க பாட்டு டீச்சர், 'என்ன ஜான் கென்னடியை எல்லாம் க்ளாஸுக்குள்ள கூப்பிடறீங்க. அவரு எப்பயோ போய் சேர்ந்தாச்சு'ன்னு ஜாலியா ஒரு கமென்ட் அடிச்சாங்க... ஒவ்வொருமுறை இந்த வரியைப் பாடும்போதும் அவங்க சொன்ன கமென்ட் தான் ஞாபகத்துக்கு வரும்'' என்றார்.

''இருங்க இருங்க நம்ம க்ளாஸ் ஸ்டூடண்ட் ஒருத்தன் சூப்பரா 'க' பிடிச்ச கதையைக் கொஞ்சம் கேளுங்க. ஒரு தடவை க்ளாஸ்ல மோஹனம் வர்ணம் நடந்துக்கிட்டு இருந்தது. மோஹனத்தோட மெயின் ஸ்வரமே 'க'தான். ஆனா ஒரு பையன் மட்டும் தப்பான 'க' பாடிக்கிட்டே இருந்தான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ஸார், 'உன் 'க' எங்கே?'ன்னு கேட்க அப்பாவியா அந்தப் பையன், 'இங்கே'ன்னு வர்ண புக்ல இருந்த 'க'வைக் காமிச்சான்'' என அனுபல்லவி பாடினார் சமயகுமார்.

''இது ஒரு பக்க வாத்திய காமெடி'' என பக்காவாகப் பேச ஆரம்பித்தார், சுகன்யா. ''நான் முதன்முதலா வயலின் க்ளாஸுக்குப் போனபோது சுத்தமா 'ஸா'ங்கற ஸ்வரமே பிடிக்க வரல... ரொம்ப நேரம் ட்ரை பண்ணிக்கிட்டே இருந்தேன். அப்பவும் தோல்விதான். உடனே வயலின் மாஸ்டர், 'ஏம்மா உனக்கு 'ஸா'வே வராதா?'ன்னு கேட்க, 'சார் நம்மள்ள யாருக்குமே சாவே அவ்வளவு சீக்கிரத்துல வரக்கூடாது ஸார்'ன்னு நான் சொல்ல, சீரியஸா போய்க்கிட்டு இருந்த க்ளாஸ் காமெடியா மாறிப்போச்சு'' என 'ஸா'த்வீகமாகப் பேசினார்.

பார்வையற்ற மாணவரான செல்வம், ''ஒரு கச்சேரில நான் முதல் வரிசைல உட்கார்ந்துண்டு இருந்தேன். பாடகர், ஸ நி பா, பா நி ஸன்னு பாடிட்டு, நீ பா ஸா, நீ பா ஸான்னு திரும்பத் திரும்ப பாடிக்கிட்டே இருந்தார். நான் எழுந்து, 'ஐயா ரிசல்ட் இன்னும் வரலை. ரிசல்ட் வந்தப்பறம் சொல்லி அனுப்பறேன்'னு சொல்லிட்டேன்'' எனச் சொல்ல, ''ஹாஹாஹா'' என சங்கீத சரணம் இசைத்தனர் மாணாக்கர்கள்.

''இருங்க இருங்க மங்களமா முடிச்சிடறோம்... ஓம் மங்களம், ஓங்கார மங்களம்ன்னு ஒரு பாட்டு. அதுல லாஸ்ட்ல மா மங்களம், வா மங்களம்ன்னு வரும். என் க்ளாஸ்ல மங்களம்ன்னு ஒரு பொண்ணு படிச்சிண்டு இருந்தா. நாங்க அந்தப் பாட்டைப் பாடும்பொழுதெல்லாம், வா மங்களம், எப்ப வர்ற மங்களம்ன்னு அவளைப் பார்த்துப் பாடுவதைப் பார்க்க கேட்க ரொம்ப ஜோக்கா இருக்கும்'' என்றனர் ஸ்வரங்களின் கூட்டணியாய்...

– நளினி சம்பத்குமார்

படங்கள்: குமார்



தோழர்களுடன் வெற்றிகரமாக உடன்பாடு கண்டுவிட்ட ஜெ., இரண்டு கம்யூனிஸ்டுகளுக்கும் தலா இரண்டு இடங்கள் தருவதாக உறுதியளித்திருக்கிறார். ஆனால், மார்க்லிஸ்ட் தோழர்களுக்குத் திருப்தியில்லை. இன்னும் ஒரு இடத்துக்காகப் போராடுகிறார்கள். இந்த நிலையில் தாம் அமைக்கும் மகா கூட்டணி, தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியை நாற்பது இடங்களிலும் தோற்கடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார் ஜெ. அப்போதுதான் மாநில தி.மு.க அரசையும் கோட்டையை விட்டு அனுப்ப முடியும் என்று நினைக்கிறார். எனவே கூட்டணியை இன்னமும் பலமாக்க விஜயகாந்துக்கு வலை வீசுகிறார். ஏழிலிருந்து பத்து இடங்கள் விஜயகாந்துக்குத் தரத் தயாராக இருக்கிறார் ஜெ. விஜயகாந்தை வளைத்துப் போட தோழர்களும் உதவி புரிகிறார்கள். அப்படி விஜயகாந்த் வராவிட்டால் மருத்துவர் அய்யா இருக்கவே இருக்கிறார் என்கிறது போயஸ்தோட்டம். தனது குறி தமிழ்நாடுதான் என்று செயல்படும் விஜயகாந்த், இடைக்கால ஏற்பாடாக பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வோடு கூட்டணி அமைத்தால் என்ன என்று யோசிக்கத் துவங்கியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் எந்தக் காரணம் கொண்டும் அ.தி.மு.க.வை வளர்த்துவிடக் கூடாது என்றும், பின்னால் அதைச் சமாளிப்பது கஷ்டம் என்றும் கேப்டனுக்குச் சொல்லப்பட்டு வருகிறதாம்.

● சிதம்பரம் காங்கிரஸ் மேலிடத்தில் செல்வாக்கு பெறுவது கண்டு படபடப்புடன் இருக்கிறது வாசன் தரப்பு. பாராளுமன்ற சீட்டு பகிர்வில் தனது தரப்பு தோழர்களுக்கு இந்தமுறை சீட்டு கிடைப்பது மிகவும் கஷ்டம் என்று நினைக்கிறார் வாசன். ஏற்கனவே இரண்டு, மூன்றுமுறை பாராளுமன்ற உறுப்பினராக இருந்துள்ள வாசன் தரப்பு பிரமுகர்கள் சிலருக்கு சீட்டு கொடுக்கக்கூடாது என்று மற்ற கோஷ்டிகள் பிடிவாதமாய் நிற்கின்றன. ''த.மா.கா என்ற தனி கச்சேரியை மீண்டும் துவக்கினால் என்ன?'' என்ற எண்ணமும் சிலருக்கு இருக்கிறது. ''ப.சிதம்பரத்துக்கு காங்கிரஸ் மேலிடத்தில் உண்மையில் செல்வாக்கு கிடையாது., ஆதலால் அவரைப் பற்றி கவலை இல்லை'' என்கிறது வாசன் தரப்பு கோஷ்டி.

– ஸ்ரீநி

அசோகாவுக்கே அல்வாவா?

(பட்டிமன்ற நடுவர் ஜாமூன் சுப்பையா, தம்முடைய டிஸைனர் நமுட்டுச் சிரிப்புடன் உரையைத் தொடங்குகிறார்)

ஜாமூன்: அன்புப் பெரியோர்களே! அல்வாப் பிரியர்களே! அசோகா அல்வாவுக்குச் சொந்தம் கொண்டாடி, ரெண்டு பேர் ஜாரிணியால் மிரட்டிண்டு விவகாரம் பண்ணறாங்கய்யா. ஒருத்தரு ஜீரா மணி; மத்தவரு பூந்தி கண்ணப்பா. ரெண்டு பேரும் ஒண்டிக்கு ஒண்டி விவாதம் பண்ணப் போறாங்கய்யா. மொதல்லே ஜீரா மணி வாராரய்யா. இவரு சாதாரண ஆளா? அரைமணியில் ஆயிரம் பேருக்கு, பவர் கட் இருட்டிலேயே அல்வா கிளறின கிச்சன் பாதுஷாயா. வாங்கய்யா வந்து கிளறுங்க.

ஜீரா : தலைவர் அவர்களே! எதிர்க்கட்சி கண்ணப்பாவுக்கு அசோக சக்கரவர்த்தியைப் பத்தி என்ன தெரியும்? அசோகா பாக்கைப் பத்திக்கூடத் தெரியாது. அசோகர் என்ன அல்வாவா கிளறினார்? இல்லையே. இருந்தும் புதுசா கிளறின அல்வாவுக்கு அசோகா அல்வா என்று பெயர் ஏன்? கலிங்கராஜாவோடு போட்ட சண்டையில் பல பேர் மாண்டதைப் பார்த்து குழிப்பணியாரமா மனம்வெந்து, அசோகர் புத்தமதத்தைத் தழுவித் துறவியானார். துறவியின் ஆடை நிறம் காவி. ஏறக்குறைய அல்வா நிறம் போல. அதன் நினைவாத்தான் அசோகா அல்வான்னு பேரு வெச்சேன். ஹூம்! இந்த ஒரிஜினல் திருநெல்வேலிக்காரனின் அல்வா உரிமையையா இருட்டடிப்பதா?

ஜே.எஸ்.ராகவன்

ஜாமூன் : போட்டாரய்யா ஒரு போடு! 'நெய்வேலிக்காரன்கிட்டே நிலக்கரிக்குச் சொந்தம் கொண்டாடாதே'ன்னா எப்படீன்னு கேட்டார்யா. எதிர்வாதம் பண்ண பூந்தி கண்ணப்பா வாராரய்யா. இவரும் இளைப்பட்டவர் இல்லைய்யா. மொதப் பந்தி ஓடிண்டு இருக்கச்சேயே, ரெண்டாவது பந்திக்கு பூந்தி பண்ணி சாதிச்சவர்யா. வாங்கய்யா. எதிர்



ஸைடு வாதத்தை அல்வாவாத் துண்டு போடுங்கய்யா.

கண்ண: தலைவர் அவர்களே, 'ஹல்வா'ங்கறது அரபி வார்த்தை. இதிலே திருநெல்வேலி எங்கே வந்தது? கையிலே கரண்டி புடிச்ச கலைஞர்கள், முழு சோற்று மூட்டையை அரைக் கரண்டி தயிர் பச்சடியிலே மறைக்கக்கூடாது. தஞ்சாவூர்க் காரனான நான் சொல்றேன். சீனிவாச அய்யர், வைத்தியநாதனுக்கு முன்னாடி செம்மங்குடி, குன்னக்குடியைச் சேர்க்காம சொல்றது எவ்வளவு தப்போ, அதேமாதிரி திருவையாறு அசோகா அல்வாவை, மரியாதை இல்லாம, மொட்டையா அசோகா அல்வான்னு சொல்றது அபச்சாரம். என்னோட திருவையாறு அசோகா அல்வாவிலே இருக்கிற அசோகா சமஸ்கிருத வார்த்தை. அதுக்கு அர்த்த ம் கவலை இல்லாதவர்னு. அல்வாவை குடும்பஸ்தனா, ஆனந்தமா, கவலை இல்லாம ஸ்பூன் ஸ்பூனா முழுங்கணும். சந்நியா

ஜாலி ஸ்டோர்ஸ்

சிக்கு அல்வா எதுக்கு? அக்காரவடிசல் எதுக்கு? அஞ்செழுத்தும் அரோகராவும் போறுமே.

ஜாமூன்: அப்படி வாங்கய்யா. கேள்வி அசோகா அல்வாவை யாரு கண்டு பிடிச்சதுங்கிறது. அமெரிக்காவை எடுத்துக்கங்கய்யா. கொலம்பஸ் கண்டுபிடிச்சார்னு சொன்னாலும், சிலர் இல்லேன்னு சொல்றாங்க. யாரு கண்டுபிடிச்சா என்னன்னு கவலைப்படாம, அங்கே குடியேறின மக்கள் நிதிச்சரிவு காலத்திலும் ஒத்துமையா இருக்காங்கய்யா.

ஒண்டிக்குஒண்டியாப் பேசி மோதிண்ட ஒபாமாவும் மெக்கெயினும் கூட, தேர்தலுக்கு அப்புறம் 'நீயாட நானாட' ஜோடியா கைகோத்து அன்னியோன்யமா நிக்கறாங்கய்யா. அதேமாதிரி அசோகா அல்வாவைக் கண்டுபிடிச்சது யாருன்னு மல்லுக்கு நிக்காம, தொடர்ந்து அதைத் தரமா வழங்கலேன்னா எலிமினேட் ஆகி விடுவீங்கய்யா. அல்வாங்கிற வார்த்தையைச் சொல்லிப் பாருங்க. உதடுகள் ஒட்டாது. கிண்டற அல்வாவையும் உதடுகளைப் பச்சக்குனு போஸ்டர் பசையா ஒட்டி விடாமப் பார்த்துக்கங்கன்னு சொல்லி வணங்கி அல்வாத் துண்டா வழுக்கிண்டு போயிடறேன்யா. ●





அன்புநிறை பிரகாஷ்! நான் வித்யா... அன்று திருமண மண்டபத்தில், உன்னிடம் பேசவேண்டும் என்று நினைத்ததையெல் லாம் இங்கே எழுதப்போகிறேன்...

அந்தத் திருமணத்தில் உன்னைப் பார்ப் பேன் என்று நினைக்கவே இல்லை. மிக அருகில் இருந்து, காலத்தால் விலக்கப் பட்டவர்கள் திடுமென நேரில் பார்ப்பது சங்கடம். அன்று உன்னைப் பார்த்ததும், எனது ஞாபக நதி பின்னோக்கி ஓடத் தொடங்கிவிட்டது...

ஒரு மார்கழியின் பனித்தேதியில்தானே உன்னைச் சந்தித்தேன். வயலட் நிற கதர் ஜிப்பாவில் நின்றபடி, மேடையில் நீ காதலைப் பற்றி கவிதை வாசித்தாய். கீழே பார்வையாளியாக உட்கார்ந்திருந்த நான் குளிர்காய்ந்தேன் தெரியுமா? ரியலி பொயட்டிக் பீரியட்!

என்னை ஒரு ரிட்டயர்டு குமாஸ்தாவின் நடுத்தரக் குடும்பப் பெண்ணாகவா நீ நினைத்தாய்? வேற்றுக்கிரக தேவதை ஒருத்தியின் பிரேமை கிடைத்த பெருமிதத் தில் அல்லவா மிதந்தாய்!

நீ அவ்வளவு ஆழமாகவும், நான் அத் தனை அடர்த்தியாகவும் நேசித்திருக்கக் கூடாது பிரகாஷ்! 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பது நம் விஷயத்தில் சரியாகிவிட்டது.

நான் இரண்டு குழந்தைகளின் தாயாக வும், நீ திருமணமே செய்துகொள்ளாத பேச்சலராகவும் பத்து வருடம் கழித்து அன்று சந்தித்தோம்...

மதி நிறைந்த நன்னாட்கள்!

சிறப்புச் சிறுகதை

உன் கம்பீரத்தைக் கவிதையாக்கி, எனக்குள் வாசித்தேன். கவியரங்கம் முடிந்து, கீழ் இறங்கிய உன்னிடம், ''உங்க கவிதை எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!'' என்றேன். ஒளிரும் உன் விழிகளில் குபுக்கென்று பொங்கியது ஒரு கப் உற்சாகம்!

''உன்னைப் பார்த்ததுலேருந்து எனக்குக் கவிதையே பிடிக்கல வித்யா!'' என்று என் மடியில் தலைசாய்த்துக் கொண்டு நீ சொல் வதில் கொண்டுபோய் விட்டுவிட்டது, அந்த மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன் னாள். உன்னால் நானும் கவிதைக் கிறுக்கி ஆனேன்.

அதற்குப் பிறகு வந்த எல்லா மாதங் களும் எனது காலண்டரில் மார்கழி மாதங் களாயின. உன் அருகாமையின் கதகதப்பு, அன்பின் இளஞ்சூடு... எவ்வளவு சுகமாகக்

அதன்பிறகு நீ எனக்கு மூன்று கடிதங் கள் எழுதிவிட்டாய். என்னைப் பற்றி அக் கறை அக்கறையாகக் கேட்டிருந்தாய். பதில் எழுத இத்தனை நாள் யோசித்தேன். எதை விடுவது, எதை எழுதுவது? எப்படித் தொடங்குவது, எப்படி முடிப்பது? இப்படி நிறைய கேள்விகளுக்குப் பின்தான் இந்தக் கடிதம்.

நிற்க...

இந்த வரியை எழுதும்போது எஃப்.எம். ரெயின்போவில் 'மனசு மயங்கும் மௌன ராகம் பாடு' என்ற பாடல் ஒலிக்கிறது பிரகாஷ். நம் கதையின் முக்கியக் காட்சி யில் அமைக்கப்பட்ட, தேர்ந்த பின்னணி

இசை மாதிரி இருக்கிறது அந்தப் பாடல் ஓசை. கடிதம் எழுதுவதை நிறுத்தும்படி விரல்களுக்குக் கட்டளையிட்ட மனசு, ஜிவ்வென்று கிளம்பிப் பறக்கிறது கங்கை கொண்ட சோழபுரத்துக்கு...

கோபுரத்தின் பிரமாண்டப் பேரழகை விழிகளால் பருகியபடி பிரகாரத்தின் கரும் பச்சைப் புல்வெளியில் நாம் உட்கார்ந்திருந்தபோது, எங்கோ தூரத்து வானொலியில் ஒலித்தது இந்தப் பாடல்.

"எனக்கு இந்தப் பாட்டு ரொம்பப் பிடிக்கும் விதுர. உனக்கு?"

"எனக்கும் பிடிக்கும். ஆனா என்னவோ தெரியல, இப்ப இன்னும் ரொம்பப் புடிக்குது!"

சே! நினைவுகளை நினைவுகளே கொல்கின்றனவே! கனவுகளைக் கனவுகளே தின்கின்றனவே! இழந்த காதல் என்பது முகத்தில் அறையும் முகம் பார்க்கும் கண்ணாடியா?

ஒரு விஷயம் இப்போது புரிகிறது பிரகாஷ்.

காதல் வந்தவுடன் கல்யாணம் செய்து கொண்டுவிட வேண்டும். இல்லையேல் ஓடிப்போய்விட வேண்டும். காதலின் சுகத்தில் காலத்தை நீட்டிப்பது ஆபத்தானது. 'இந்த ஆனந்தத்தை இன்னும் கொஞ்ச காலம் அனுபவிப்போம்' என்பது அபாய கரமானது. எப்போது வேண்டுமானாலும் எந்த வடிவிலும் காதலுக்கு எதிரான யுத்தம் மூளக்கூடும்.

விந்திவிந்தி நடந்த என் அக்கா உமாவின் உருவத்தில் வந்தது அந்த விபத்து. அவளுக்குத் திருமணமே ஆகாது என்று என் குடும்பத்தினர் முடிவு செய்திருந்த வேளையில்தான், அவர் என் அக்காவைப் பெண் பார்க்க வந்தார்.



அவர் மட்டும் வந்திருந்தால் பரவா யில்லை. உடன் அவரது தம்பியும் வந்தது தான் வல்விதியின் விளையாட்டு! அந்தத் தம்பி என்னைப் பார்த்துவிட்டார்.

அவர்கள் தரப்பில் இறுதியாக முன் வைக்கப்பட்ட நிபந்தனை ஒன்றே ஒன்று தான். என்னை அவரின் தம்பிக்குத் தருவ தென்றால் உமாவை மணக்கச் சம்மதம்!

காலம் நம் காதலுக்கு எதிராக நகர்த்திய முதல் காய்.

அன்று மாலை இந்த வினாவை உன் முன் எழுப்பினேன், தியாகேசர் ஆலயத் தின் வெளிப்பிரகாரத்தில்.

''என்னால் உன்னை இழக்க முடியாது பிரகாஷ்!'' அழுதேன்.

என் புறங்கையின் இள்முடிகளை விரல்களால் கோதியபடி சொன்னாய் :

''விது! இந்த ஒரு வருஷத்துல நாம நூறு ஜென்மத்துக்கு வாழ்ந்துட்டோம். இந்தக் காதல் நெருப்பு இன்னும் நூறு ஜென்மத்துக்கு அணையாது. பிரச் னையை பிராக்டிகலா பார்ப்போம்.. உமா வோட கல்யாணம் ஒரு சென்ஸிட்டிவ் வான விஷயம். உன்னால உமாவுக்கு ஒரு வாழ்க்கை வருது. அதுக்கு ஏன் நம்ம காதல் தடையா நிக்கணும்? ஒண்ணு சொல்றேன்... நீ எவ்ளோ தூரத்தில் இருந் தாலும் என் மனசுல இருந்து உன்னைப் பிரிக்க முடியாது. உடலால் சேர்ந்து வாழ்ந்து ஒரு குழந்தையைப் பெத்துக் கிட்டாதான் நம்ம காதல் ஜெயிக்குமா? கல்யாணத்துல முடியும் காதலின் வெற்றி... ஒரு குழந்தை பிறந்த பிறகு திகட்டிப் போயிடும். உமாவோட வாழ்க்கையில விளக்கேத்தறதுக்காக நாம பிரிவோம். அந்த விளக்குக்குக் கீழ எப்பவும் நம்ம நேசம் நிழலாயிருக்கும்... டேக் இட் ஈஸி!''

கோயிலின் பிரகார இருட்டில் நமது காதலின் சிறகுகளை உதிர்த்தோம். வாழ் வின் சிலுவைகளைச் சுமந்தபடி பிரிந் தோம். நாம் வெளியேறிய பிறகு நமது மௌனங்கள் அங்கே உட்கார்ந்து உரை யாடி இருக்கக்கூடும்...

உனக்கு இந்தக் கடிதத்தை எழுதும் நேரம் அதிகாலை நாலரை மணி. திறந் திருந்த ஜன்னல் வழியே, மெல்ல வந்து முகம் வருடுகிறது மார்கழிக் காற்று. எனது பால்யத்தின் பனி நாட்களை மீண்டும் விழிகளில் நிரப்புகிறது...

கோலம் பழக, வலுக்கட்டாயமாக அம்மா என் தூக்கம் கலைப்பாள், அதி காலைகளில். கலையாத தூக்கம் வழியும் முகத்துடன், டூத் பிரஷ்ஷில் பேஸ்ட்டை நிரப்பியபடி, வீட்டுக்குப் பின்புறம் போவேன். விடியத் தொடங்கியிருக்கும் இலேசான வெளிச்சத்தில், தாமரைக் குளம் குளிரில் ஒடுங்கியபடி சலனமின்றிக் கிடக் கும். 'கிரீச்'சென்று குளத்தில் மூழ்கி, விருட் டென்று தலை சிலுப்பிப் பறக்கும் ஒரு சிறு குருவி. 'அம்மா என்னை எழுப்பியது போல், தூங்கும் குளத்தை அது எழுப்பு கிறதோ' என்று நினைத்து சிரித்துக் கொள் வேன்.

இப்போதெல்லாம் அதிகாலை எழ முடிவதில்லை. (இன்று உனக்குக் கடிதம் எழுதுவதற்காகவே நான்கரைக்கு எழுந்

'தீங்கம்' படத்துக்குப் பிறகு சுந்தர்.சி. யைக் கதாநாயகனாகப் போட்டு 'தீ' படத்தை இயக்க வந்துவிட்டார் இயக்குநர் கிச்சா. 'தீ' ரஜினி நடித்த படம் அல்லவா என்றால்,

''ஆமாம், அந்தப் படத்துக்கும் என் படத்துக்கும் படத்தின் தலைப்பைத் தவிர வேறெந்த சம்பந்தமும் இல்லை. முதல் முறையா போலீஸ்காரர் வேடத்தில் என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்டாக நடித் திருக்கிறார் சுந்தர்.சி. அவர் அடிப்படை யில ஓர் இயக்குநர்ங்கறதால, என் ஸ்கிரிப்டை முழுசும் உள்வாங்கி நடிச் சிருக்கார். கிரிமினல்களை பொட்பொட்

தேன்!)

பூப்படையும் காலத்தின் சுய பூரிப்பெல்லாம் அதை முன்னிறுத்திய வாழ்வில், வயதாக ஆக சோர்வாகி விடுகிறது, எல்லாப் பெண்களுக்கும்.

நல்ல துணை என்றால் நமது களைப்புக்கு ஆறுதலாக, இரவில் நெற்றியில் முத்தமிட்டுத் தூங்க வைக்கும். விடிந்ததும் குளிக்க வெந்நீர் வைத்து, காப்பி போட்டுக் கொடுத்து களைப்பைத் தீர்க்கும். இந்த ஆதரவு எனக்குக் கிடைக்கவில்லையா என்ற கேள்விகள் இப்போது எழும் உனக்கு...

அதைத்தான் சொல்லப் போகிறேன், எங்கோ படித்த ஒரு சிறு கவிதை மூலமாக...

முதலிரவில் / அச்சமூட்டிற்று / படுக்கையறைப் படப்புலி/பக்கத்தில் படுக்க/நிஜப்புலி ஒன்று/தினம் வருமென்று/தெரிந்தபின்/பயம் பழகிப் போனது/அடுத்தடுத்த இரவுகளில்...

ஆறுதலான சிநேகம் வித்யாவுக்கு வாய்க்கவில்லையே என்று நீ ஆதங்கப்பட வேண்டாம்... அது, என் வீட்டிலேயே வேறு வகையில் எனக்குக் கிடைக்கிறது.

கணவரும் குழந்தைகளும் இல்லாத பகலின் பதினொரு மணி சுமாருக்கு, தன்னிச்சையாக படுக்கையில் சாய்ந்து கண் மூடுவேன். அந்தவேளையில் ஓர் அனுபவம் நேர்வதுண்டு.

படுத்திருக்கும் என்னருகே, நாசி ஓரமாய் ஓர் ஆண் மூச்சின் சூடுபரவும். கண்களைத் திறக்க முடியாது. நெற்றியில் விழுந்து கிடக்கும் என் முன் முடி விலக்கி வெந்நீர்த் துணியால் ஒத்தடம் கொடுப்பது போல் இதமான வெப்பத்தில் ஒரு முத்தம் பதியும். 'யாரது' என்ற சிலிர்ப்புடன் மீண்டும் கண் திறக்க முயற்சிப்பேன். மிகுந்த பிரயாசைக்குப் பின் கண் திறக்கும் கணத்தில், முப்பரிமாண தோற்றத்தில் ஓர் ஆண் முகம் மங்கலாகத் தோன்றி மறையும்.

அது உன் முகம்!

உன்னைச் சந்திப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இன்னொரு விசித்திரமும் இணைந்தது...

அது, அதுவரை எனக்கு வராத கனவு. கணவருக்குப் பக்கத்தில் கட்டிலில் படுத்திருக்கிறேன். ராஜாளி போன்ற பெரிய பறவை ஒன்று, என் படுக்கையறைக்குள்

டென்று போட்டுத் தள்ளும் சுந்தர்.சி, மீட்க முடியாத ஒரு பிரச்னையில் சிக்கிக் கொள்ள, அதிலிருந்து மீண்டு வருவதற்காக, காக்கிச் சட்டையைக் கழற்றி விட்டு கதர் சட்டையை அணிகிறார். கதர் சட்டை போட்டுக்கொண்டு காக்கிச் சட்டையின் அத்தனை வேலைகளையும் செய்கிறார். இதுவரை மியூஸிக் மூலம் தன் இருப்பைத் தக்கவைத்துக்கொண்ட தேவா, இந்தப் படத்தின் மூலம் நடிகராக அறிமுகமாகிறார். இதற்குப் பிறகு நடிகராக அவர் பிஸியானாலும் ஆச்சர்யமில்லை."

- கண்மணி



நுழைந்து, தனது பெண்ணம்பெரிய கால்களால், ஒரு கோழிக்குஞ்சைத் தூக்குவது போல் தூக்கிக்கொண்டு போகிறது என்னை. அந்த வினோதப் பறவையின் முகம் மட்டும் மனித ரூபமாய்த் தெரிகிறது.

அந்த முகத்தின் சாயலும் உனதுதான்.

அந்தக் கனவு எனக்குப் பேரானந்தத்தைத் தந்தது என்றே சொல்ல வேண்டும்.

என் வாழ்வின் வரைபடம் இப்போது உனக்குப் புரிந்திருக்கும்.

நிற்க பிரகாஷ்.

கடிதம் முடியப் போகிறது. இதற்கு மேல் நீ வாசிக்கப் போகும் எழுத்துக்கள் உனக்கு சுவாரஸ்யமாக இருக்காது.

உனக்கு எழுதும் முதல் பதில் கடிதம்.

ஆம்!

கடைசிக் கடிதமும் இதுவே.

நீ எழுதிய மூன்று கடிதங்களிலும் ஒரு விஷயத்தை என்னால் உணர முடிந்தது. நமது பழைய காதலை நீ புதுப்பிக்க விரும்புகிறாய்.

என் நினைவிலேயே வாழ்வதாக எழுதி இருந்தாய். பரவாயில்லை. கனவுகளையும் நினைவுகளையும் மட்டுமே திருமணம் செய்துகொள்வது என்பது ஒருவகையில் வசதியானதுதான்.

என் மேல் நீ கொண்டிருக்கும் நேசம் நிஜமானது என்று இப்போதும் நிரூபிப்பதாக இருந்தால், இனி எனக்குக் கடிதம் எழுதாதே! கணவன் இல்லாத நேரத்தில் வீட்டுக்கே போய் சந்தித்து விடலாமா என்ற எண்ணம் இருந்தால் உதறிவிடு.

இவ்வளவையும் நான் மனந்திறந்து எழுதியதற்குக் காரணம், நிதர்சனங்களை நீ உணரத்தான்.

வாழ்க்கை என்பது என்னைப் பொறுத்த வரை, பாத்திரங்களை மாற்றி நடித்துக் கொண்டே போகவேண்டிய நீண்ட நாடகம்!

மார்கழியை ரசித்த இளம்பெண் பாத்திரம் முடிந்துவிட்டது. காதலி பாத்திரம் முடிந்தது. மனைவி பாத்திரம் முடிந்து கொண்டேயிருக்கிறது. இரண்டு குழந்தைகளின் தாய் என்னும் பாத்திரமே எனது எஞ்சிய வாழ்வு. இதையும் தாண்டி என் மேல் உனக்கு காதல் உள்ளது எனில், ஒன்று செய்.

இனி எப்போதேனும் எனக்கு வரக்கூடிய விசித்திரக் கனவில், பெருஞ்சிறகு படபடக்க என் படுக்கையறைக்குள் வா. உனது ராட்சசக் கால்களால், ரத்தஞ்சொட்ட என்னைத் தூக்கிப் போ. அந்தக் கனவில் விருப்பமுடன் நானும் பங்கேற்கிறேன், உனது பழைய காதலியாக!

இப்படிக்கு...

உன் விதூ அல்ல...

வித்யா ரவிச்சந்திரன் ●



"நம்ம கட்சி சிதறு தேங்காய் மாதிரி உடைஞ்சிடுச்சு தலைவா..."

"பார்த்தேன்... அதான் எதிர்க்கட்சிகள் துண்டுகளை பொறுக்கிட்டுப் போறாங்களா...?!..."

- ஜே. தனலட்சுமி

கதையையும், கதை மாந்தர்களையும் சரியானபடி தேர்ந்தெடுத்துவிட்டாலே படத்தின் பாதி வெற்றி ஊர்ஜிதமாகி விடும் என்பதற்கு 'பூ' சரியான உதாரணம். படத்துக்குப் படம் கதைகளில் வித்தியாசம் காட்டும் சசி 'பூ'வின் மூலம் யதார்த்தத்தை நோக்கிப் பயணித்திருக்கிறார்.

● சிவகாசியின் செம்மண் புழுதியில் பூத்த 'பூ'வாகப் பொருந்திப் போகிறார் பார்வதி. படத்தின் மளிகைக் கடை காட்சிகளும் கணவன் - மனைவி அன்னியோன்யமும் மனசுக்குப் பாந்தம்.

● இயல்பான காட்சிகளாலும், வெள்ளந்தி வசனத்தாலும் கதை நகர்ந்துகொண்டே இருக்க, ரெட்டை பனைமரம்தான் முட்டுக்கட்டை.

● மண்ணின் வாசனையைச் சுமந்து வரும் கதைக்கு ஏற்றபடி, கதாமாந்தர்களின் தேர்வும் சபாஷ் போட வைக்கின்றது. கதாநாயகியின் அம்மா, அண்ணன், வண்டிக்காரர் வேடத்தில் சோக பாவம் காட்டும் பேனாக்காரர் என அனைவரும் கதைக்கு ஏற்ற நடிப்பை வழங்கியிருக்கின்றனர்.

● படத்தில் விரியும் சிவகாசி பட்டாசு தொழிற்சாலை காட்சிகளில் நேர்த்தி அதிகம். அங்கு வேலை செய்யும் பெண்களின் மனவோட்டங்களைக் காட்சிப்படுத்தியதில் இயக்குநர் கவனம் பெறுகிறார்.

● பட்டணத்து முகபாவத்தோடு கதைக்கு ஒட்டியும் ஒட்டாமலும் திணறுகிறார் ஸ்ரீகாந்த்.

● சூச்சு மாரி, சிவகாசி பாடல்களில் அறிமுக இசையமைப்பாளர் குமரன் ஸ்கோர் பண்ணுகிறார்.

● விடலைப் பருவத்தில் செய்யும் சேஷ்டைகளையெல்லாம் வாழ்வின் உன்னதம் எனச் சொல்ல முற்பட்டிருப்பதில் இயக்குநர் சறுக்கியிருக்கிறார்.

● பூ - வாசம் கம்மி.

- சாந்தி



வெளிவந்து 160 ஆண்டுகள் கழிந்துவிட்டன. என்றாலும் மீண்டும் மீண்டும் கொண்டாடப்படுகிறது; எதிர்க்கப்படுகிறது. The Communist Manifesto. முதலில் வெளிவந்தது 1848ம் ஆண்டில். ஜெர்மன் மொழியில் எழுதப்பட்ட இந்த அறிக்கை பெர்லினில் வெளியிடப்பட்டது. இரண்டு ஆண்டுகளில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அதற்குப் பிறகு பல்வேறு மொழிகளில் பல்வேறு பதிப்புகள் வந்துவிட்டன. தேவை இன்னமும் குறைந்தபாடில்லை.

1883ல் வெளிவந்த ஜெர்மானியப் பதிப்பின் அட்டையில் காரல் மார்க்ஸ், ஃபிரெட்ரிக் ஏங்கெல்ஸ் இருவருடைய பெயரும் இருந்தன. அதன் முன்னுரையில் ஏங்கெல்ஸ் தெளிவுபடுத்தினார். உண்மையில் இது மார்க்ஸின் தனிப்பட்ட படைப்பு.

கம்யூனிஸத்தை, அப்போதைய உலகம் எப்படிப் பார்த்தது என்பதை அறிக்கையே வெளிப்படுத்துகிறது. காவல்துறையினர், உளவாளிகள், அரசாங்கங்கள், மன்னர்கள்... என்று அனைவரும் கம்யூனிசத்தைக் காட்டி மக்களைப் பயமுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து நமக்குத் தெரிவது என்ன? கம்யூனிஸம் என்பது ஒரு சக்தி என்பதை ஐரோப்பிய நாடுகள் ஒப்புக்கொள்கின்றன.

சிலந்திகளும்



இந்த நேரத்தில் நாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது. கம்யூனிஸம் என்றால் என்ன? கம்யூனிஸ்ட்களின் லட்சியம் என்ன? அனைத்தையும் நாம் பட்டவர்த்தனமாக அறிவித்தாக வேண்டும். ஆகவே, இந்தப் பிரகடனம்.

வசீகரிக்கும் சில முக்கிய லட்சியங்களை அறிக்கை அடுக்கியது. குழந்தைகள் அனைவருக்கும் இலவசக் கல்வி. குழந்தைத் தொழிலாளர்கள் என்று ஒருவரும் இருக்கமாட்டார்கள். நகரத்துக்கும் கிராமத்துக்குமான இடைவெளி குறைக்கப்படும்; பிறகு, அழிக்கப்படும். நகரம், கிராமம் என்று பேதமில்லாமல் மக்கள் பரவலாக வசிப்பார்கள். தரிசாகக் கிடக்கும்

மருதன்



நிலங்கள் விவசாயத்துக்குப் பயன்படுத்தப் படும். தகவல், போக்குவரத்து ஆகிய வற்றை அரசாங்கம் நிர்வகிக்கும். வங்கிகள் தேசியமயமாக்கப்படும். தனிச்சொத்துரிமை கிடையாது.

கம்யூனிஸ்ட்டுகள் என்ன செய்ய வேண்டும்? மக்களிடையே உண்மையைப் பரப்ப வேண்டும். பணக்காரர்களும் ஏழை களும் எப்படித் தோன்றுகிறார்கள் என் பதைப் புரியவைக்க வேண்டும். ஒரு வர்க்கமாக தொழிலாளர்கள் ஒன்றிணைய

பூச்சிகளும்

வேண்டிய அவசியத்தை உணர்த்த வேண் டும். பெறுவதற்கோ ஒரு பொன்னுலகம் இருக்கிறது. இழப்பதற்கு இனி ஒன்றும் இல்லை. உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!'

லாபம், மேலும் லாபம் என்று பணத் தைத் துரத்திக் கொண்டிருந்த முதலாளி களை, இந்த அறிக்கை இம்சித்தது. தொழி லாளர்கள் இந்த அறிக்கையை வாசித்து, புதிய தெம்பையும் நம்பிக்கையையும் பெற் றார்கள்.

'எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை. வீட்டுக்குப் போ' என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளும் நிலை மாறியது. என்ன காரணம் என்று தொழிலாளி கேள்வி கேட்டனர். வேலை நேரங்கள் திருத்தி அமைக்கப்பட்டன. தொழிற்சங்கங்கள் உரு வெடுத்தன. ஆண்களுக்கும் பெண்களுக் கும் சமமான சம்பளம்.

1917 அக்டோபரில், லெனின் தலை மையில் நிகழ்த்தப்பட்ட ரஷ்யப் புரட்சி, கொடுங்கோல் ஜார் ஆட்சியை வீழ்த்தியது. புதிய சோவியத் யூனியன் மலர்ந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கம் யூனிஸ்ட்களாயின.

பி.பி.சி. சர்வே ஒன்றை நடத்தியது. உங்கள் பார்வையில் உலகத்தை மாற்றி யமைத்த பெருமகனார் யார்? காந்தி, மண்டேலா, மார்ட்டின் லூதர். மக்கள் முன்வைத்த பெயர் காரல் மார்க்ஸ்.

உலகை இன்று அச்சுறுத்துகிறது ஏகாதிபத்தியம். வால் மார்ட் சரிந்து கிடக்கிறது. லாபத்துக்காக தேசங்கள் ஒன்றோடொன்று போரிட்டுக்கொண் டிருக்கின்றன. உலகமயமாக்கல் என்னும் சிலந்தி வலையில், பூச்சிகள் போல் ஏழைகள் சிக்கிக்கிடக்கிறார்கள். சிக் கலில் இருந்து விலகிக் கொள்ள மாத் திரமல்ல, சிலந்திகளைப் பற்றி விலா வாரியாகத் தெரிந்து கொள்ளவும் இந்த அறிக்கை அவசியம். ○

மகா அழகன்!

பாரத கலாசாரத்தின் இணையற்ற கதாநாயகன் இராமன். 'நடையின் நின்று உயர் நாயகன்' என்ற கம்பன் வாக்குப்படி, மக்கள் மதிப்பில் என்றும் உயர்ந்து நிற்கும் சீலன்; ஆதர்ச புருஷன். தமிழில் கம்பராமாயணம் தோன்றிய காலத்திலேயே இராம கதை பிரசித்தமாயிருந்தது. வழக்கில் பிரசித்தமாயிருந்த கதையும் தன்னிகரில்லாத தலைவன் என்ற காவிய நாயகன் இலக்கணத்துக்கு, முற்றிலும் பொருத்தமான இராமன் கம்பனுக்குக் கைகொடுத்ததுபோல் வேறு எந்தக் கவிஞனுக்கும் வாய்த்ததில்லை என்றே தோன்றுகிறது. இத்தகைய உன்னதமான ஒரு கதாநாயகனை கலைஞர்கள் மட்டும் சும்மா விட்டுவைப்பார்களா என்ன! பல நூற்றாண்டுகளுக்கு முன்னாலேயே இராமன் திருவடிவம் அரிய செப்புத் திருமேனிகளாய் வடிக்கப்பெற்று ஆலயங்களை அணிசெய்தன.

அநேகமாக பிரபலமான எல்லா வைணவத் தலங்களிலும் இராமபிரானின் எழில் வடிவைக் காணலாம். சீதா, லக்ஷ்மண, ஹனுமத் சமேதராய், கம்பீரக் கோலம் காட்டும் இராமபிரானின் திருவடிவங்கள், பார்ப்போர் நெஞ்சில் பரவசம் ஊட்டும். தமிழ்நாட்டில் இராமன் திருவுருவச் சிலைகளின் அழகுக்குப் பெயர்போன தலங்கள் பல உண்டு. வடுவூர், முடிகொண்டான் மதுராந்தகம், சீர்காழி சீராம விண்ணகரம், தில்லைவிளாகம்... ஆகிய தலங்களில் எழுந்தருளுவிக்கப் பட்ட வடிவங்களைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

இரண்டு திருக்கரங்களுடன், வில்லும் அம்பும் ஏந்திய வண்ணம் கம்பீரமாக நிற்கும் வடிவங்கள் இவை. நிமிர்ந்த முகம்; அகன்று பரந்த மார்பு; திரண்ட தோள்கள்; சிறுத்த இடை; நெடிது ஓங்கி நிற்கும் திருவடிகள்; வீரலக்ஷணம் அத்தனையும் பொருந்திய வடிவமைப்பு; கச்சிதமான தேகவாகுடன் அமைந்த அழகனாய்க் கோலம் காட்டுகிறான். புறஅழகு இப்படியென்றால், அவன் அகஅழகும் சிலைகளில் பரிமளிக்கின்றது. கண்களில் ஓர் அமைதி. உதட்டில் தவழும் ஆரவாரமற்ற மெல்லிய புன்னகை. அனுபவ முதிர்ச்சி தொனிக்கும் முகபாவம். இந்த அகிலத்தையெல்லாம் ஒரு தனிக்குடைக் கீழ் கட்டி ஆளும் சக்கரவர்த்திக்குரிய பொறுப்புணர்வு கண்களில் விரிகிறது. சற்றே சாய்ந்த சிரம், மக்களின் குறை-நிறைகளை கண்ணாலே பார்த்த மாத்திரத்தில் அளந்துவிடுவது போன்ற ஆழமான திருநோக்கு, 'இராமஇராஜ்யத்துப் பிரஜைகள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை' என்ற மனஉறுதியையும் நம்பிக்கையையும் ஊட்டும் வகையில், கைகளில் உறுதியாகப்


பற்றிய ஆயுதங்களாக வில்லும் அம்பும். குறிப்பாக, வில்லை ஏந்த உயர்த்திய தோளில் தளர்ச்சி என்பதன் சாயல் துளி கூட இல்லை! இடையிலும் தொடையிலும் முழந்தாளிலும் கணைக்கால்களிலும் இறுகிய சதைப்பற்றில், பயிற்சிமிக்க வீர இளைஞனின் உடல்வாகு தெரிகிறது. Measured Steps என்கிறோமே, அதற்கேற்ப, தீர்மானமான நடையைப் புலப்படுத்துவதாகத் திருவடிகள் விளங்குகின்றன. இத்தனை அங்கலட்சணங்களும் அவனது உறுதிநிலையைக் காட்ட, இடையில் காணும் சிறு ஒடிசல், விரல்களில் காணும் நளினம் ஆகியவை இவன் மிக நளினமானவன் என்றும் அடையாளம் காட்டும்! மொத்தத்தில் இவன் ஒரு 'Charismatic leader' என்று புரியும். தென்னாட்டில் உள்ள இராமன் திருவடிவங்கள் அனைத்துக்கும் பொதுவான அம்சங்கள் இவை. ஆனாலும் சில தலங்களில் உள்ள வடிவங்கள் தனிப் பேரழகு வாய்ந்தவையாக விளங்குகின்றன.

'முடிகொண்டான்' என்னும் ஊரில் விளங்கும் இராமன் வடிவம் தவத்தில்



❖ த.கி.நீலகண்டன் ❖

இளைத்த திருவடிவம்! காட்டிலும் மேட்டிலும் அலைந்து திரிந்து இராவணனுடன் சண்டையிட்டு சீதையை மீட்டுக்கொண்டு அயோத்தி திரும்பும் வழியில் பரத்வாஜ முனிவரின் அன்புக்கு இணங்கி இங்கு ஒருவேளை தங்கி பசியாறி இளைப்பாறிச் சென்றதாக தலபுராணம் தெரிவிக்கிறது. அயோத்தியில் முடிசூட்டிக்கொள்ளும் முன்பாக பரத்வாஜருக்குத் திருமுடியுடன் இங்கு காட்சி தந்ததால் 'முடிகொண்டான்' என்று பெயர்பெற்றது இந்த ஊர். இங்கு நெடுநெடுவென்று உயர்ந்து, மெலிந்த தேகத்துடன் கைகளிலும் கால்களிலும் ஓடும் பச்சை நரம்பு தெரியும் அளவுக்கு வைரம் பாய்ந்த உடற்கட்டோடு தரிசனம் தருகிறான் இராமன்.



அயோத்தியில் முடிசூட்டிக்கொள்ளும் முன்பாக பரத்வாஜருக்குத் திருமுடியுடன் காட்சி தந்ததால் முடிகொண்டான் என்று பெயர் பெற்றார்


வடுவூரில் காட்சி தரும் இராமன் இன்னொரு அழகன். உற்சாகம் மிக்க இளைஞனைப் போல குறுகுறுப்பான முகபாவம். புஷ்டியான தேகம். கவசங்கள் புண்ணியத்தாலோ என்னவோ, இளந்தொந்தியுடன் காட்சி தருகிறான் இவன். செல்வச் சீமானுக்குரிய அணிமணி ஆபரணங்கள் கால்களில் தண்டை, காதுகளில் குண்டலங்கள் என்று சக்ரவர்த்தித் திருமகன் விளங்குகிறான். முகத்தில் தவழும் புன்னகை, பக்தர்களை வசீகரிக்கும் புன்னகை! 'தோள் கண்டார் தோளே கண்டார்; கமல மன்ன தாள் கண்டார் தாளே கண்டார்; தடக்கை கண்டார் கைகளை கண்டார்' என்று கம்பன் வர்ணித்தது போல், ஒவ்வொரு அங்கமும் கண்களை விட்டகலாது ஜாலம் காட்டுகின்றன. வடிவத்தை வளர்த்த உலோகக் கலவைகூட தனித்தன்மை வாய்ந்ததாக நிகுநிகுவென செம்பொன் வண்ணம் காட்டுகிறது!

சீர்காழி, மதுராந்தகம், தில்லைவிளாகம் ஆகிய தலங்களிலும் தனித்தன்மைவாய்ந்த இராமன் விக்ரகங்கள் காட்சி தருகின்றன. வைணவ திவ்ய தேசங்களில் கோலாகலமான முறையில் நடைபெறும் அலங்கார ஆராதனைகளை ஏற்று, பெரும் சான்னித்யத்துடன் விளங்கும் இந்த அருள் வடிவங்கள், பக்தர்களால் பெருமையுடன் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன. காண்போர் கண்களையும் கருத்தையும் உள்ளத்தையும் கவர்ந்து நிற்கும் திவ்யமங்கள விக்ரகம் இராமன் என்பதால், உருவமற்ற நாதபிரும்மத்தில் லயித்த சத்குரு தியாகராஜ சுவாமிகள்கூட ஒரு சிறு இராமவிக்ரகத்தில் தன்னை இழந்து நிற்கிறார். கம்பன் கூட தன்னை மறந்து, 'ஐயோ! இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்' என்று வியந்து நிற்கிறான்.

(பெருகும்)

ஆவணப்படம் விமர்சனம்

கடலின் துளிகள்!



தொடக்கத்தில் பேரறிஞர் அண்ணா பற்றிய சில இளைஞர்களின் கருத்துக்களை இடம் பெறச் செய்து 'அண்ணா குறித்து கொஞ்சம் தெரியும்; ஆனால், அதிகம் தெரியாது' என்கிற அளவில் இன்றைய இளைஞர்களின் நிலையைக் காட்டுவதில், அவர்களுக்கும் அண்ணாவை அதிகளவில் அறிமுகப்படுத்தும் முயற்சி இது என்பது தெள்ளத் தெளிவாகிறது!

சில புகைப்படங்கள் சுவாரஸ்யமானவை. 'அண்ணாதுரை முதலியாருக்கும் ராணி அம்மாளுக்கும்' நடைபெறும் திருமணப் பத்திரிகை அதற்கு ஓர் உதாரணம். சிறுவயதில் நாடகங்களில் நடித்ததற்காக தொத்தாவிடம் திட்டு வாங்கியது முதல், தனது சந்திரமோகன் நாடகத்தில், சதித்திட்டம் தீட்டும் காகபட்டர் பாத்திரத்தை அவரே நடித்து, சிறப்பான நடிப்பின் காரணமாக, ஊர் மக்களின் திட்டை வாங்கியதுவரை பல சுவாரஸ்யங்கள் உண்டு.



* கோவி.லெனின்

அண்ணா பல்கலைக் கழகம் இடம் பெற்றாலும் அ.தி.மு.க. பற்றி மூச்சு விடக் காணோம். தி.மு.க. ஆட்சியில் அமர்ந்த பிறகு சந்தித்த சவால்கள் இடம் பெறவில்லை.

அண்ணாவைத் தவிர வேறு யாருக்கும் முக்கியத்துவம் நழுவிவிடாத படி கவனத்துடன் கையாண்டிருக்கிறார் கோவி.லெனின்.

சௌமியன், நக்கீரன், ஒற்றன், காவடி போன்ற பல பெயர்களில் எழுதியிருக்கிறார் அண்ணா. பெரியாருக்கும் அம்பேத்கருக்குமிடையே மொழி பெயர்ப்பாளராகச் செயல்பட்டவர் அண்ணா. ஓவியங்களும் வரையத் தெரிந்தவர், பக்கம் பக்கமாக எழுதினாலும் அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதக்கூடியவர் போன்ற சின்னச் சின்ன சுவைத் தகவல்கள் குறுந்தகடு முழுவதும் நிரவிக் கிடக்கின்றன.

'அண்ணாவை இதில் முழுமையாகக் காண முடிகிறதா? ஒருவரின் வரலாற்றில் அவரது குடும்பம் குறித்தும் இடம்பெற வேண்டாமா? மாமனிதர்கள் தொடர்பான பதிவில் அவர்களது கொள்கைகள் அலசப்பட்டிருக்க வேண்டாமா?' - இது போன்ற கேள்விகள் எழுந்தாலும், அண்ணா குறித்த விவரங்கள் அவரது நூற்றாண்டில் எளிமையாகவும், சீராகவும் வந்திருக்கிறது. தயாரித்த நக்கீரன் கோபாலும் எழுதி இயக்கிய கோவி.லெனினும் பாராட்டுக்குரியோர்.

- ஆதர்ஷ்

கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாக இசையால் ஆட்கொள்ளப்பட்டவர் எஸ்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி. கோவையில் வசித்து வரும் கர்நாடக இசைப் பாடகர். ''இந்த இசைதான் என்னை எதிர் நீச்சல் போட வைத்தது. வாழ வைத்தும் வருகிறது!'' கண்கள் பனிக்கக் கூறும் அவர், பிறக்கும்போதே இரண்டு கைகளும் இரண்டு கால்களும் இல்லாமல் வளர்ச்சி குறைந்த சிறிய உருவமாகப் பிறந்தவர். தற்போது அவரது உயரம் இரண்டடி.

நண்பர் ஒருவர், எஸ்.ஆர்.கே.வை ஒரு மரப்பாச்சி பொம்மையைப் போல தோளில் சாய்த்துத் தூக்கி வந்து மேடையில் விட்டு விட்டு இறங்கிவிடுகிறார். அவரைச் சுற்றிலும் பக்கவாத்தியக் கலைஞர்கள். கச்சேரி துவங்குகிறது. அரங்கம் அமைதியாகிறது. மூன்று மணி நேர வாய்ப்பாட்டுக் கச்சேரி. இசை பரவப் பரவ, அரங்கம் திணறிப் போகிறது.

''நான் பிறந்தவுடன் என்னைப் பார்த்த பலரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். 'இந்தப் பிள்ளையை எப்படி வளர்க்கப் போகிறீர்கள்? அவன் எப்படி வாழ முடியும்?' என்று என் பெற்றோர்களிடம் கேட்டிருக்கின்றனர். கடவுள் மேல் அசாத்திய நம்பிக்கை கொண்டவர் என் அப்பா. 'அவனைப் படைத்தவன் வாழ வழிகாட்டுவான். அவனோடு பிறந்த ஏழு பேரோடு, அவன் வாழ்க்கையில் எவ்விதக் குறையு

இரண்டடிக்குள்



• முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமுடன்...

மின்றி வாழ்வான்!' என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார். அவரது நம்பிக்கை வீண்போகவில்லை. இசைக் குடும்பத்தில் பிறந்த எனக்கு, அந்த இசையே வாழ்க்கையாக அமைந்துவிட்டது!'' என்கிறார் அவர்.

இதுவரை 2,500 மேடைக் கச்சேரிகள் செய்துள்ள கிருஷ்ணமூர்த்திக்கு அவரது நண்பர் சீனிவாசராகவன், உற்ற துணை. 'அவரது பேருதவி மூலமாகவே,

ஆறேழு வயதில் தரையில் உருண்டபடியே தெருவைக் கடந்து எதிர் வீட்டுக்குப் போய் இசை கற்றுக்கொண்டேன்!



ஏழு ஸ்வரம்!

வீட்டிலிருந்து கிளம்பி மேடைக் கச்சேரிகள் செய்துவர முடிகிறது' என நன்றியுடன் கூறுகிறார் எஸ்.ஆர்.கே.

''இப்படி நான் பொறந்துட்டதால, பள்ளிக்கூடம் பக்கமே போகலை. இடது கன்னத்துக்கும் இடது தோள்பட்டைக்கும் இடையே பென்சிலை வெச்க எழுதப் பயிற்சி தந்தார் என் அப்பா. இப்போ எனக்கு தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், இந்தி, இங்கிலீஷ்ல எழுதவும் பேசவும் தெரியும்! அப்பா நன்னா பாடுவார். சகோதரிகளும் பாடுவார்கள். அதை ஆர்வமாகக் கேட்டுட்டு நானும் கொஞ்சம் கொஞ்சம் பாடினேன். என் குரல்வளத்தை உணர்ந்துகொண்ட என் அப்பா, எதிர் வீட்டில் மீனாட்சி அம்மாளிடம் முறைப்படி கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்தார். ஆறேழு வயதில் தரையில் உருண்டபடியே தெருவைக் கடந்து எதிர் வீட்டுக்குப் போய் இசை கற்றுக்கொண்டேன். (இப்பவும் வீட்டுக்குள் நித்தியப்படி இயக்கங்கள் தரையில் உருண்டபடிதான்!)

என் வாழ்வு குறித்தும் இசைப் பயணம் பற்றியும் அப்போதைய குடியரசுத் தலைவர் அப்துல்கலாமுக்குக் கடிதம் அனுப்பியிருந்தேன். 2007 ஜூலை 18ல் ஜனாதிபதி மாளிகையின் சிறப்பு அரங்கில், அப்துல்கலாம் முன்பாக முப்பது நிமிடம் பாடினேன். அவருக்கு மிகவும் பிடித்த 'எந்தரோ மகானுபாவுலு' முதல் பாடலாகவும், 'குறையொன்றுமில்லை' இறுதிப் பாடலாகவும் பாடி கச்சேரியை நிறைவு செய்தேன். மிகவும் ரசித்தார்.

தற்போதும் வீட்டில் கர்நாடக இசையை மாணவ, மாணவிகளுக்குக் கற்றுத்தருகிறேன். சென்னையில் டிசம்பர் சீஸனில் ஏதேனும் ஒரு சபாவில் பாடுவது சங்கீதக் கலைஞர்களுக்கு மிகப் பெரிய சந்தோஷம். அந்த வாய்ப்பு எனக்குக் கடைசியாகக் கிடைத்து ஐந்து ஆண்டுகள் ஆகின்றன!'' என்கிறார் எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தி.

செய்திச் சித்திரம் :

ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு



* சி. உமாசங்கர்

சன் இல்லாவிட்டால்

-உமாசங்கர் ஐ.ஏ.ஸ். அதிர

மாறன் சகோதரர்களுடன் மோதல் முடிவுக்கு வந்து இதயம் இனித்தாயிற்று முதல்வருக்கு. 'இந்தக் கால கட்டத்தில் அரசு கேபிள் நிறுவனம் இனி செயல்படுமா?' என்ற கேள்வி நடுநிலையாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

''மிகக் குறைந்த கட்டணத்தில், தரமான ஒளிபரப்பை வழங்கத்தான் இந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. நாங்கள் செய்வது பிஸினஸ். இது லாபகரமாக இயங்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்க முதல்வர் உத்தரவு போட்டிருக்கிறார்'' என்கிறார், இந்த நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சி. உமாசங்கர். அவருடனான சந்திப்பிலிருந்து சில பகுதிகள்...

அரசு கேபிள் - தற்போதைய நிலை

திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, கோவை, வேலூர் ஆகிய மையங்களில் சுமார் ஒரு லட்சம் இணைப்புகள் ஐந்நூறு கேபிள் ஆபரேட்டர்கள் மூலமாக வழங்கி வருகிறோம். இதுவரை அறுபது கோடி செலவாகியிருக்கிறது. நூறு ரூபாய்க்கு எழுபத்தைந்து சேனல் தருகிறோம். இதில் இருபத்தியிரண்டு கட்டணச் சேனல்கள். வருவாய் ஒரு கோடிக்கும் குறைவே.

எதிர்காலத் திட்டம்?

சுமார் நூறு கோடி செலவில் ஃபைபர் ஆப்டிகல் இழைகளைப் பதிப்பித்து, நல்ல அடிப்படை கட்டுமானத்தை ஏற்படுத்தி, டிஜிட்டல் தரத்துக்கு ஒளிபரப்ப இருக்கிறோம். ஆறு மாத காலத்தில் ஐம்பது லட்சம் இணைப்புகள் வழங்கும் அளவுக்குக் கட்டுமானம் உருவாக்கப்படும். சென்னையில் பொங்கல் முதல் வருகிறது. இது தவிர மற்றொரு திட்டமாக, மிகக் குறைந்த விலையில் (2000 ரூபாய்) செட்டாப் பாக்ஸ் வழங்கும் யோசனையும் அவசரப் பரிசிலனையில் இருக்கிறது. இரண்டாம் வருட முடிவில் நூறு கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் அளவுக்குச் செயல்பட இருக்கிறோம். பஸ் கண்டக்டர் வைத்திருப்பது போல எல்லா கேபிள் ஆபரேட்டர்களுக்கும் மின்னணு மிஷின் கொடுத்து கட்டணம் வசூல் செய்யப் போகிறோம். இதன் மூலம் கேபிள் ஆபரேட்டர்கள் குறைந்த சந்தாதாரர் எண்ணிக்கையைக் காட்டி, தப்ப முடியாது. யாராவது பணம் கட்டவில்லை என்றால் இணைப்பைத் தற்காலிகமாகத் துண்டிக்க, வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவோம். நாங்கள் 20 - 20யோ அல்லது ஒரு நாள் கிரிக்கெட்டோ ஆடவில்லை, உடனே பலனை எதிர்பார்க்க. நாங்கள் டெஸ்ட் மாட்ச் ஆடுகிறோம். நீண்ட நாள் நோக்கில் நாங்கள்தான் களத்தில் நிற்போம். இப்போது கேபிள் தொழிலில் உள்ள 'தாதா'த்தனங்கள் முற்றிலும் ஒழிக்கப்படும்.

திருச்சி - தஞ்சையில் சரிவரத் தெரியவில்லையாமே!

கோவையில், எங்கள் இணைப்பில் உள்ள ஆபரேட்டர்களை மிரட்டி, மீண்டும் இழுத்துக் கொள்ளும் போக்குத் தென்பட்டிருக்கிறது.



நொடித்துப் போகமாட்டோம்!

உண்மைதான். சன், சோனி, ஸ்டார் குழும சேனல்கள் தெரியாததால், மக்களிடையே இதில் இணைவதற்கு உற்சாகம் இல்லை. ஆனால் நிலைமை சீரடையும்.

மதுரையில் என்ன பிரச்னை?

மதுரையில் புறச் சூழல்களைப் பற்றி நான் பேசக்கூடாது. ஆனால், அங்கு ஆபரேட்டராக விருப்பம் தெரிவித்து எங்களை யாரும் அணுகவில்லை.

சன் உங்களிடம் வருமா?

''வர வேண்டும். அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுத்திருக்கிறோம். ஆனால், சன் இல்லாவிட்டால் நாங்கள் நொடித்துப் போக மாட்டோம். எல்லோரும் செட் டாப் பாக்ஸ் பெறும் நிலையில் சட்டப்படி 'சன்'னும் எங்கள் வளையத்துக்குள் வந்தே ஆக வேண்டும். எனவே செட் டாப் பாக்ஸ் திட்டத்தை விரைவுபடுத்துவோம்.

அமுக்கப்படுகிறதா அரசு கேபிள்!

எங்கள் கேபிள்களை யாரும் வெட்ட முடியாது; எங்கள் ஆபரேட்டர்களை யாரும் மிரட்ட முடியாது. ஆனால் சமீபத்தில், கோவையில் எங்கள் இணைப்பில் உள்ள ஆபரேட்டர்களை மிரட்டி, மீண்டும் இழுத்துக்கொள்ளும் போக்கு தென்பட்டிருக்கிறது. அரசு, மக்கள் நலனை முன்னிட்டு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. தனியார் ஏகபோகம் எடுபடாது. ஆனால் எனக்கொரு நம்பிக்கை இருக்கிறது. மின்னலென வரும் சில 'திடுக்' திருப்பங்களால் இப்போது ஏகபோகமாக இருப்பவர்கள் காணாமல் போய் விடுவார்கள். இந்த 'திடுக்' திருப்பம் எப்படி வரும்? எப்போது வரும் என்று சொல்ல முடியாது. ஆனால், தரம் மற்றும் குறையில்லாத சேவை மூலம் மக்கள் நம்பிக்கையை நாங்கள் பெறுவோம்.

– ப்ரியன்

எழுத்துலக ராஜராஜன்!

''குஜராத் மாநிலத்தின் கட்ச் பகுதி கண்ட்லாவில், 1965ல் நாட்டிலேயே முதல் முறையாகக் கட்டுப்பாடில்லாத வணிக மண்டலம் - ('ஃப்ரீ டிரேட் சோன்') ஆரம்பிக்கப்பட்டபோது, தொழில் துவக்கியவர்



களுக்குப் பலவிதமான சிக்கல்கள். இனியும் தொழில் நடத்துவது சாத்தியமில்லை என, தங்கள் யூனிட்களைப் பூட்டி, சாவியை முதலமைச்சரிடமே ஒப்படைத்துவிடுவது என்ற முடிவுக்கு வந்தனர். மாநில அரசு, தொழிலதிபர்களின் பிரச்னைகளைத் தீர்க்க, சரியான அரசு அதிகாரியை நியமிக்கும் முயற்சியில் இறங்கியது. ஆனால், ஒருவர் பின் ஒருவராக பதினான்கு உயரதிகாரிகள், 'ஐயோ! ஆளை விடுங்கள்' என்று கழன்றுகொண்டார்கள். கடைசியாக அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு, தொழிலதிபர்களின் பிரச்னைகளைத் தீர்த்துவைத்து, ஒரே வருடத்தில் நான்கு கோடி அளவுக்கு ஏற்றுமதியை அதிகரித்த பெருமைக்குரியவர்'' என்று ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி விட்டலை அறிமுகப்படுத்தினார் கல்கி ராஜேந்திரன். டிசம்பர் 5 அன்று, சென்னை ஆஸ்திக சமாஜம் அரங்கில், கல்கி கிருஷ்ண மூர்த்தி நினைவு அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்த, அமரர் கல்கி நினைவு நாள் நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று, கல்கியின் 'சிரிப்பும் கண்ணீரும்', 'கல்விச் சிந்தனைகள்' என்ற இரண்டு நூல்களை வெளியிட்டார் விட்டல்.

தமது தலைமையுரையில், ''அமரர் கல்கி சரித்திரக் கதைகளைப் படைத்தவர் மட்டுமில்லை; அவர் சரித்திரம் படைத்தவர். அவரது எழுத்துக்களில் நாட்டுப்பற்று, நகைச்சுவை, தெளிவான சிந்தனை ஆகிய மூன்று விஷயங்களைக் கவனிக்கலாம். குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும்; அதேசமயம் தாய்மொழிக் கல்விக்குத்தான் முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்ற சிந்தனை அவரது கட்டுரைகளில் வெளிப்படுகிறது'' என்று குறிப்பிட்டார்.


* திரு. கோபுலு


* கௌசல்யா சிவ...


* திரு. விட்டல்

'X கஜ தூரமுள்ள ஒரு வட்டமான பாதையில், ஓர் இடத்திலிருந்து சேர்ந்தாற்போல, இருவர் புறப்பட்டு எதிர்த்திசையில் நிமிஷத்துக்கு A கஜ வீதமும், B கஜ வீதமும் நடந்தால், அவர்கள் எங்கே, எப்போது சந்திப்பார்கள்?' - இது அந்தக் கால கணக்

குப் புத்தகத்தில் இடம்பெற்றிருந்த ஒரு கணக்கு. இதைக் குறிப்பிட்டுவிட்டு, இதைப் படித்ததும், 'கூடிய சீக்கிரம் அவர்கள் யமலோகத்திலோ, பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலோதான் சந்திப்பார்கள்' என்று அமரர் கல்கி எழுதியதை, விட்டல், 'கல்விச் சிந்தனைகள்' புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டிய போது அரங்கத்தில் சிரிப்பலை எழுந்தது.

''பொதுவாக நான் வரைந்ததைப் பார்த்துவிட்டு எல்லோரும் சிரிப்பார்கள். மேடையில் பேசிப் பழக்கமில்லாத என் பேச்சைக் கேட்டு நீங்கள் எல்லோரும் சிரிக்கப் போகிறீர்கள்'' என்று தமக்கேயுரிய நகைச்சுவை பொங்க, தம் பேச்சை ஆரம்பித்தார் கோபுலு. ''நான் கல்கியை நேரில் சந்தித்ததில்லை என்றாலும், கல்கியின் சீடர்கள் தேவன், மாலி இருவராலும் உருவாக்கப்பட்டவன் நான் என்பதில் பெருமைப்படுகிறேன்'' என்றார். தமது தஞ்சை மண் நாட்களை நினைவுகூர்ந்தார்.



✱ நூல் வெளியீடு...



இசைப் பேருரை...



✱ விழா நாயகர்

கல்கியும், மாலியும் பேச ஆரம்பித்தால், வாலிபால் ஆடும் போது, இருதரப்பினரும் பந்து தரையைத் தொட்டுவிடாமல் மாறி, மாறி அடித்து ஆடுவது போல, நகைச்சுவை தொடர்ந்து வெளிப்பட்டவாறே இருக்குமாம். மாலியே இதை கோபுலுவிடம் சொல்லி இருக்கிறார்.

''கல்கியை எழுத்துலக ராஜராஜ சோழன் என்று சொல்லலாம். அவரது கற்பனைக் கதாபாத்திரங்கள்கூட நிஜமானவை போல ஒரு எண்ணத்தை உருவாக்கிவிடும். ஒருமுறை மகாபலிபுரத்தில் ஒரு கைடு என்னிடமே, 'சிவகாமி என்ற பிரபலமான டான்ஸர் இங்கேதான் நடனமாடினார்' என்று சொன்னார். சில வீடுகளில் புத்தகங்களை வரிசையாக அடுக்கிவைத்து, இரு யானைப் பொம்மைகள் அந்தப் புத்தகங்களின் இரு பக்கங்களிலும் நின்று தாங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அது போல, கல்கியின் கல்விச் சிந்தனைக்குப் பக்கபலமாக இருந்தவர்கள், ராஜாஜியும், டி.கே.சி.யும்தான்'' என்று சுட்டிக்காட்டினார் கோபுலு.

அறக்கட்டளையின் நிர்

வாக அறங்காவலர் கல்கி ராஜேந்திரன் பேசும்போது, ''அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் அண்மையில், நம் பொறியியல் கல்லூரிகளும், பாலிடெக்னிக்குகளும், ஷிப்ட் முறையில் இயங்க விண்ணப்பிக்கும்படி விளம்பரம் வெளியிட்டுள்ளது. 'இப்போதுள்ள இடவசதி பரிசோதனைக் கூடங்கள், ஆசிரியர்கள் போன்ற அடிப்படை வசதிகளைக் கொண்டே இரு மடங்கு மாணவர்கள் பலன் பெற இது உதவும்' என்றும் அது தெரிவிக்கிறது. அன்றைக்கு இதைத்தான் புதிய கல்வி முறையாக ராஜாஜி அறிமுகப்படுத்தினார். ஆனால் அது அன்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை'' என்றார்.



✱ சுசித்ரா



✱ பிள்ளை



✱ சுப்ர.பாலன்



✱ திருநாவுக்கரசு

ஹரிகதா விற்பன்னர் கமலா மூர்த்தியின் பேத்தியும், ஏர்டெல் ஸ்டார் சிங்கர் போட்டியில் கார் பரிசு பெற்றவருமான சுசித்ரா, அமரர் கல்கிக்கு மிகவும் பிடித்த பாரதியின் 'வெள்ளைத் தாமரை பூவில் இருப்பாள்' பாடலை இறைவணக்கமாகப் பாடினார்.

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்த விட்டல், கோபுலு, பதிப்பாளர் வானதி திருநாவுக்கரசு, தொகுப்பாசிரியர் சுப்ர.பாலன், அட்டைப்பட ஓவியர் பிள்ளை, கௌசல்யா சிவகுமார் ஆகியோருக்கு, கல்கி நிறுவன சேர்மன் வைத்தியநாதன், அறக்கட்டளை அறங்காவலர் கோபாலன் ஆகியோர் சால்வை போர்த்தி, நினைவுப் பரிசளித்தனர்.



✱ அமரர் கல்கியின் அன்பர்கள்...

நிகழ்ச்சியின் இறுதியாக, 'பாரதி கண்ட ஆறு சமயம்' என்ற தலைப்பில் இசைப் பேருரை நிகழ்த்தினார் கௌசல்யா சிவகுமார்.

''பாரதி, கோயிலுக்குச் சென்று தரிசனத்தை முடித்துவிட்டுத் திரும்புகையில், வழியில் ஒரு முதியவர், தம் பேரனுக்கு ஆத்திச்சூடி சொல்லிக் கொடுக்கிறேன் என்று கொடுமைப்படுத்தியதைப் பார்த்தார். அந்த முதியவர் தலையில் நறுக்கென்று ஒரு குட்டு வைத்து, குழந்தைகளை இப்படிச் சித்ரவதை செய்யக்கூடாது என்று கண்டித்துவிட்டு, வீடு திரும்பிய கையோடு எழுதியதுதான் புதிய ஆத்திச் சூடி'' என்று பாரதியின் வாழ்க்கைச் சம்பவங்களையும், பாரதியார் எழுதிய நரபலி சிறுகதையையும் சொல்லி, தமது உரைக்குச் சுவைகூட்டினார் கௌசல்யா சிவகுமார். கணபதி வழிபாடு, சூரிய வழிபாடு, சைவ வழிபாடு, கண்ணன் வழிபாடு, முருகன் வழிபாடு மற்றும் சக்தி வழிபாடு... என்று பாரதியின் ஆறுவிதமான வழிபாடுகளையும் விரிவாகக் குறிப்பிட்டதுடன், ஒவ்வொன்றுக்கும் அவரது பாடல்கள் சிலவற்றைப் பாடி மனசுக்கு இதமாக நிறைவு செய்தார்.

– எஸ். சந்திரமௌலி

படங்கள்: ஸ்ரீஹரி



சதம் கண்ட சர்மாஜி!

ஆன்மிகம் மற்றும் அகராதி துறையில் அளப்பரிய சாதனைகளை நிகழ்த்திய நிறுவனம் - 'லிப்கோ'. அதன் நிறுவனர் ஸ்ரீ வரதாச்சாரி கிருஷ்ணசாமி சர்மாவுக்கு இது நூற்றாண்டு வருடம். லிப்கோ சர்மாஜி தமிழகத்தில் பதிப்பு துறையில், லிப்கோவை விதைத்து எண்ணற்ற நூல்களை அறுவடை செய்த அறிவு விவசாயி. தென் ஆற்காடு மாவட்டம் மேட்டுப்பாளையம் கிராமத்தில் டிசம்பர் ஏழு 1908ல் பிறந்த சர்மாஜி ஆசார சீலராயும், அதே நேரம் வேறுபாடின்றி மனித குலத்தை நேசித்த நிஜ மனிதனாயும் இருந்தார்.

கடலூர் செயிண்ட் ஜோஸப் உயர் நிலைப் பள்ளியில் படித்த சர்மாஜி, அப்பள்ளி முதல்வர் ரெவரண்ட் ஃபாதர் வெர்ஜர் என்ற கத்தோலிக்க பாதிரியார் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்தார். புதிதாகத் தொழில் தொடங்க அவரைச் சந்தித்தபோது, அப்பாதிரியார் சூட்டிய பெயர்தான் லிப்கோ.

வியாபாரத்துக்காக எண்ணற்ற ஆன்மிக நூல்களைப் பதிப்பித்தபோது, இந்தியா முழுதும் தமிழ் தெரிந்தோரெல்லாம் இலவசமாய்ப் படிக்க, அயோத்யா காண்டத்து நூறாவது ஸர்க்கத்தை அச்சடித்து விநியோகித்தார்.

முதன்முதலாக நூல் வெளியீட்டுக்கென ஒரு பொது நிகழ்ச்சி நடத்தி நூலை வெளியிட்டவரும் லிப்கோ சர்மாஜிதான். 1953-ல் ரகுவம்ச மஹா காவ்யம் வெளியிடப்பட்டது. முதன்முதலாக கிராமம் கிராமமாகப் பிரத்யேகமாக மோட்டார் வாகனங்களில் புத்தகங்களை எடுத்துச் சென்று விற்றதும் லிப்கோதான்.

தபால் துறை தொடர்பான நூலைப் பதிப்பித்தபோது, சென்னையிலுள்ள 137 போஸ்ட்மாஸ்டர்களை அழைத்து விருந்தளித்து நூலை வெளியிட்டார் சர்மாஜி.

வைணவத் திருப்பணியில் சடாரிகளை நன்கொடையாக அளித்த சர்மாஜி, எதையும் இப்போதே செய் (Do it now) என்ற வாசகத்தை, தன் அறையில் பலரின் பார்வைக்கு எழுதி வைத்திருப்பார். கடன் வாங்குவதை வெறுத்து அதை அழுக்கு (Dirt) என்று குறிப்பிட்ட சர்மாஜி, முப்பதாண்டுகளுக்கு முன்பே தனது இரு கண்களைத் தானம் செய்து, இரு ஜீவன்கள் பார்வை பயனடைய வைத்த ஆத்மா.

பதிப்புத் துறையில் தமிழகத்தில் அஞ்ஞான இருள்நீங்கி நூல் வெளிச்சம் பரவக் காரணமானது லிப்கோ. அளப்பரிய சாதனைகளைச் செய்த இந்த அருமையான நிறுவனத்தின் அரிய மனிதனின் பெருமையை நினைவு கூர்தல் பெருமகிழ்ச்சிதானே?

– ஸ்வேதன்

அரசு தலைமை மருத்துவமனை. பிரேதக் கிடங்கு அறை. கேட்பாரற்ற அனாதைச் சடலம் வெள்ளைத் துணி கொண்டு சுற்றி வைக்கப்பட்டுள்ளது. கால் டாக்ஸி வந்து நிற்கிறது. ஆறேழு பெண்கள் இறங்குகிறார்கள். அனாதைச் சடலம் கிடத்தி வைக்கப்பட்டிருக்கும் இரும்புப்பலகையை ஆளுக்கொரு கை போட்டுத் தூக்குகிறார்கள். தோளில் சுமந்து அமரர் ஊர்தியின் உள்ளே இருத்துகிறார்கள். மயானம் நோக்கிக் கிளம்புகிறது அமரர் ஊர்தி. ஊர்தியினைப் பின் தொடர்ந்து செல்கின்றனர் அந்தப் பெண்கள்.

''யார் நீங்கள்?'' கேட்டால்,

''தோழர் அறக்கட்டளையைச் சார்ந்த தோழியர்'' என்கிறார்கள்.

கோவை, பூ மார்க்கெட் பகுதியில் இயங்கிவருகிறது தோழர் அறக்கட்டளை. அதன் பொறுப்பாளர் சாந்தகுமார், ''ரத்ததானம் செய்ய நானும் என் நண்பர்களும் அடிக்கடி ஜி.ஹெச். சென்று வந்தோம். அப்போது பிரேதக் கிடங்கு அறையிலிருந்து தாங்க முடியாத அளவுக்கு துர்வாடை வீசிக் கொண்டிருக்கும். என்னவென்று விசாரித்தால் போஸ்ட் மார்ட்டத்துக்குப் பின்னர் உறவினர்கள் வந்து பெற்றுக்கொள்ளாத சடலங்கள், அனாதைப் பிணங்கள், இறந்துபோன எய்ட்ஸ் உடல்கள் என சேர்ந்து போய்விடுமாம். நாளாக நாளாக, ஈக்கள் மொய்த்து, எறும்புகள் கடித்து, புழுக்கள் வைத்து துர்வாடை எடுக்கத் துவங்கிவிடும். சென்று பார்த்த எங்களுக்குப் பேரதிர்ச்சி. அன்று உருவானது தோழர் அறக்கட்டளை. முறைப்படி காவல்துறை அனுமதியுடன், அனாதைச் சடலங்களைத் தோளில் சுமந்து நல்லடக்கம் செய்கின்ற பணியினை மேற்கொண்டோம். இதில் இப்ராகிம், ஜீவானந்தம், அண்ணாதுரை, சம்பத்குமார் ஆகியோர் பங்கு மகத்தானது. எங்களின் இச்சேவையில் பின்னாளில் வந்து இணைந்து கொண்டவர்கள் என் மனைவி லதா மற்றும் அவரது தோழியர்!'' என்கிறார்.

தோழர் அறக்கட்டளை மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் நானூற்றி எழுபது உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. சமீபத்திய இரண்டு ஆண்டுகளாக, இச் சேவையில் பெண்களும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். ''பிறந்து ஒரே நாளான பத்து குழந்தைகளின் உடல்களை இதுவரை நல்லடக்கம் செய்திருக்கிறோம். அதில் பெண் குழந்தைகள்தான் அதிகம். ஒரு சமயம் ஒரே நாளில் பதினான்கு உடல்களை நல்லடக்கம் செய்தோம். வந்து பெற்றுக் கொள்ள மறுத்தும், வாங்க உறவுகள்



* அமைதியான அடக்கம்...



தோள் கொடுக்கும் தோழியர்!



✱ லதா சாந்தகுமார்

இல்லாததுமான சடலங்கள். அன்று இரவு எங்கள் குழுவினர்க்குத் தூக்கமே வரவில்லை. அந்தளவு கனத்துப் போய்க் கிடந்தது எங்கள் மனசு!'' எனக் கூறுகின்றனர் கல்லூரி மாணவிகளான சங்கீதா, அன்பரசி.

அனாதைப் பிணங்கள்தானே என்று, அலட்சியமாய் அடக்கம் செய்வதில்லை. மாலை, காடாத்துணி, பன்னீர், யூகலிப்டஸ் ஆயில், மலரஞ்சலி போன்றவற்றுடனே ஒவ்வொரு உடலும் அடக்கம் செய்யப்படுகிறது. இதுவரை அடக்கம் செய்யப்பட்டுள்ள உடல்களுக்கான குறிப்புகளை ஆவணமாகப் பதிவு செய்து வைத்துள்ளது தோழர் அறக்கட்டளை.

''என் கணவரும் அவரது நண்பர்களும் இதுபோன்ற பணியினை மேற்கொண்ட ஆறேழு மாதங்கள் கழித்தே எனக்குத் தெரியவந்தது. நானும், வித்யா என்பவரும் கோவையில் தனித்தனியே பியூட்டிஷன் சென்டர் நடத்தி வருகிறோம். நாங்கள் இருவரும் கலந்தாலோசித்தோம். காடுவரை பெண்கள் எனப் புதுமை படைக்க முடிவெடுத்தோம். என்னுடன் வித்யா, பூங்கொடி, இந்திரா, ராஜாத்தி, புஷ்பவள்ளி, பெனாசீர், சங்கீதா, அன்பரசி, ஹசீனா பேகம் ஆகியோர் தோள் கொடுக்கத் துணை வந்தனர். இதில் ஹசீனா பேகம் பத்தாம் வகுப்பு மாணவி. எந்தவொரு நிமிடத்திலும் ஒரு ஃபோன் செய்தால் போதும்; குறைந்தது எங்களில் ஆறேழு நபர்கள் எப்படியும் அடுத்த அரை மணி நேரத்துக்குள் கோவை ஜி.ஹெச். வந்து சேர்ந்துவிடுவோம். தோழர் அறக்கட்டளையின் தோழியர் நாங்கள் கடந்த இரண்டு வருடங்களாக அனாதைச் சடலங்களை நல்லடக்கம் செய்ய, தொடர்ந்து தோள் கொடுத்து வருகிறோம்!'' என்கிறார் லதா சாந்தகுமார்.

– ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

மேஷம்: புதிய வீடு/மனை வாங்கும் யோகம் வந்துசேரும். கல்விவளம் மேலோங்கும். இல்லற வாழ்வு நன்றாக இருக்கும். குழந்தைகளால் மனமகிழ்ச்சி ஏற்படும். பூர்வீகச் சொத்து வந்துசேரும். பணக்கஷ்டம் இருக்காது. வராத நிலுவைகள் வந்துசேரும். ராகு/கேது/சனி வழிபாடு செய்துவர நற்பலன் அதிகரிக்கும்.

ரிஷபம்: தெய்வ அனுகூலம் சித்திக்கும். புண்ணியஸ்தலம் செல்வீர்கள். உடல்நிலை சீராகும். கடன் சுமை அதிகரிக் கும். திருமணத் தடை விலகும். வீடு மாற்றம், உத்தியோகத்தில் இடப்பெயர்ச்சி ஏற்படும். குரு/சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

மிதுனம்: சுபநிகழ்ச்சி கைகூடி வரும். யாரிடமும் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும். வாகனங்களில் செல்லும்போது கவனம் தேவை. உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். உடல்நிலையில் கவனம் தேவை. ராகு/கேது வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

கடகம்: குடும்ப வாழ்வில் ரொம்பவும் அனுசரணையுடன் போவது நற்பலனை அளிக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். வழக்கு தாமதம் ஆகும். பணத்தேவைகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் மந்தமான சூழ்நிலை காணப்படும். குரு/சனி வழிபாடு செய்துவர சங்கடங்கள் தீரும்.

சிம்மம்: கடன் தொல்லை தீரும். திருமணப் பேச்சுவார்த்தை பலிதமாகும். வாகன சுகம் கிட்டும். வெளிநாடு செல்லும் யோகம் வந்துசேரும். வியாபாரத்தில் நல்ல



நடக்குமென்பார்; நடக்கும்!

14.12.08 முதல் 20.12.08 வரை

முன்னேற்றம் காணப்படும். வீடு/மனை வாங்க உகந்த காலம். சனி வழிபாடு செய்து வர நற்பலன் உண்டாகும்.

கன்னி: வீடு மாற்றம், தொழில் மாற்றம் உண்டாகும். வைத்திய செலவு அதிகரிக்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். அனாவசியமான செலவுகள் வந்து சேரும். தொழில் துறையில் சற்று, மந்தமான சூழ்நிலை ஏற்படும். சனி/குரு/ராகு/கேது வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

துலாம்: வியாபாரத்தில் அபரிமிதமான லாபம் கிட்டும். புதிய தொழில் முயற்சி பலிதமாகும். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். செலவுகள் சுபமானதாக இருக்கும். நீண்டகால பிரச்னை முடிவுக்கு வரும். குழந்தைகளால் மன மகிழ்ச்சி கிட்டும். ராகு/கேது/குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

விருச்சிகம்: மன மகிழ்ச்சி அதிகரிக்கும். தெய்வ அனுகூலம் ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். செலவுகள் நல்ல வழியில் ஏற்படும். குடும்பத்தில் சுபகாரியம் கைகூடும். சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

தனுசு: எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது. இல்லற வாழ்வில் விட்டுக்கொடுத்துப் போவது நன்மை அளிக்கும். படிப்பில் அதிக கவனம் செலுத்தவும். கொடுக்கல், வாங்கலில் உஷார். ராகு/கேது/குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.



மகரம்: குடும்பவாழ்வில் விட்டுக் கொடுத்து அனுசரணையுடன் நடந்து கொள்வது நற்பலனைத் தரும். வேலைப் பளு அதிகரிக்கும். வியாபாரத்தில் சற்று மந்தமான சூழ்நிலை காணப்படும். உடல் நிலையில் கவனம் செலுத்தவும். ராகு/கேது/ சனி/ குரு வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

கும்பம்: எதிர்ப்புகள் விலகி, தொழில் முன்னேற்றம் உண்டாகும். வேலையில் நற்பெயர் உண்டாகும். வியாபாரத்தில் நல்ல ஆதாயம் கிட்டும். மகப்பேறு பாக்கியம் உண்டாகும். வீடு/மனை வாங்க உகந்த நேரம். எதிர்பாராத செலவினங்கள் உண்டாகும். சனி வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

மீனம்: கூட்டாளிகளை விட்டு விலக நேரிடும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். திருமண முயற்சி பலிதமாகும். கடன் தொல்லை தீரும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வரும். குழந்தைகள் இடம் மாறிப் போவார்கள். ராகு/கேது/குரு வழிபாடு செய்துவர நற்பலன் உண்டாகும்.

அம்பாளை அக்ஷர ரூபமாக (எழுத்துக்களின் வடிவமாக) வழிபடுவது உண்டு.

விசுத்தி சக்கரத்தில் பதினாறு தள தாமரையில் அவள் இருக்கிறாள் என்றும், அ தொடங்கி பதினாறு எழுத்துக்களை அந்தத் தளங்கள் குறிக்கின்றன என்றும் பார்த்தோம். பதினாறு எழுத்துக்கள் குறிக்கும் பதினாறு தேவதைகள் புடைசூழ டாகினி என்ற பெயருடன் அம்பாள் இருக்கிறாள். இந்த எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்கள் அல்ல. அ வில் ஆரம்பித்து க்ஷ வரையிலான வடமொழி எழுத்துக்கள். இவற்றை அக்ஷரங்கள் என்று சொல்வார்கள். இந்த வடமொழி அக்ஷரங்களுள் உயிர் எழுத்துக்கள் மட்டுமே பதினாறு. இந்த உயிர் எழுத்துக்கள் பதினாறைத்தான் விசுத்தி சக்கர தேவதைகளுக்குக் குறியீடாகச் சொல்லியிருக்கிறது.

அனாஹதம்

அடுத்த சக்கரமாக, விசுத்தியிலிருந்து கீழ்நோக்கி, அனாஹத சக்கரத்துக்குச் செல்கிறது ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம்:

அனாஹதாப்ஜநிலையா - அனாஹத சக்கரத்தில் இருக்கக்கூடிய தாமரை வடிவினள்.

ஷ்யாமாபா - இவள் ஷ்யாமள வர்ணமாக - நீல வர்ணமாக இருக்கிறாள்.

வதனத்வயா - இரண்டு முகங்கள் படைத்தவளாகத் திகழ்கிறாள்.

அது மட்டுமல்ல, அந்த முகங்களின் இரண்டு பக்கங்களிலேயும் நீண்ட கோரைப் பற்கள் இருக்கின்றன. **தம்ஷ்ட்ரோஜ் ஜ்வலா**- (தம்ஷ்ட்ரம் - நீண்ட பற்கள். ஜ்வலா - பிரகாசம்) அந்தப் பற்கள் பிரகாசிக்கின்றன.

அக்ஷமாலாதிதரா - கையிலே ஆயுதத்துக்குப் பதிலாக அக்ஷமாலையை ஏந்தியிருக்கிறாள்.

ருதிரஸம்ஸ்திதா - விசுத்தியில் அம்பாள் தோலுக்கு அதி தேவதையாக இருப்பது போல, இங்கே, அனாஹதத்தில் ருதிரம் என்கிற, தோலுக்குக் கீழே இருக்கக்கூடிய திசுக்களுக்கு அதி தேவதையாக இருக்கிறாள். தசைக்கும் தோலுக்கும் இடையே இருக்கக்கூடியது ருதிரம்.

இதற்கடுத்த திருநாமத்தை விட்டு விட்டுக் கொஞ்சம் முன்னே போவோம்.

அங்கே பாயஸான்னப்ரியாவாக இருந்தவள், இங்கே **ஸ்நிக்தௌதன ப்ரியா**வாக இருக்கிறாள். ஸ்நிக்னம் என்றால் இறுகிப் பிடித்துக்கொள்ளும் தன்மை. இந்தத் தன்மையைக் கொண்ட நெய்யைக் குறிக்கிறது இப்பெயர். நெய்யால் செய்த அன்னத்தை விரும்பி ஏற்பவள் **ஸ்நிக்தௌதனப்ரியா**

மஹா வீரேந்திர வரதா - மஹா வீரர்களான குபேரனுக்கும் பிரஹலாதனுக்கும்

ஸ்ரீ சக்கர சிம்ஹாசனேசுவரி

ஸ்ரீ லலிதா மூன்றாம் பாகம் 13 சுதா சேஷய்யன்


ஸ்ரீ வாராஹி அம்மன்
தஞ்சாவூர்

வரங்களை அருளியவள். குபேரனுக்கு மஹாவீரன் என்று ஒரு பெயர் உண்டு; பிரஹலாதனுக்கும் அப்பெயர் உண்டு. பல்லாயிரம் ஆண்டுகள் இவர்கள் அம்பாள் உபாஸகர்களாக இருந்திருக்கிறார்கள். **மஹாவீரேந்திர வரதா** என்றால் இந்த இருவருக்கும் மட்டுமே அருள்வாள் என்பது அல்ல பொருள். அம்பாள் உபாஸகர்கள் எல்லோருக்கும் அருள்புரிகிறாள். யாரெல்லாம் தூய பக்தியோடு அம்பாள் உபாஸனை செய்கிறார்களோ, அவர்களெல்லாம் மஹா வீரர்கள்.

முதலில் விசுக்தி சக்கரத்தில் அவள் பகலோக பயங்கரியாக இருக்கிறாள். அப்புறம் அந்த பயம் போய் பக்தி மேலிடுகிறபோது அனாஹத சக்கரத்தில் மஹாவீரேந்திர வரதாவாக - விரும்பும் வரங்களைக் தருபவளாகி விடுகிறாள்!

ராகிண்யம்பா ஸ்வரூபிணி - அங்கே (விசுக்தி) அவளுக்கு டாகினி என்று பெயர். இங்கே ராகிணி. இவள் அமர்ந்திருக்கும் தாமரைக்கு எத்தனை தளங்கள்?

இங்கே பன்னிரண்டு தளம் கொண்ட தாமரை. இந்தப் பன்னிரண்டு தளங்கள் எந்த அக்ஷரங்களைக் குறிக்கின்றன என்று பார்த்தால் - **காலராத்ர்யாதி சக்த்யௌக வ்ரதா** - 'க'வில் ஆரம்பிக்க வேண்டும். க என்ற அக்ஷரத்துக்குரிய தேவதை காலராத்ரி. இந்தக் காலராத்ரி தொடங்கி பன்னிரண்டு பேர் புடைசூழ இருப்பவள் ராகிணி அம்பா. தேவனாகிரியில் இந்தப் பன்னிரண்டு எழுத்துக்கள் 'க'வில் நான்கு வித ஒலிகளைக் குறிக்கும் எழுத்துக்கள்; 'ங'; 'ச'வில் நான்குவித ஒலிகளைக் குறிக்கும் எழுத்துக்கள்; 'ஞ' - ஆக பத்து. இவற்றோடு 'ட'வில் நான்கு வித ஒலிகளைக் குறிக்கும் எழுத்துக்களுள் முதல் இரண்டு மட்டும் சேர, மொத்தம் பன்னிரண்டு.

மணிபூரகம்

அடுத்ததாக இருக்கிற சக்கரம் அப்படியே இறங்கி மணிபூரகம். - **மணிபூராப்ஜ நிலையா. வதன த்ரய ஸம்யுதா** - மூன்று முகங்களைக் கொண்டவள்.

கையில் என்ன மாதிரி ஆயுதம் என்றால், **வஜ்ராதிகாயுதோபேதா** - வஜ்ராயுதம் தரித்தவளாகக் காணப்படுகிறாள்.



நிறம் என்ன? **ரக்த வர்ணா**. இவளுடைய நிறமும் சிவப்பு. **மாம்ஸ நிஷ்டா**- 'த்வக்' என்கிற தோலுக்கு அதிதேவதை, அதன் பிறகு 'ருதிரம்' என்று தோலுக்குக் கீழேயுள்ள திசுவுக்கு அதி தேவதை. அதையடுத்து மாமிசம் - தசைகளுக்கு அதி தேவதையாக விளங்குபவள் **மாம்ஸ நிஷ்டா**.

குடான்ன ப்ரீத மானஸா - வெல்லம் கலந்த அன்னம் இவளுக்குப் பிரியமானது. ரொம்ப விஞ்ஞானபூர்வமான விஷயம் இது. வெல்லத்திலிருந்து கிடைக்கக்கூடிய சர்க்கரைச் சத்துதான் ரொம்ப சுலபமாக தசைகளுக்கான சத்தாக(கிளைகோஜன்) உருமாற்றம் பெறும். ஆகவே, மாம்ஸ நிஷ்டாவாக, தசைகளின் அதிதேவதையாகத் திகழ்பவள் குடான்னத்தை (வெல்லம் கலந்த சாதத்தை) விரும்பி ஏற்கிறாள்!

சமஸ்த பக்த சுகதா - அனைத்து பக்தர்களுக்கும் சுகத்தை, வரங்களைத் தரக் கூடியவள். இதற்கு முந்தைய சுவாதிஷ்டான தேவதை, மஹா வீரேந்திர வரதாவாக இருப்பதைப் பார்த்தோம். அவள், ப்ரீதியோடு தன்னை உபாஸிப்பவர்களுக்கு வரம் அருள்கிறாள் என்றால், இவள் உபாஸகர்களாக இல்லாதவர்களுக்கும் அருளக் கூடியவள். நித்ய உபாஸகர்களாக இல்லாமல், என்றைக்கேனும் ஒருநாள் 'அம்மா!' என்று சொன்னாலே போதும், அப்படிச் சொல்லக் கூடியவர்களுக்கும் சுகத்தை அள்ளித் தரக்கூடியவள். அவளுக்கு என்ன பெயர்...?

லாகின்யம்பா ஸ்வரூபிணீ - லாகினி என்று பெயர். அவளைச் சுற்றி யார் இருக்கிறார்கள் என்றால், இங்கேயும் அக்ஷரங்கள் - பத்து அக்ஷரங்களுக்குரிய தேவதைகள் புடைசூழ பத்து தள தாமரையில் லாகினி வீற்றிருக்கிறாள்.

பத்து தள தாமரையில் யாரெல்லாம் இருக்கிறார்கள்? வடமொழியின் மூன்றாவது 'ட' என்கிற எழுத்தில் ஆரம்பித்து, பத்து அக்ஷரங்கள்: **டாமர்யாதி ஸ்வரூபிணி**. பத்து அக்ஷரங்கள் யாவை என்றால், இரண்டு 'ட'; 'ண'; 'த' வர்க்கத்து நான்கு எழுத்துக்கள், 'ந';'ப' வர்க்கத்தின் முதல் இரண்டு எழுத்துக்கள். ஆக மொத்தம் பத்து.

'டாமரி' என்று 'டா' அக்ஷரத்துக்குரிய தேவதையில் தொடங்கி 'ப' வர்க்கத்து இரு அக்ஷரங்களுக்குரிய தேவதைகள் வரையில், பத்து தேவதைகளால் சூழப்பட்டிருக்கிறாள் லாகினி.

ஸ்வாதிஷ்டானம்

அடுத்த சக்கரம் ஸ்வாதிஷ்டானம். நான்கு முகங்களுடைய தேவதையாக இங்கே அம்பாள் பிரகாசிக்கிறாள்.

ஸ்வாதிஷ்டானாம்புஜகதா, சதுர்வக்த்ரா மனோஹரா என்று அடுத்தடுத்து இரு திருநாமங்கள் வருகின்றன. ஸ்வாதிஷ்டான சக்கர ஸ்தானத்தில் உள்ள தாமரையில் வீற்றிருப்பவள், நான்கு திருமுகங்களை உடையவள். இவளுக்குரிய இதர அம்சங்கள் என்ன... தொடர்ந்து பார்ப்போம்.

என்றைக்கேனும் ஒரு நாள் 'அம்மா!' என்று சொன்னாலே போதும், அப்படிச் சொல்லக் கூடியவர்களுக்கும் சுகத்தை அள்ளித் தரக்கூடியவள்.

(வளரும்)



இப்படிக்கு

இசை விழா சீஸன் ஆரம்பித்துவிட்டால், வித்வான்கள் பிஸியாகிவிடுவார்கள். ஆனால், அதற்குச் சில நாட்கள் முன்னதாகவே பிஸியாகிவிடுவார் ரமணி. சென்னை நகரத்தின் பிரபல சபாக்கள் பலவற்றிலும் இசை விழாவின்போது மேடைகளை, கலை நயத்துடன் அலங்கரிப்பவர் ரமணிதான். கடந்த இருபதாண்டுகளாக மேடையலங்காரம் செய்யும் ரமணியைச் சந்தித்தோம்...



* ரமணியின்...




...கைவண்ணத்தில்...



... மேடைகள்...

"கலாமந்திர் ஏற்பாடு செய்த நாட்டிய விழாமேடைதான் எனக்கு முதல் இசைவிழா அனுபவம். இன்று மிகப் பிரபலமாக விளங்கும் ஸ்ரீநிதி கார்த்திக் சிதம்பரம், ஊர்மிளா சத்தியநாராயணா, சுஜாதா ஸ்ரீனிவாசன், பிரியதர்ஷிணி கோவிந்த்... போன்றவர்கள் அப்போது இளையதலைமுறை டான்ஸர்கள். விநாயகர், சிவன், முருகன்... என்று தீமாடிக் பாடல்கள் கொண்ட டான்ஸ் ஃபெஸ்டிவல் நடக்கும். அதுவரை, நடன நிகழ்ச்சி என்றால், மேடையில் நீலவண்ண பின்னணிப் படுதாவில், சபாவின் பெயர் எழுதிய பேனர் தொங்கும்; அவ்வளவுதான். நான் புதுமையாக யோசித்து, மேடையில் ஒரு பக்கம், முன்னணியில் அந்தந்த நிகழ்ச்சிக்குரிய கடவுள் பொம்மைகள்; இன்னொரு பக்கம் பின்னணியில் பிள்ளையார் என்றால் குடை, முருகன் என்றால் காவடி, சிவன் என்றால் லிங்கம் என குறியீடாக ஓவியங்கள் தீட்டி நிறுத்தினேன். பார்வையாளர்கள் மத்தியில் அந்த மேடை அமைப்புக்கு ஒரே பாராட்டு!" என்று மலரும் நினைவுக்குள் ஆழ்ந்தார்.

மேடை!



● ரமணி

''கிருஷ்ண கான சபாவில் நாட்டிய விழாவின்போது என்னை அழைத்து மேடை அலங்காரம் செய்யச் சொன்னார்கள். அது பெரும் சவாலாக இருந்தது. அப்போது அந்த அரங்கம் ஒரு கீற்றுக் கொட்டகை. மேடையில் சவுக்குக் கழிகளும், கீற்றும்தான் இருக்கும். அந்தச் சூழலுக்கு ஏற்றபடி, அங்கே எப்படி மேடை அலங்காரம் செய்வது என்று யோசித்தேன். பாரிமுனைக்குப் போய், நிறைய சணலால் ஆன கித்தான் துணி வாங்கிக்கொண்டு வந்தேன். அதைப் பக்கவாட்டிலும், மேற்கூரைப் பகுதியிலும் பயன்படுத்தி, பின்பக்கத்திலிருந்து லைட்டிங் செய்தேன். முதல் நாளன்று மஞ்சள் நிற பரதநாட்டிய உடையணிந்து, 'சுவப்பன சுந்தரி' ஆடியபோது, அவரது நடனத்துடன், மேடை அலங்காரத்தையும் சேர்த்து எல்லோரும் புகழ்ந்தார்கள்.

டி.டி.வாசுவிடமிருந்து மியூஸிக் அகாடமி மேடையை அலங்கரிக்க அழைப்பு வந்தது. மேடையில் முழுக்க முழுக்க கோரைப் பாயைப் பயன்படுத்தினேன். 'சாதாரணப் பாயைப் பயன்படுத்தியா இப்படி ஓர் அலங்காரம் செய்திருக்கிறீர்கள்?' என்று ஆச்சரியப்பட்டுப் போனார்கள் ரசிகர்கள். மியூஸிக் அகாடமியின் பவழ விழா சமயத்தில், தங்கம் மற்றும் வெள்ளி நிறத்தில் மெல்லிய துணிகளைப் பயன்படுத்தி மேடை அலங்காரம் செய்தது வித்தியாசமான அனுபவம். இன்னோர் ஆண்டில் கறுப்பு - வெள்ளை என்ற கான்செப்டில் மேடையை அலங்கரித்தேன்.

ஒரு முறை மைலாப்பூர் மார்க்கெட் வழியாகச் சென்றபோது, அங்கே அடுக்கி வைக்கப்பட்டிருந்த வாழைப்பூக்களைப் பார்த்ததும், 'அடடா! இந்த வாழைப் பூக்களையே மேடையின் பக்கத் தூண்களில் கும்பமாக வைத்தால் நன்றாக இருக்குமே!' என்று தோன்றியது. ஒரு மேடையில் அதைச் செய்து பார்த்தபோது நல்ல ரிசல்ட் கிடைத்தது'' என்கிறார் ரமணி!

டெக்ஸ்டைல் டிசைனராக, தமது பணி வாழ்க்கையைத் தொடங்கிய ரமணி, கொலாஜ் என்னும் வகையிலான சித்திரங்களைப் படைப்பதில் வல்லவர். அவற்றில் கலைநயத்துடன் கருத்தாழமும் பாரம்பரிய தெறிப்புகளும் கலந்து உயிர்ப்பிக்கின்றன. எதிர்ப்புற கண்ணன் சித்திரம் போல!

- எஸ்.சந்திரமௌலி


''இந்தக் கோயில் பாடல் பெற்ற ஸ்தலம் தெரியுமா?''
''அப்படியா எந்தப் படத்துல வருது?''
- எஸ். ரவீந்திரன்
''தலைவரே... நீங்க இப்ப சொன்னது முற்றிலும் சரி. நூற்றுக்கு நூறு உண்மை தலைவரே...''
''நான் இப்ப எதுவுமே சொல்லலைய்யா... சும்மா கொட்டாவிதான் விட்டேன்.''
- எம். அசோக்ராஜா
''ஸார்! அவர் நவீன ஜோசியர்...''
''எப்படிச் சொல்றே?''
''கிளிக்குப் பதிலா வெட்டுக்கிளியை விட்டு சீட்டை எடுக்கறாரே...''
- அ. முருகானந்தம்

"தலைவருக்கு இதுதான் பிளேன்ல முதல் பயணமா...?"

"எதுக்குக் கேக்கற..?"

"சாப்பாட்டுக்கு மாமண்டூர்ல நிறுத்திடுவாங்களான்னு கேக்கறாரே...?"

- ஆனந்த் சீனிவாசன்





"கர்நாடகக் கச்சேரிக்குத் தலைமை தாங்க தலைவர் மறுத்துட்டாராமே... இசை மேல வெறுப்பா?"

"காவேரில தண்ணி விடாம அடம்பண்ற 'கர்நாடகக்காரங்களோட சங்கீதம் யாருக்கு வேணும்'ங்கிறார்."

- குவளை எழில்

ஐய்ய்யோ கர்நாடகம்!



"இந்தாங்க 500 ரூபாய் மாமூல். உங்க அம்மா மேல ஆக்ஷன் எடுங்க..."

"இன்னொரு 500 ரூபாய் கொடு. உங்க அம்மா மேலேயும் சேர்த்து ஆக்ஷன் எடுக்கறேன்..."

– போளூர் சி. ரகுபதி



இசைக் கலைஞர்களையும் ரசிகர்களையும் குதூகலப்படுத்தும் நிகழ்ச்சியாக ஜெயா டீ.வி.யில் ஒளிபரப்பாகும் 'மார்கழி மஹா உற்சவம்' நிகழ்ச்சி இருக்கிறது. இதன் வெற்றிக்குப் பின்புலமாக இருக்கும் சுபஸ்ரீ தணிகாசலத்திடம் பேசினோம்...

''2000 ஆம் ஆண்டு. சென்னையே இசை மழையில் மூழ்கிக் கொண்டிருக்கும்போது, எந்த ஒரு தொலைக்காட்சி சேனலுமே, இசை விழாவை ஒளிபரப்பவில்லையே என்று பல்லாயிரக்கணக்கான இசை ரசிகர்களைப் போலவே எனக்கும் ஏக்கமாக இருந்தது. பல தொலைக்காட்சி சேனல்களை அணுகினோம். ஒரு மணி நேரம் முழுக்க முழுக்க கர்நாடக இசைக் கச்சேரியா, யாருமே பார்க்க மாட்டாங்க. ஒன் ஹவர் ஏர் டைமிங் வீணா போயிடும் என்று ஒரே ஜெராக்ஸ் பதிலையே தந்தன. புதுமையை வரவேற்ற விஜய் டீ.வியில் முதன்முறையாக 2000 ஆம் ஆண்டு, இந்த நிகழ்ச்சியை நடத்தினோம். இந்த நிகழ்ச்சியில் பாட முடியுமா என கேட்டதற்கு, எல்லா இசைக் கலைஞர்களுமே உடனடியாக 'நிச்சயம் செய்யறோம்' என்று நம்பிக்கையை என்னுள் விதைத்தார்கள்.

2001லிருந்து ஜெயா டீ.வி.யில் 'மார்கழி மஹா உற்சவம்' களைகட்ட ஆரம்பித்துவிட்டது. ஜெயா டீ.வி 'கர்நாடக இசைக்காக என்ன வேணா செய்வோம். தாராளமா இந்த நிகழ்ச்சியை நடத்துங்க' என சொன்னது ஒரு பெரிய உற்சாக ஊற்றாக அமைந்தது. முதல் வருஷம் நாங்க மார்கழி மஹா உற்சவம் ஆரம்பித்தபொழுது, 70,80 வயது மதிக்கத்தக்க பெரியவர்கள்தான் இசைக் கச்சேரிகளைக் கேட்க வருவார்கள். இளம் தலைமுறையினர் யாருமே வராதது கவலையைத் தந்தது. ஆனால், இப்பொழுதெல்லாம் மார்கழி உற்சவத்தில் பல ஜீன்ஸ், சுரிதார்களும் இசையில் மிதப்பது சந்தோஷமாக இருக்கிறது.

அச்சுச் சிலைகளைப் போல எல்லா இசை விழாக்களுமே ஒரே பாணியில் நடந்து கொண்

குளிரிசை







டிருக்க, நாங்கள் புதுமையைப் புகுத்திப் பார்த்தோம்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தீம் எடுத்துக்கொண்டு அதன்படி இசைக் கலைஞர்களை கச்சேரி வழங்கச் சொல்லிக் கேட்டோம். இந்த 'தீமாடிக்' பாட்டுக்கள் இசை ரசிகர்களையும், கலைஞர்களையும் ரொம்பவே கவர்ந்துவிட்டன. ரசிகர்களின் பங்களிப்பைப் பிரதானப்படுத்தும் வகையில் அவர்களைக் கேள்வி கேட்க வைப்பதும், ஒவ்வொரு கச்சேரியிலும் கூடியிருக்கும் 1500 ரசிகர்களிடமிருந்து கேள்விகளை வாங்கிக்கொண்டு, அதில் சிறந்த மூன்று கேள்விகளைத் தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்குவதும் இசை ரசிகர்களிடேயே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது'' என்கிறார்.



சுபஸ்ரீ தணிகாசலம்

உற்சவம்!



'''மார்கழி மஹா உற்சவம்' கொடுத்த வெற்றிக் களிப்பில், இசை என்பதோ இசை விழா என்பதோ, நம் சென்னையோடு மட்டுமே நின்றுவிடக்கூடாது என்ற ஆவலில் 'க்ளீவ்லெண்ட் உற்சவம்' மற்றும் ஸிட்னியில் இசை நிகழ்ச்சிகள் மற்றும் இசைப் போட்டிகள் நடத்தி வருகிறோம். வெளிநாடு வாழ் மக்கள் நம் இசைக்குக் கொடுக்கும் மரியாதையையும், அதில் காட்டும் ஆர்வமும் என்னை ரொம்பவே வியக்க வைக்கின்றன.

சென்னையில் பார்க்கும் இடங்களிலெல்லாம் ஏகப்பட்ட சபாக்கள் முளைத்து விட்டன. இப்படி எக்கச்சக்க சபாக்கள் என்பதைவிட சில நிறுவனங்கள் சேர்ந்து ஒரு சபாவில் நல்ல தரமான இசையை வழங்கினால், இசை ரசிகர்களும் எங்கே போவது, எந்தக் கச்சேரியைக் கேட்பது எனக் குழம்பிப் போகாமல் இருப்பார்களே!'' என்கிறார் சுபஸ்ரீ.

- நளினி சம்பத்குமார்



“கிசுகிசு

மார்கழி என்றாலே இசை வெள்ளம் தான். வருடக்கணக்காக இசையைக் கற்று, சாதகம் செய்து, ரசிகர்களுக்கு முன் பாடி, அவர்களின் அப்ளாஸ்களை அள்ளுவது என்பது எளிதான விஷயமல்ல... எந்தக் கலைஞர்களுக்குமே! ஒரு கச்சேரி சோபிப்பது எதனால்? பாடக/பாடகியினாலா, பக்க வாத்திய அணியினாலா, தேர்வு செய்யும் அபூர்வ ராகங்களினாலா, கிருதிகளினாலா... என கேட்டுக்கொண்டே போகலாம்!

வளரும் இசைக் கலைஞர்களுக்கென, கச்சேரிக்கு முன் நினைவில்கொள்ள வேண்டிய சில டிப்ஸ்...

★ மாலையில் இசைக் கச்சேரி என்றால், காலையிலிருந்தோ முதல் நாளிலிருந்தோ பேசுவதை டோட்டலாக நிறுத்தி விடவும். டைட்டானிக் படப் பாடகி 'செலின் டியான்' தன்னுடைய ஷோ அன்று ஃபோனில் கூட பேசமாட்டாராம். ஸோ பேசாதீர்கள்.

★ தொண்டைக்கு 'வார்ம்-அப்' தேவை. லைட்டாகப் பேசவும். ஆனால் கிசுகிசு வென்று பேசக்கூடாது. இது குரலுக்கு ஆபத்து!

★ நன்றாக உறங்கி எழவும். தூக்கம், நீங்கள் அருமையான கச்சேரி பண்ண உதவும் மருந்து. ஆனால், சபாவில் ரசிகர்கள் தூங்காமல் இருக்கவேண்டும்.

★ ஸ்டேஜில் நுழையும்போதே, அமரும்போதே ஆடியன்ஸுடன் ஒரு காண்டாக்ட் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். முதல் பார்வையிலேயே அவர்களுக்குத் தோன்றவேண்டும் 'இன்னிக்கு கச்சேரி களைகட்டப் போறது'ன்னு!

★ போஸ்சர் மிக முக்கியம். எப்படி ஒரு விளையாட்டு வீரனுக்கு, முதுகு வளையாமல் விண்ணென்று இருக்க வேண்டுமோ, கலைஞனுக்கும் அது மிக முக்கியம். கூன்போட்டு உட்காரக் கூடாது. ஜம் மென்று நிமிர்ந்து உட்கார்ந்தாலே ஒரு கம்பீரம் வந்துவிடுமே... மேடைக்கு!

★ மேடையில் உட்கார்ந்திருக்கும் உங்களை ரசிகாஸ் உன்னிப்பாகக் கவனிக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளவும். கைநடுக்கம், புடைவையை பின் சரிசெய்வது, தலைமுடியில் பூவை சரி செய்து, செருமுவது... என எதுவும் பண்ணாதீர்கள். ரிலாக்ஸ்டாக அமருங்கள்.

★ நீங்கள் பாடும் பாட்டு, தெளிவாக இருக்கவேண்டும். உச்சரிப்பு சுத்தமாக இருக்கவேண்டும். வார்த்தைகளை விழுங்கக்கூடாது. கடைசி வரிசையில் இருப்பவருக்குக்கூட பளிரென்று புரியவேண்டும்.

★ உணர்ந்து பாடுவது மிக மிக முக்கியம். நீங்களே எழுதியது போல பாவத்துடன் பாட வேண்டும். மனப்பாடம் பண்ணி ஒப்பிப்பது போல் இருக்கக்கூடாது.

★ சரியான முகபாவம் தேவை. அஷ்ட

கோணலாக முகத்தை வைத்தால்தான் ஷட்ஜமம், காந்தாரத்தில் சஞ்சரிக்க முடியும்... என்றெல்லாம் வம்பு பண்ணக் கூடாது.

★ கண்ணை மூடிக்கொண்டு பாடாதீர்கள். ரசிகர்களைப் பார்த்து, அவர்கள் என்ஜாய் பண்ணுகிறார்களா என்பதை உணர்ந்து பாடவும்.

★ பாட்டில் மட்டுமல்ல; தோற்றத்திலும், ஒரு தனித்தன்மை கண்டிப்பாக வேண்டும். 'இது என் முத்திரை' எனச் சொல்லி விடுங்கள்.

★ டைனமிக்காக இருக்கவேண்டும். எல்லாவிதப் பாடல்களையும் பாடவும்.

★ பக்கவாத்தியக் கலைஞர்களை மதிக்கவும். உங்கள் கச்சேரி பரிமளிப்பது பெருமளவு அவர்கள் கையில்தான்!

★ கடைசியாக - கச்சேரி முடிந்தவுடன் தலைவணங்கி ஆடியன்ஸுக்கு நன்றி கூறுங்கள். அவர்கள்தான் உங்கள் கலை வாழ்க்கைக்குத் தீர்ப்பு எழுதப்போகும் பிரம்மாக்கள்!



ரிகர்ஸல் டிப்ஸ்

பேசாதீர்கள்!”

எது பண்ண வேண்டும் அதைப் பார்த்தோம். எது செய்யவே கூடாது... பார்ப்போமா?


★ கச்சேரியன்று அல்லது அந்த வாரமே ஆரஞ்சு ஜூஸ் குடிக்கக்கூடாது. தொண்டை கட்டிக்கொள்ளும். எந்தவித புளிப்பு பழரசங்களையும் அருந்தக் கூடாது.

★ ஹெவியாகச் சாப்பிடாதீர்கள். செரிமானத்துக்கு டயம் இல்லாமல் மேடையில் ஹெவி சங்கதிகளைப் பிடிக்க முடியாது.

★ புகை சூழ்நிலையில் இருக்காதீர்கள். வாய்ஸ் க்வாலிட்டி போய்விடும். தொண்டையை அடிக்கடி செருமக்கூடாது.

★ ஆஸ்பிரின் போட்டுக் கொள்ளாதீர்கள். வோக்கல் கார்டு ஹெமோரெஜ் ஆகலாம்.

- லதா சேகர்



அரசியல் சாசனம், மக்களுக்கு உறுதியளித்துள்ள அடிப்படை உரிமைகளுக்கு அடுத்தபடியாக வருவது 'கல்வி'. அனைவருக்கும் 'கல்வி' வசதி செய்து தர வேண்டியது அரசின் கடமையாகும். ஆனால் மக்கள் தொகை பெருகிவரும் வேகத்தில், மாறிவரும் காலச்சூழலில் கல்வித் துறைத் தேவைகளை அரசு மட்டுமே நிறைவேற்ற முடியாது. கல்வித் துறையில் நமது தேவைகளுக்கும், இப்போது இருக்கும் வசதிகளுக்கும் இடையில் நீண்ட இடைவெளி இருக்கிறது. நாடு முழுவதும் முந்நூறு பல்கலைக் கழகங்கள், ஐம்பதாயிரம் கல்லூரிகள், கிட்டத்தட்ட ஐந்து லட்சம், ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. ஆனால், நூற்றிருபது கோடியை நெருங்கும் நமது மக்கள் தொகையின் தேவைகளோ அதிகரித்து வருகின்றன.

கல்வித் துறை கொடுக்கும் வேலை வாய்ப்பு சுமார் ஒரு கோடி. இந்த எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும், சுமார் இரண்டு சதவிகிதம் உயர்ந்து வருகிறது. இந்தத் துறையில் கல்லூரி - பள்ளி ஆசிரியர்கள், நூலகர்கள், ஆராய்ச்சியாளர்கள் வழிகாட்டும் நிபுணர்கள், பயிற்சியாளர்கள், அலுவலகப் பணியாளர்கள் என படிக்காதவர்கள்... உட்பட பலருக்கு வேலைவாய்ப்பு காத்திருக்கிறது. ஒரு நாட்டின் அறிவுசார் பொருளாதாரம் என்பது கல்வித் துறையின் வளர்ச்சியைப் பொறுத்தது. மனநிலைப் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத்திறன் கொண்டவர்கள் ஆகியோருக்குச் சிறப்புப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன. அதற்கென தனிப் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள், அதிகாரிகள் தேவைப்படுகிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு தேவைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு செயல்பட்டு வருகின்றன மத்திய - மாநில அரசுகள். சுதந்திரம் பெற்ற காலகட்டத்தில் பள்ளிகள் அமைப்பதென்பது அரசின் சமூக கடமையாக இருந்தது. காமராஜர் போன்ற தலைவர்கள் இந்தத் துறையில் ஒரு பெரிய புரட்சியே செய்தார்கள். ஓர் ஊராட்சிக்கு ஒரு பள்ளி என்று திறக்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில் பள்ளிகள் திறந்த அளவுக்கு, ஆசிரியர் பணி இடங்கள் நிரப்புவதில் வேகம் காட்டப்படவில்லை. இதனால் கல்வியின் தரம் பாதிக்கப்பட்டது. தரத்தின் அடிப்படையில் மக்கள் தனியார் கல்விக் கூடங்களை நோக்கிப்



'மாஃபா' பாண்டியராஜன்

படையெடுக்கத் துவங்கினார். மக்களின் இந்தத் தேவையைச் சரியாகவே உணர்ந்தார் பச்சமுத்து. ஒரு விவசாயியின் மகனாகப் பிறந்த பச்சமுத்துவின் இளமைக்காலக் கனவே, ஓர் ஆசிரியராக வேண்டும் என்பதுதான். ஆசிரியராகப் பணிபுரிந்த பின் அவரது கனவு இன்னமும் விசாலமானது. தமது சொற்ப சேமிப்பை முதலீடாகக் கொண்டு, மேற்கு மாம்பலத்தில் ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் பெயரில் நர்சரி பள்ளியைத் துவக்கினார். கடின உழைப்பும் அர்ப்பணிப்பு உணர்வும் அவரைக் கைதூக்கி விட்டன. 1975 தமது தாய் வள்ளியம்மை பெயரில் அறக்கட்டளை



கை கொடுக்கும் காமதேனு!

8

ஆயிரத்தில் ஒருவன்



* பச்சமுத்து

துவக்கினார். நர்சரி பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக வளர்ந்தது. 1984ல் பாலி டெக்னிக் துவக்கப்பட்டது. அடுத்த வருடமே அப்பா ராமசாமி பெயரில் எஸ்.ஆர்.எம். பொறியியல் கல்லூரி துவக்கப்பட்டது. இப்போது பொறியியல், மருத்துவம், கலை, அறிவியல், தொழிற்கல்வி என்று அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கி இருக்கிறது எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம்.

இப்படி தனிநபர்கள் நமது நாட்டின் உயர் கல்வித் துறையின் தேவைகளை ஈடுகட்டுவதில், தங்கள் பங்களிப்பைச் செய்துவருவதால்தான், அரசின் சுமையும், பொறுப்பும் குறைகின்றன.

துவக்கப்பள்ளிக் கல்விக்காக மத்திய அரசு சர்வ சிக்ஷ அபியான் (அனைவருக்கும் கல்வி) என்ற மாபெரும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. 'செயல்வழிக் கல்வி' என்ற புதுவகைப் பயிற்சி, துவக்க நிலையில் புகுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்படி ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது. கணினியின் நுழைவு காரணமாகத் துவக்கம் முதல் உயர்கல்வி வரை, கல்வித் துறை ஒரு புதிய பரிமாணம் பெற்று வேலை வாய்ப்புகளும் பெருகி விட்டன. மின்னணு பயிற்றுமுறை (e-learning) மூலம், ஆசிரியரில்லா வகுப்பறைகள் உருவாக்கப்பட்டுவிட்டன. ஐ.ஐ.டி.களும்,

ஐ.ஐ.எம்.களும், மின்னணு பயிற்று முறையைக் கணிசமாக அமல்படுத்தி வருகின்றன. ஆனால், கல்வியில் தனியார் பங்களிப்பு பெருகும் நிலையில் கல்வி 'வியாபாரமாகி விட்டது' என்ற குரல்களும் ஓங்கி எழு கின்றன. எந்தத் துறையிலும், ஒரு கட்டுப் பாடற்ற நிலை உருவாகும்போது, மக்கள் நன்மைக்காக அரசு தலையிட வேண்டிய கட்டாயம் ஏற்படும். அதற்கு கல்வித் துறையும் விதிவிலக்கல்ல.

(வெளிச்சம் வீசும்)

எழுத்தாக்கம் : **ஸ்ரீநி**



பாண்டி'S BLOG

இந்தியாவில் தகவல் தொடர்பு மற்றும் மென் பொருள் தொழில்நுட்பத் துறையில், பணியாற்றுபவர்களில் பதினொரு சத விகிதம் பேர் தமிழகத்தில் இருக்கிறார்கள். தமிழகத்தின் இந்தப் பங்களிப்பை, 2011ல் இருபத்தைந்து சதவிகிதம் உயர்த்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு நிறைய மென்பொருள் நிறுவனங்களும், பி.பி.ஓ.க்களும் புதிதாக வந்தால் மட்டும் போதாது. வளர்ந்துவரும் தொழில்நுட்பத்துக்கு ஏற்ப, கல்லூரிகளிலிருந்து வரும் 'புதிய ரத்தங்கள்' தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டு வரவேண்டும். இதற்கு அவர்களுக்குத் தேவை, சர்வதேசத் தரத்துடனான, மிக லேட்டஸ்ட் பாடத்திட்டம். இவர்கள் வேலையில் சேரும்போது முதலில் நிறுவனங்களில், மூன்று அல்லது ஆறு மாதங்கள் பயிற்சி பெற வேண்டியிருக்கிறது. கணினி நிறுவனங்கள் இந்தக் கால கட்டத்தைத் தவிர்க்கவேண்டும் என்று திட்டம் வகுக்கின்றன.

இந்த நோக்கத்தில் உருவாக்கப்பட்டிருப்பதுதான் தகவல் தொழில்நுட்ப அகாதமி.



மத்திய மாநில அரசுகள், மென்பொருள் நிறுவனங்கள், இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் நாஸ்காம் ஆகியவை இணைந்து இந்த அகாதமியைத் துவக்கி இருக்கின்றன. இருபது கோடி ரூபாய் செலவில் துவக்கப்பட்டிருக்கும் இந்த அமைப்புக்கு, மூலதனமாகப் பத்து கோடி ரூபாய் மத்திய அரசு போட்டிருக்கிறது. இந்தத் துறையில் சர்வதேச அளவில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சியையும், பிரமிக்கும் வகையில் மாறிவரும் முன்னேற்றங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, பாடத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. முதல் கட்டமாக பொறியியல், கலை, விஞ்ஞானம், ஐ.டி.ஐ. பாலிடெக்னிக் ஆகியவற்றில் பணிபுரியும் 5000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது. இந்த ஆசிரியர்கள் 2011க்குள் இரண்டரை லட்சம் மாணவர்களைப் பயிற்றுவிப்பார்கள். இரண்டு, மூன்றாம் ரக நகரங்களில் உள்ளோரும் பயன்பெறத்தக்க வகையில் நேரடி வகுப்புகளும் நடத்தப்படும். இந்த அகாதமியின் நிர்வாகச் செலவை மென்பொருள் நிறுவனங்கள் ஏற்கும். மாணவர்களிடம் சகாயக் கட்டணம் வசூலிக்கப்படும்.

ஞானியைக் கேளுங்கள்

● மல்லிகா அன்பழகன், சென்னை.

எது டூ மச்...?

குசேலன் அவன் மனைவி சுசீலை - Two; இந்த twoக்குப் பிறந்த குழந்தைகள் toomuch.

● தீத்தாரப்பன், சிதம்பரம்.

வெள்ளித்திரைக்கும், உள்ளத் திரைக்கும் என்ன வித்தியாசம்...?

ஒளி வீச காட்சிகள் தெரியும் வெள்ளித் திரையில்; காட்சிகள் மறைய ஒளி வீசும் உள்ளத் திரையில்.

● என். சண்முகம், எம்.ஏ, திருவண்ணாமலை

பாவம் செய்துவிட்டுப் புண்ணியம் செய்யலாமா...? புண்ணியம் செய்துவிட்டுப் பாவம் செய்யலாமா...?

பாவம் ஸார், புண்ணியம். அதையேன் இந்த விளையாட்டுல இழுக்கறீங்க. பாவம் செய்துவிட்டுச் செய்வது பரிகாரம். புண்ணியம் செய்துவிட்டால், பிறகு நினைத்தாலும் பாவம் செய்ய முடியாது.



● டி.ஜே. தனபாலன், கோயம்புத்தூர்

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உங்களைப் பேச அழைத்தால் கூட்டம் கூடுமா...?

எக்கச்சக்கமாய்க் கூடும்; எதிர்க்கட்சிக்கு.

● சி.இந்து அழகேஷ், விழுப்புரம்

'எமனுக்கு' இரக்க சிந்தனையுள்ள 'தர்மன்' மகனாக எப்படி பிறந்தான்...?

ஸ்பெல்லிங் மிஸ்டேக். எமனின் 'இறக்க - சிந்தனையில்' உள்ள பெரிய 'ற'வை, சின்ன 'ர' என்று நினைத்து 'இரக்கச் சிந்தனையோடு' தர்மன் பிறந்துவிட்டான் போலும்.

கண்கள் எழுதும் காதல்
அர்த்தம் கண்டுபிடித்து

● ஸ்ரீலலிதா, நாகப்பட்டினம்

பூவுக்கும், சிரிப்'பூ'வுக்கும் என்ன ஒற்றுமை...?

இரண்டும் மலர இதழ்கள் தேவை. வழக்கமாக வித்தியாசம்தான் கேட்பார்கள். ஒற்றுமையைக் கேட்ட நீங்கள் வித்தியாசமானவர்தான்.

● கவிதா, திருவாரூர்

அலையும் மனத்தை அடக்குவது எப்படி...?

மனம் ஒரு திருடன். திருடன் கையில் சாவியைக் கொடுத்துவிடுங்கள். மனம் போன போக்கில் கீ கொடுத்த பொம்மையைப் போல அலைந்து களைத்து அடங்கி

தேர்தல் பிரசாரத்தில்

விடுவான். அப்பால சாவியோடு திருடனும் 'பூட்ட' கேஸ¬தான்.

● வெ. ராம்குமார்,வேலூர்

கையெழுத்துச் சுமாராக இருந்தால் தலையெழுத்துப் பிரமாதமாக இருக்கும் என்கிறார்களே...?

வழக்கமா கையெழுத்துப் பிரமாதமா இருந்தா தலையெழுத்து சுமாரா இருக்கும்னு சொல்வாங்க.

கையெழுத்துக்கும் சொல்லுவீர்களோ?

ஆனா, உங்க கையெழுத்துல, இது மாறி இருக்கு. பரவாயில்லை, பதில் சொல்லவேண்டியது என் தலையெழுத்து. எனக்குத் தெரிந்த ஒருவரின் கையெழுத்து, கோழி டிக்டேட் பண்ணி வான்கோழி நோட்ஸ் எடுத்தா மாதிரி, ஏக கிறுக்கலா இருக்கும். உங்க கேள்வியின்படி அந்தக் கோணல் கையெழுத்துக்கு, கம்பெனி ஜெனரல் மேனேஜரா இருக்கவேண்டிய அவர், முப்பது வருஷமா டைப்பிஸ்டா இருக்கார். ஒருவேளை தட்டெழுத்துக்காரராக அவர் இருப்பதால், Mr. தலையெழுத்துக்கு அவர் கையெழுத்து தெரியாமல் போய் விட்டதோ என்னவோ. இதுகூட தலையெழுத்துதான் பாவம். ஆனால், ஒன்று, தலையெழுத்து நன்றாக இருந்தால், கைநாட்டாக இருந்தாலும் ஆட்டோகிராஃப் போடும் அளவுக்கு அந்தஸ்து கிடைக்கும்.

● சுந்தர் ஷ்யாமா, பெங்களூர்

கனவைப் பற்றி ஒரு கவிதை

கிரேஸி?



கூறுங்களேன்...?

கனவே ஒரு கவிதைதான். கவிதைக்கு மட்டுமல்ல கனவுக்கும் பொய் அழகு. உறக்கம், கனவு, விழிப்பு இவை மூன்றுமே, 'நான்' என்ற உணர்வுத் திரையில் தோன்றி மறையும் அவஸ்தைகள் என்கிறார் பகவான் ரமண மகரிஷி... இனி கனவைப் பற்றி என் கவிதை.

'சொப்பனத்தில் கண்ட சொகுசான தூக்கமது
அப்படியே போச்சு அடரமணா! - அப்புறம்
எப்படியோ என்னை எவனோ எழுப்பினான்
இப்படித் தானா இறப்பு...?

●

வண்ணப்பட சௌம்யா!



• வண்ணப்பட சௌம்யா பேட்டி எப்போ?

✱ டி.எம். கிருஷ்ணாவும் அவர் மனைவி சங்கீதா சிவகுமாரும் கலாசார மறுமலர்ச்சி அறக்கட்டளை என்ற அமைப்பை நிறுவி, அதன் மூலமாக கோயில்களில் கர்நாடக சங்கீதக் கச்சேரிகள் நடத்த முற்பட்டிருக்கின்றனர். மரபு வழுவாத, உயர்தர கலை நிகழ்ச்சிகளை மீண்டும் கோயில்களில் அரங்கேறச் செய்ய, இந்த மார்கழியிலேயே ஏற்பாடாகியிருக்கிறது. டிசம்பர் 16 முதல் 21 வரை திரு அல்லிக்கேணி, பார்த்தசாரதி சுவாமி கோயிலில் அவை நடைபெறும்.

✱ வயலின் வித்வான் ஆர்.கே.ஸ்ரீராம் குமார், சங்கர நேத்ராலயாவில் பணியாற்றும் ஆப்டோமெட்ரிஸ்ட் அகிலாவை மணக்கிறார். திருமணம் பிப்ரவரி மாதம், சிருங்கேரியில்!

✱ இந்த ஆண்டு இசைப் பேரொளி, ஷண்முகசிரோன்மணி (மும்பை ஷண்முகாநந்தா வழங்குவது) ஆகிய பட்டங்களைப் பெறும் காயத்ரி வெங்கட்ராகவன், தமது இரு குழந்தைகள் பிறந்து ஓரளவு வளரும் வரை, ஆறு ஆண்டு காலம் பாடாமலே இருந்தார்!





✱ சௌம்யா

✱ ராகங்களின் ஜீவனை தமது குரலில் படம் பிடித்துக் காட்டும் சௌம்யா, காட்சிகளின் அழகுகளை காமெராவில் படம் பிடிப்பதிலும் வல்லவர்! எதிர்ப்பக்க அட்டையில் நீங்கள் காணும் படங்கள் சௌம்யா 'கிளிக்'கியவை!

✱ ஜெயா டீ.வி மார்கழி மகோத்ஸவத்தில் 'கல்யாண வைபோகமே' என்ற நிகழ்ச்சியின் இறுதியில் ரசிகர்களுக்குச் சுண்டல் வினியோகிக்கப் பட்டது! தினப்படி ஏற்பாடாக இதைக் கைக் கொள்ளலாமே என்று ரசிகர்கள் பேசிக்கொண்டார்கள்!

✱ M.S and Radha - A Saga of Steadfast Devotion என்ற ஆங்கில நூலை கௌரி ராம்நாராயணன் எழுத, சுஸ்வரலக்ஷ்மி ஃபவுண்டேஷன் பதிப்பித்திருக்கிறது. இந்தப் புத்தகத்தின் விலை: ரூ.708/-!



– ருஞ்ஜுன்



Registered with the Registrar of Newspaper of India under No.1041/57"Registered No.TN/CC(S)DN/144/06-08-Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka.